Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3175)

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 19 செவ்வாய்க்கிழமை (05.11.2013) பக்கங்கள் 20 ஓசை – 036

## வலி. வடக்கில் மீள்குடியேற்றம் வலியுறுத்தி கவனயீர்ப்பு போர்

(தெல்லிப்பழை)

வலி. வடக்குப் பிரதேசத்தில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளில் மக்களின் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தியும், அப்பகுதியில் இராணுவத்தினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் பொதுமக்களது குடியிருப்புகள் இடித்தழிக்கப்படுவதை நிறுத்தக் கோரியும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில முன்றலில் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக அகிம்சை வழி போராட்டங்களை நடத்தவுள்ளதாக வலி. வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி. வடக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மிகவும் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். அவர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவும் நிறுத்தப்பட்டுள்ளது. இந்தநிலையில் வலி. வடக்கு மீள்குடியேற்றம் தொடர்பான பல வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள நிலையில் அதனை மீறும் வகையில் இராணுவம் அப்பகுதிகளிலுள்ள மக்களது வீடுகளை இடித்தழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மீது சர்வதேச விசாரணை; கமலேஷ் சர்மா நிராகரிப்பு




இலங்கைப் போரின் இறுதி நிகழ்வுகள் குறித்து ஒரு நம்பகத் தன்மை மிக்க சர்வதேச விசாரணை தேவை என்று ஐ.நா. கூறியிருப்பது யதார்த்தத்துக்கு பொருந்தாத ஒரு விடயமென பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கமலேஷ் சரமா தெரிவித்துள்ளார். பி.பி.சி.க்கு அளித்த பேட்டியிலேயே அவர இவ்வாறு தெரிவித்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# கொழும்பில் தீர்மானம் எடுத்து வடக்கில் அறிவிக்கும் மாகாணசபை

### விசனம் கொள்ளும் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் அரியரத்தினம்



(தர்மபுரம்)

வடக்கு மாகாணசபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றி ஜனநாயக ரீதியாக நிர்வாகம் வந்தும்கூட ஒரு வேலையுமே இடம்பெறவில்லை. மாறாக பல செயல்கள் இரகசியமாகவே நடந்துகொண்டிருக்கின்றன. அத்துடன் வட மாகாண சபை பல விடயங்களை கொழும்பிலேயே இருந்து கொழும்பிலேயே கலந்துரையாடி அந்த முடிவுகளை இங்கு வந்து அறிவிக்கும் இடமாகத்தான் எங்களது மாகாண சபை மாறிக் கொண்டு செல்கிறது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்பாக போட்டியிட்டு வெற்றிபெற்ற மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் தர்மபுரம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

ஒருதடவையேனும் முள்ளிவாய்க்கால் மட்டும் போய் வந்தவனுக்குத்தான் எங்கள் மக்களின் நிலைமை புரியும்.

இவ்வளவு காலமாக எங்களை ஏமாற்றி வந்த அரச அதிகாரிகள் மீண்டும் மாகாண சபைககுள்ளே வந்து எங்களுக்கு பணிப்புரைகள் சொல்லப் போகின்றார்கள் என்பதுதான் தற்போது இருக்கின்ற முக்கியமான பிரச்சினை.

ஏனைய மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர்களை விட நாங்கள் கிளிநொச்சி மாவட்டத்திலேயே ஒரு சவாலை எதிர்கொண்டிருந்தோம். அதாவது இங்கிருந்த மாற்றுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் செய்த சேவைகள் எல்லாம். ஏனைய மாவட்டங்களை விட இந்த மாவட்டத்திலே மக்களால் பெரிதும் பேசப்பட்டு வந்த ஒரு நேரம். ஆகவே இந்த தேர்தலில் நாம் பெற்ற வெற்றி என்பது ஏனைய நான்கு மாவட்டங்களிலும் இல்லாத பெரும் சவாலின் மத்தியிலேயே ஈட்டிக் கொண்ட வெற்றி.

எங்கள் அனைவரிடமும் கேட்டார்கள் உங்களது சுயவிபரங்களை எழுதித் தரச் சொல்லி. நான் உட்பட திருவாளர் பசுபதிப்பிள்ளை உட்பட 25 பேரும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பனிச்சங்குள விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

(மாங்குளம்)

மாங்குளம் - பனிச்சங்குளம் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று, அதிக வேகத்தின் காரணமாக பாதையைவிட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த 33 வயதான முத்து ரெஜிதரன் என்ற இளைஞர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

பிரேதப் பரிசோதனைகள் நேற்று முன்தினம் இடம்பெற்றதுடன் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## மாநாட்டில் மன்மோகன் பங்கேற்க மேலும் இரண்டு அமைச்சர்கள் எதிர்ப்பு

(சென்னை)

எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்பதற்கு பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அன்ரனி மற்றும் அமைச்சர் ஜெயந்தி நடராஜன் ஆகியோர் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள பாதுகாப்பு அமைச்சர் அன்ரனி, உலகம் முழுவதும் உள்ள 9 கோடி தமிழர்களின் உணர்வுகளை மதிக்கும் வகையில், மத்திய அமைச்சரவை பாதுகாப்பு குழு, பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, டில்லி செல்வதற்காக சென்னை விமான நிலையம் வந்த ஜெயந்தி நடராஜன் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் பங்கேற்கவிருப்பதாக வந்துள்ள செய்திகள் குறித்து அவரிடம் செய்தியாளர்கள் கேட்டபோது,

பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் கலந்து கொள்வது பற்றி நல்ல முடிவு எடுப்பார். அவர் கலந்து கொள்ளக்கூடாது என்று தொடர்ந்து நான் வலியுறுத்தி வருகிறேன். கடிதம் மூலமாகவும் தெரிவித்துள்ளேன். தமிழ் மக்களின் உணர்வுகளை அறிந்து பிரதமர் நல்ல முடிவு எடுப்பார் என்றார்.

இசைப்பிரியா கொல்லப்பட்ட ஆவணப் படம் குறித்த கேள்விக்கு, ஆவணப்படத்தை ஊடகங்கள் மூலமும் பத்திரிகை மூலமும் அறிந்து கொண்டேன்.

(19) ஆம் பக்கம் பார்க்க

03



தண்ணீர்

08



அவதாரம்

11



தாய்மொழி

## சனல் - 4 காணொளி உண்மையெனில் சுதந்திரமான விசாரணை அவசியம்

### ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை மீது போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தி, ஒளிப்பரப்பட்ட சனல் - 4 தொலைக்காட்சியின் புதிய காணொளி உண்மையானது என்றால் மட்டும் அது பற்றி சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகரும் மேல் மாகாண அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி. கட்சி

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கின் வாழ்வாதார உதவிகள் குறித்து ஜப்பானிய தூதரக அதிகாரிகள் யாழ். அரச அதிபருடன் பேச்சு



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான ஜப்பானிய தூதரக அதிகாரிகள் குழுவினர் நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை சந்தித்து கலந்துரையாடினர்.

ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## அக்கராயன் ப.நோ.கூ.ச. வழங்கிய போசாக்குணவு பழுதடைந்த நிலையில்

### கர்ப்பிணித் தாய்மார்கள் அவலம்

(அக்கராயன்)

சமுர்த்தி திட்டத்தின் கீழ் அக்கராயன் பிரதேச வறியகுடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்பட்டுள்ள போசாக்கு முத்திரைக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள அனைத்து பொருட்களும் பழுதடைந்தவையென அக்கராயன் பிரதேச கர்ப்பிணித் தாய்மார்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, சமுர்த்திப் பயனாளிகளாக உள்ள குடும்பங்களில் உள்ள கர்ப்பிணித்

(19) ஆம் பக்கம் பார்க்க



பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் 51 ஆவது ஆண்டு விழாவையும், பரிசளிப்பு நிகழ்வையும், பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.தர்மராஜா மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், பிரதம விருந்தினரான வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் உரையாற்றுவதையும், அங்கு இடம்பெற்ற நாடகத்தின் ஒரு காட்சியினையும் காணலாம். (01)

# அழகாபுரிக்கு விரைவில் மின்சாரம்; முன்னாய்வு நடவடிக்கை ஆரம்பம்

## மாயவனூருக்கும் கிடைக்கும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளை, அழகாபுரி மற்றும் மாயவனூர் பிரதேசங்களுக்கான மின்சார விநியோக நடவடிக்கைகள் வகையில் நேற்று குறித்த பிர தேசங்களுக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்ட இலங்கை மின்சார சபையின் வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளர் குணசீலன் தலைமையிலான குழுவினர் நிலைமைகளை நேரில் ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவரு மான முருகேசு சந்திரகுமாரின் பணிப்பிற்கு அமைய கண்டா வளை மற்றும் வட்டக்கச்சி பகுதி யின் அழகாபுரி, மாயவனூர் ஆகிய பகுதிகளுக்கு விரைவில் மின்சார விநியோக நடவடிக்கை களை மேற்கொள்ளும் வகையில் திட்ட முன்னாய்வு நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை செல்வாநகர் கிராமத்தில் மின்விநியோகத்தில் விடுபட்ட பகுதிகளுக்கும் மின் சாரம் வழங்கும் பொருட்டு மேற் படி குழுவினர் செல்வாநகர் கிரா மத்திற்கு நேரில் சென்று நிலைமை களை ஆராய்ந்துள்ளனர்.

இந்த விஜயத்தின் போது வட க்கு மாகாண சபை உறுப் பினர் வைத்தியநாதன் தவநாதன், மின் சார சபையின் பொறியியலா ளர் அமில உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (29)

# மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்.நிருபர்)

மக்கள் வங்கியில் மொழிபெயர்ப்பாளர் (சிங்களம் - ஆங்கிலம் மற்றும் சிங்களம்-தமிழ்) மொழிபெயர்ப்பாளர் வெற்றிடங்களை நிரப் பவதற்காக தகுதி மற்றும் அனுபவமுள்ளவர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்து மொழிபெயர்ப் பாளராக ஓர் அரச அல்லது தனியார் நிறுவனத்தில் மொழிபெயர்ப் பாளராக கடமையாற்றி 5 வருடங்களுக்கு குறையாத அனுபவம் கொண்ட 55 வயதுக்குட்பட்டவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

நியமனமானது ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுமென் றும், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிக்கு அவர்களின் தகுதி மற்றும் அனுபவங்களுக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளக் கட்டமைப் பொன்று வங்கப்படுமென மக்கள் வங்கியின் மனித வள பிரதிப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதிப் பொதுமுகாமையா ளார் (மனித வளம்), மக்கள் வங்கி, தலைமை அலுவலகம், இல.75 சேர்.சிற்றம்பலம் ஏ.காடினர் மாவத்தை கொழும்பு 2 என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள் ளார். (10)

# நயினாதீவில் போக்குவரத்து சேவை; புதிய பஸ் வண்டி சேவையில் இணைப்பு

(நயினாதீவு)

நயினாதீவு கிராம மக்களது போக்குவரத்து வசதி கருதி இல ங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய சாலையினால் புதிய பஸ் வண்டி ஒன்று சேவை யில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

இந்தப் புதிய பஸ் வண்டி கையளிக்கும் நிகழ்வில் வட மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் க. கமலேந்திரன் மற்றும் வேலணை பிரதேசசபை தலை வர் சி.சிவராசா ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளர் நா. ஜெயகாந்தன் உட்பட பலர் கல ந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

ஏற்கனவே நயினாதீவுக் கிரா மத்திற்கு இந்தப் புதிய பஸ் வண் டியினைக் கொண்டு கடற் படை யினரது உதவி கோரப்பட் டிருந் தமையாலும், அவர்களது உதவி கள் கிடைக்கும் வரை காத்திரு ந்த போதும், தற் பொழுது புதி தாக ஆரம்பிக் கப்பட்டிருக்கும் கடற்பாதை ஊடாக பஸ்சினை ஏற்றி நயினா தீவுக்கு கொண்டு செல்லப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது. (05)

# மண்கும்பானில் ஓய்வு மண்டபம்

## சனியன்று அடிக்கல் நாட்டு விழா

(வேலணை)

பொதுமக்கள் தங்கி இளைப் பாறிச் செல்வதற்கான கட்டட மொன்று வேலணை மண்கும் பான் கரும்பாசி அம்மன் ஆல யத்திற்கு அருகாமையில் அமைக் கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத்தைக் கட்டுவ தற்கான அடிக்கல் நாட்டு விழா வுக்கென பொதுமக்கள் தொடர் பாடல் மற்றும் மக்கள் விவகார அமைச்சர் மேர்வின் சில்வா எதிர் வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை மண்கும்பானுக்கு விஜயமொன் றினை மேற்கொள்ளவிருப்பதா கத் தெரிவிக்கப்படுகின்றது.


## சிறுவிளம்பரம்

### வீடு வாடகைக்கு உண்டு

201 - ஆட்டோவும் விற்பனைக்கு உண்டு. பாஷையூர் அந்தோனியா ருக்கு அருகில். தொடர்புக்கு : 0771607752, 0766155535 R/No-259



# ஆனைக்கோட்டையில் நூலகக் கண்காட்சி

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் ஆனைக்கோ ட்டை உப அலுவலக நூலகத்தின நடமாடும் நூலக சேவையும், கண் காட்சியும் நாளை இடம்பெறவுள் ளது.

வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு இடம்பெறும் இந்நிகழ்வை யாழ். பொதுசன நூலகமும், ஆனைக் கோட்டை நூலகமும் இணைந்து நடத்தவுள்ளது. மேற்படி பிரதேச மாணவர்களினதும், முன்பள்ளிச் சிறார்களின் நலன்கருதி இவ் நட மாடும் நூலக சேவையும், கண் காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது.

இந்நிகழ்வில், வீடியோ கண் காட்சி மற்றும் கதைகூறும் நிகழ்வு ஆகியனவும் இடம்பெறவுள்ளது.

இதனைவிட எதிர்வரும் 7, 8 ஆம் திகதிகளில் புத்தகக் கண் காட்சி ஒன்றும் காலை 9.00 முதல் மாலை 4.00 மணி வரை ஆனைக் கோட்டை பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது



(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணை ஊர் காவற்றுறை வீதியில் பய ணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த ஆட்டோ ஒன்று அல்லைப்பிட்டிச் சந்தியை அண்மித்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளா கியதில் மூவர் சிறுகாயங்க ளுக்குள்ளாகினர்.

நேற்று நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்ற இவ்வீதி விபத்தில் சேத மடைந்த ஆட்டோவைக் காணலாம். (பா)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 07.10.2013 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த லாலா சோப் உரிமையாளரின் அன்புத் துணைவியார்

**அமரர்**

**வன்னியசிங்கம் மனோன்மணி**

**அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியை கள் நாளை 06.11.2013 புதன்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையி லும் எனது அன்புக்குரியவர்கள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.**

**இங்ஙனம்**

**லாலா சோப்**
**பிரதான வீதி, அச்சுவேலி** (C/3189)

**பொ. வன்னியசிங்கம் (லாலா)**

# சமூக பராமரிப்பு நிலையம் அமைக்க 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(முல்லைத்தீவு)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் சமூக பராமரிப்பு நிலையம் அமைப்பதற்கு வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் 2 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிலையம் அமைப்பதற்கு 3.4 மில்லியன் (34 இலட்சம் ரூபா) மதிப்பீடு செய்யப்பட்டது.

அதில் முதல் கட்டமாக 2 மில்லியன் ரூபா இவ் வருடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. யுனிசெவ் நிறுவனத்தின் மூலம் மாகாண சமூக சேவைகள் திணைக்களம் இதற்கான நிதியைப் பெற்றுள்ளது. வடமாகாண கட்டடங்கள் திணைக்களம் இக் கட்டட வேலைகளை நிறைவேற்றிக் கொடுக்க உள்ளது.

சமூக சேவைகள் அமைச்சினால் சமூக பராமரிப்பு நிலையம் அமைக்கும் செயற்றிட்டம் நாடெங்கும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் தற்போது வடமாகாணத்தில் இத்தகைய நிலையங்கள் இல்லாத இடங்களில் இவற்றை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை முல்லைத்தீவு நகரப் பிரதேசத்தில் கோயில்குடியிருப்பு எனுமிடத்தில் மாவட்ட சமூக சேவைகள் அமைப்பதற்கும் முதல் கட்டுமானப் பணிகளுக்கும் யுனிசெவ் நிறுவனம் 2 மில்லியன் ரூபாவை மாகாண சமூக சேவைகள் நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது.

இதற்கான கட்டுமானப் பணிகளையும் வட மாகாண கட்டடங்கள் திணைக்களம் மேற்கொள்ள உள்ளது. கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்யவும் யுனிசெவ் நிறுவனம் 2 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. (90)

## நல்லொழுக்க தினம்

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் நடத்தும் சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில இடம்பெறவுள்ளது.

வடமராட்சி நல்லொழுக்க நிறுவன தலைவர் பா.ரகுநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்குமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் பருத்தித்துறை பிரதேச செயலர், கரவெட்டி பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன், கௌரவ விருந்தினர் களாக மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை முதல்வர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (90)

# சமூகசேவை அலுவலர்களுக்கு மூன்று நாள் வதிவிடப் பயிற்சி

வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள சமூக சேவைகள் அலுவலர்களுக்கு 3 நாள் வதிவிடப் பயிற்சி நெறி இம் மாதம் 19,20,21 ஆம் திகதிகளில் வவுனியா தவசிக் குளத்திலுள்ள சேவா லங்கா பண்ணை வதிவிடத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை செல்லும் மாணவர்களைக் கொண்ட வறிய குடும்பங்களுக்கு வழங்கும் சுயதொழில் உதவித் திட்டம் தொடர்பான திறன் விருத்திச் செயலமர்வாகவே நடைபெறவுள்ளது.

இவ் வருடம் வட மாகாணத்தின் அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இச் சுய தொழில் உதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அது தொடர்பான ஒரு மீளாய்வு நடவடிக்கையாகவே இச் செயலமர்வு நடைபெறவுள்ளதாகக் கூறப்படுகிறது. (90)

# பேருந்துச் சேவை சீரின்மை மாணவர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் வழமையான நாட்களை விட ஞாயிறு தினங்களில் குறைந்தளவாக சேவையில் ஈடுபடுவதாக பயணிகளால் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக சனி, ஞாயிறு தினங்களிலேயே தனியார் வகுப்புகள் மற்றும் வெளிவாரி பயிலும் மாணவர்கள் என அநேகமான மாணவர்கள் இ.போ.ச பேருந்தின் பருவகாலச் சீட்டினை பயன்படுத்தியே கல்வி நிலையங்களுக்கு பயணத்தை மேற்கொள்கின்றனர். இதனால் இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்துகளிலேயே செல்ல வேண்டிய கட்டாய நிலை இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இத்தினங்களில் குறைந்தளவான பேருந்துகளே சேவையில் ஈடுபடுவதால் நீண்ட நேரம் காத்திருந்தே வகுப்புகளுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் யாழ்.பருத்தித்துறை சேவையில் ஈடுபடும் இ.போ.ச பேருந்துகளில் 751 இலக்க பேருந்து சேவையானது ஒழுங்காற்றுக் காணப்படுவதாக பயணிகளும் மாணவர்களும் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே மாணவர்களின் நன்மை கருதி ஞாயிறு தினங்களிலும் வழமையான சேவையை நடத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (85)

## அமுத விழா

பதுளை தமிழ் மகளிர் வித்தியாலயத்தின் எண்பதாவது ஆண்டு நிறைவையொட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை "அமுதவிழா" கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.


இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் ஏ.நட்ராஜன் கலந்துகொள்ளவுள்ளார்.

இவ்விழாவில் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பல வருடங்களாகப் பங்களிப்பு செய்து வந்த அதிபர் ஆசிரியர்கள், மற்றும் சாதனைகளை நிலைநாட்டிய மாணவிகள் பலரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அன்றைய தினம் "வலம்புரி"என்ற சிறப்பு நூலும் வெளியிடப்படவுள்ளது. (10)

**வேகத்தைக் குறையுங்கள் உயிர்களைக் காப்பாற்றுங்கள்**





**வீதியில் மற்றவர் உரிமையை மதியுங்கள்...**

சாரதிகளே!
மஞ்சள் கடவையூடாக செல்பவர்கள் குறித்து கவனம் செலுத்துங்கள்...

(நா.சிவபாலன்)

# ஐயோ... ஐங்கரநேசன்....!




முன்னர் தீவுப் பகுதியில்தான் தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடிருந்தது. இப்பொழுது யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளிலும் தண்ணீர்ப்பிரச்சினை தலை தூக்கியுள்ளது.

நல்ல தண்ணீருக்கு ஆபத்து வந்துள்ளதாக பத்திரிகைகளில் செய்திகளும் ஆய்வுக்கட்டுரைகளும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

அப்படி வந்த ஆபத்தை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதைப் பற்றி பெரிதாக யாரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

நல்ல தண்ணீரில் நச்சுத் தன்மை கூடியிருக்கிறது என்றால், அது இரசாயனக்கழிவுகளால் ஏற்பட்டிருக்கும் ஓர் விளைவு.

யாழ்ப்பாணத்தில் இரசாயனக் கழிவு ஏற்படுகிறது என்றால், அது விவசாயத்தின் மூலமாக வரும் கழிவே தவிர, தொழிற்சாலைகளால் உண்டாகும் கழிவினாலோ விளைவினாலோ ஏற்பட்டதில்லை.

எனவே, யாழ்ப்பாண விவசாயமே அதற்குப் பொறுப்பு.

யாழ்ப்பாணத்தில் தண்ணீர் மாசடைந்துள்ளது என்று கூறிவருகிறவர்களில் ஒருவர் தற்போதைய வடமாகாண விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன்.

சூழலியல் சார்ந்து பல கட்டுரைகளை எழுதியிருக்கும் ஐங்கரநேசன் அவர்களே, இப்பொழுது சுற்றுச்சூழல் மற்றும் விவசாயத்துறைக்கும் அமைச்சராகியுள்ளார்.

அதாவது இப்பொழுது பந்து அவருடைய காலடியில் உள்ளது.

இவ்வளவு காலமும் கட்டுரைகளை எழுதிக் கொண்டிருந்தவர், இனி அந்தக் கட்டுரைகளுக்கு வடிவம் கொடுக்க வேணும். சொன்னதைச் செய்யவேண்டிய பொறுப்பில் இருக்கிறார் சிங்கன்.

விவசாய அமைச்சருக்குப் பல பொறுப்புக்கள் காத்திருக்கின்றன.

இதில் முக்கியமானது, யாழ்ப்பாணத்தில் தூர்க்கப்பட்ட குளங்களை அவர் மீளக் கண்டு பிடித்துப் புனரமைப்புச் செய்ய வேணும். இதன் மூலமே நிலத்தடி நீரைப் பாதுகாக்க முடியும்.

ஏனைய பல குளங்கள் கடந்த காலங்களில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. ஆனாலும் அவற்றுக்குப் பொருத்தமான வடிகால் அமைப்பு, வாய்க்கால் அமைப்புகள் சரியாக இல்லை.

அவற்றைப் புனர் நிர்மாணம் செய்ய வேணும்.

நல்ல தண்ணீர்ப் பாதுகாப்பை எப்படி மேற்கொள்வது என்பதைப்பற்றி (குடிநீர் விநியோக அமைச்சு மாகாணசபைக்குப்பட்டதில்லை என்றபோதும்) ஆழமாகச் சிந்தித்துச் செயற்படக்கூடிய பாதுகாப்புக் கட்டமைப்பை நிறுவ வேண்டும்.

நீர் முகாமைத்துவக் குழுவை பலப்படுத்த வேணும்.

பயிர்ச்செய்கை முறை தண்ணீரைக் கெடுப்பதாயின் அவற்றுக்கு மாற்றுச் செய்கை முறைகளை அறிமுகம் செய்து அதை நடைமுறைப்படுத்த வேணும்.

உண்மையில் யாழ்ப்பாணத்திற்கு தண்ணீர் மட்டும் தட்டுப்பாடானதல்ல. யாழ்ப்பாணத்துக்கு வெளியிலிருந்தே நெல்லும் அரிசியும் போகிறது. விறகு போகிறது.

விவசாயத்துக்குத் தேவையான எருப் போகிறது.

கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான கல்லும் மண்ணும் போகிறது.

இனி, இரணைமடுக் குளத்தண்ணீரும் போகப்போகிறது.

இதெல்லாம் அங்கே போகப் போக அங்குள்ள விளை நிலங்களும் காணாமற் போகின்றன.

சனங்கள் விளைநிலங்களை வணிக மையங்களாக மாற்றுகிறார்கள்.

குடியிருப்புகளாக மாற்றுகிறார்கள்.

எண்பது, தொண்ணூறு, நூறு குடும்பங்களைக் கொண்ட சின்னஞ்சிறிய கிராமங்களில் கூட இப்பொழுது பதினைந்து இருபது கடைகள். போதாக்குறைக்கு ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு 'ஹாட்வெயார் ஸ்டோர்ஸ்.'

ஒரு பக்கம் தண்ணீர்ப்பிரச்சினை என்றால், இன்னொரு பக்கம் விளைநிலங்கள் பறிபோகும் பிரச்சினை.

இதனால்தான் கடந்த 1950, 60, 70 களில் யாழ்ப்பாணத்து மக்களை யாழ்ப்பாணத்துக்கு வெளியே குடியேற்றம் செய்தார்கள்.

இதன்மூலம் பிறருடைய குடியேற்றங்களும் தடுக்கப்பட்டன. வளத்தைக் கொண்டு வருவதற்குப் பதிலாக வளமுள்ள பிரதேசங்களில் மக்களைக் குடியிருப்புச் செய்வதுமாயிற்று.

அப்படியொரு தீர்மானத்துக்கு வரவேண்டியது இன்று அவசியம். வளத்தையெல்லாம் வளங்குன்றிய பகுதிக்குக் கொண்டு வருவதை விடவும் வளங்கள் நிறைந்த பகுதிக்கு மக்களைக்கொண்டு செல்வது.

இதுவே புத்திசாலித்தனமானது.

விவசாய அமைச்சருக்குத்தான் ஏகப்பட்ட வேலைகள்.

இதையெல்லாம் செய்யவில்லை என்றால் அவர் பாடு அம்போஸ்தான். அதைவிடச் சனங்களின் பாடு....?

எஜமானனாக இருந்தால் சில சமயம் குருடனாக இருங்கள். வேலையாளாக இருந்தால் சில சமயம் செவிடனாக இருங்கள். - புல்லர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinámurasu@live.com
Online : www.thinamurasu.net

## பந்தாடப்படும் நமது வாழ்வு!

நவம்பர் 15 முதல் 17ஆம் திகதி வரை பொதுநலவாய அரச தலைவர்களின் 22வது மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளது. இங்கிலாந்து பேரரசின் முன்னாள் காலனி நாடுகளுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான அரசுத் தொடர்புகள் நீடிக்க முக்கியமாக, இங்கிலாந்தின் வியாபார நலன்கள் பாதிக்கப்படக் கூடாது என்கிற நோக்கில் தொடங்கப்பட்ட அமைப்பே கொமன்வெல்த்.

இதில் 54 நாடுகள் உறுப்பினராக இருக்கின்றன. இந்த நாடுகள் எந்தச் சட்டத்தாலும் இணைக்கப்படவில்லை. முழுக்க சுயவிருப்பத்தின் அடிப்படையிலான இணைப்பு. இந்த நாடுகளில்தான் உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதி இருக்கிறது. 9.767 ட்ரில்லியன் டொலர்கள் உற்பத்தி மதிப்பைக் கொண்ட இந்தச் சந்தைதான் இந்தப் பொதுநலவாய அமைப்பைப் பிணைத்திருக்கும் ஆதார சுருதி.

பொதுநலவாய நாடுகளின் முதலாவது மாநாடு 1971 இல் சிங்கப்பூரில் நடந்தது. இதன் 22வது மாநாட்டை கொழும்பில் நடத்துவது என்பது 2009ஆம் ஆண்டு நடைபெற்ற 20வது மாநாட்டில் அனைத்து உறுப்பு நாடுகளும் இணைந்து எடுத்த முடிவு.

இந்த மாநாடு, 2 வருடத்திற்கு ஒரு தடவை பொதுநலவாய நாடொன்றில் நிகழும். அந்நாட்டின் ஜனாதிபதி அல்லது பிரதமர் அந்த மாநாட்டிற்கு தலைமை வகிப்பதோடு, பின்னர் அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு அவரே பொதுநலவாய அமைப்பின் தலைவராகவும் செயற்படுவார்.

தன்னுடைய உறுப்பு நாடுகள் அனைத்துக்கும் சம உரிமையையும் அந்தஸ்தையும் கொமன்வெல்த் வழங்குகிறது. எந்த நாட்டையும் இதிலிருந்து யாரும் வெளியேற்ற முடியாது. கொடும் குற்றங்களில் உறுப்பு நாடுகள் ஈடுபட்டாலும்கூட, குறிப்பிட்ட காலகட்டத்துக்கு இடைநீக்கம் மட்டுமே செய்ய முடியும்.

இப்படிப்பட்ட ஓர் அமைப்பின் மாநாட்டை இலங்கை நடத்தக் கூடாது என்பதிலோ, அதில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்பதிலோ, இலங்கையை இந்த அமைப்பிலிருந்து நீக்க வேண்டும் என்பதிலோ – இலங்கைத் தமிழர்கள் நலன் சார்ந்து – ஏதாவது அர்த்தம் அல்லது பிரயோசனம் இருக்கிறதா?

வடக்கு மக்களின் மிகப் பெரும்பான்மையான வாக்குகளால் வெற்றிபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் சமீபத்தில்தான் இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

அத்துடன் மட்டுமல்லாது, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பொதுநலவாய மாநாட்டுக்கு அவசியம் வரவேண்டும்; வடக்கையும் வந்து பார்க்க வேண்டும். அதன் மூலம்தான் எமது மக்களின் அடுத்தகட்ட முன்னேற்றத்திற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்றும் முதலமைச்சர் சொல்கிறார்.

ஆனால் இலங்கைத் தமிழர்கள் மீது அபரிமிதமான அன்பினால் உருகுவதாகச் சொல்லிக்கொள்ளும் தமிழ்நாட்டுத் தலைவர்கள் இந்தியாவிலிருந்து ஒரு துரும்பும் இலங்கைக்குப் போகக் கூடாது என்று கண்டனக் கடிதம் எழுதுகிறார்கள்; உண்ணாவிரதமிருக்கிறார்கள்; ஒரே பிடியாய் நிற்கிறார்கள்.

இப்படியொரு முட்டாள்தனமான, நம்மை நாசப்படுத்துவதே தமிழுணர்வு என்று நாண்டுகொண்டு நிற்கும் ஆதரவாளர்களை(?) வெளியிலேயும், அவர்களது முட்டாளெதிர்ப்புகளை மறுத்துப்பேசாது பம்மும் சுயநலத் தலைவர்களை நமக்குள்ளேயும் வைத்துக்கொண்டு நமது மக்கள் கடைத்தேறுவது எங்கனம்?

எமக்கு நல்லது கெட்டதுகளை நாமே தெளிவாகத் தீர்மானித்துக்கொண்டு, நமக்கு வேண்டியதை உறுதியாகத் தெரியப்படுத்தி முன்செல்லாத வரை, இப்படி உலகெங்குமுள்ள சக்திகள் தங்களது நிகழ்ச்சி நிரல்களுக்கேற்ப பந்தாடிக் கொண்டிருப்பதாகவே இருக்கும் நமது மக்களின் வாழ்வு!

- ஆசிரியர்

# தமிழக கட்சிகளுக்கு இங்கு என்ன வேலை

## அஸ்வர் எம்.பி. போர்க்கொடி

(கொழும்பு)

தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகள் காவேரி நதிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதை விடுத்து அரசியல் சுயலாபத்திற்காக இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதை எங்களால் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது என நாடாளுமன்ற உறுப்பினரும் மக்கள் தொடர்பாடல் அமைச்சின் கண்காணிப்பு உறுப்பினருமான ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்தார்.

தற்போது தமிழ் நாட்டில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது எனப் பல போராட்டங்கள் இடம்பெற்று வருகின்ற போதிலும் புதுடில்லி தனது உண்மையான நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளது. இந்நிலையில் தமிழக அரசு மாத்திரமின்றி சில அரசியல் கட்சிகளும் இலங்கைக்கு எதிராகச் செயற்படுகின்றன.

தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். நீண்ட காலமாக தீர்வு காணப்படாத பிரச்சினையாக காவேரி நதிப் பிரச்சினை தமிழ் நாட்டுக்கும் ஆந்திர மாநிலத்திற்குமிடையில் இருந்து வருகின்ற நிலையில், தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகள் எதிர்வரும் காலங்களில் முகங்கொடுக்கவுள்ள தேர்தல்களுக்காக வேண்டி இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுகின்றன என்றார்.

மேலும், நாட்டின் 30 வருட கால யுத்தம் நிறைவுபெற்றுள்ள இவ்வேளை, வடக்கில் மக்கள் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் தங்களுடைய வாழ்க்கையைக் கொண்டு நடத்தி வருகின்றனர். இவ்வாறான கருத்தை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் தெரிவித்தார்.

மனித உரிமை மீறல்கள் குறித்து தமிழ் நாடு, பிரித்தானியா போன்றவை கோஷமிடுகின்றன. இலங்கைத் தமிழ் மக்களின் உண்மை நிலைவரத்தை இங்கு வந்து பார்த்த பின்பே தெரிந்துகொள்ளலாம். எனவே நாட்டில் ஒற்றுமையை நிலைநாட்டுவது தொடர்பாக ஊடகங்கள் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டுமெனவும் அஸ்வர் எம்.பி. தெரிவித்தார்.

# அழகுக்கலை நிலையங்கள் மீது திடீர் சுற்றிவளைப்பு

## காலாவதியான பொருட்கள் மீட்பு

(கொழும்பு)

தரம் குறைந்த மற்றும் காலாவதியான அழகுசாதனப் பொருட்களை பயன்படுத்தி வந்த 250 அழகுக்கலை நிலையங்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்தார்.

நுகர்வோரை பாதுகாக்கும் நோக்கில் நாடு முழுவதிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட அழகுக்கலை நிலையங்களில் இந்த திடீர் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டன.

கொழும்பிலுள்ள அழகுக்கலை நிலையங்களுக்கெதிராகவே அதிக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டிய தலைவர் ரூமி மர்சூக், அதனைத் தவிர பொலனறுவை, கம்பஹா, குருணாகல், மாத்தறை, புத்தளம், நுவரேலியா, யாழ்ப்பாணம், கண்டி, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பல அழகுக்கலை நிலையங்களும் முற்றுகையிடப்பட்டதாகக் கூறினார்.

அழகுக்கலை பற்றிய ஓரளவு அறிவைப் பலப்படுத்தி பலர் தரம் குறைந்த மற்றும் காலாவதியான அழகுசாதனப் பொருட்களை பயன்படுத்தி பணம் சம்பாதிப்பதாக கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு முறைப்பாடு கிடைத்தது. இதனைத் தொடர்ந்தே அமைச்சரின் பணிப்புரையின் பேரில் இந்த சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் அதிகார சபைத் தலைவர் தெரிவித்தார்.

# காப்புறுதிப் பணம் செலுத்தினாலும் கடன் பெறுவது இழுபறி

(கிளிநொச்சி)

வன்னிப்பகுதியில் விவசாயக் காப்புறுதி என்னும் பெயரில் அதிகளவான பணம் பெறப்படுவதாகவும் ஆனால் இக் காப்புறுதிப் பத்திரங்களை கடன் விநியோக நடவடிக்கைகளில் ஏற்றுக் கொள்ள முடியாது என வங்கி அதிகாரிகள் தெரிவிப்பதாகவும் இதனால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாகவும் இப்பிரதேச விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக கமநலசேவை நிலையங்களில் மானிய விலையில் பசளை விநியோகிக்கப்படுகின்றபோது கடந்த ஆண்டிலிருந்து ஒரு கிலோ பசளைக்கு 10 ரூபா காப்புறுதிப் பணமாக விவசாயிகளிடமிருந்து அறவிடப்படுகின்றது.

இந்த நடவடிக்கையின் பொழுது அரசினால் காப்புறுதிக் கட்டணம் என்ற அடிப்படையில் விவசாயிகளிடமிருந்து ஏக்கருக்கு ஆயிரத்து 50 ரூபா தொடக்கம் ஆயிரத்து 400 ரூபா வரை அறவிடப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த விவசாயிகள் விவசாயத் தேவைக்காக வங்கிகளில் விவசாயக்கடன்களைப் பெறச்செல்லுகின்றபோது வங்கி அதிகாரிகள் காப்புறுதி ஆவணங்களைக் கோருவதுடன் பசளை விநியோகத்தின்போது காப்புறுதிக் கட்டணமாகச் செலுத்தப்பட்ட காப்புறுதி ஆவணங்களை கடன் நடவடிக்கைகளில் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவிக்கின்றனர். இதனால் தாம் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

# போரில் சிங்கப் படைப்பிரிவைச் சேர்ந்த மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் பலி

இடம்பெற்ற போரில் இலங்கை இராணுவத்தின் சிங்கப் படைப்பிரிவில் பணியாற்றிய 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்த படையினருக்கான நினைவஞ்சலி நிகழ்வு சிங்கப் படைப்பிரிவின் தலைமையகமான அம்பேபுஸ்ஸவில் உள்ள இராணுவ முகாமில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

புலிகளுடனான போர் நடவடிக்கைகளின் போது உயிரிழந்த சிங்கப் படைப்பிரிவைச் சேர்ந்த 143 அதிகாரிகள் மற்றும் 3719 படையினருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் பிரதம அதிதியாக இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் தயா ரத்நாயக்க கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் இராணுவத்தின் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் கிருஷந்த டி. சில்வா, மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா, ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள், உயிரிழந்த படையினரின் உறவினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

போரில் சிங்கப் படைப்பிரிவைச் சேர்ந்த 3862 பேர் போரில் கொல்லப்பட்டு அல்லது காணாமற் போயிருக்கலாம் என இராணுவம் தெரிவித்துள்ளது.

1980 ஆம் ஆண்டு முதல் 2009 மே மாதம் போர் முடிவுக்கு வந்தது வரையான காலப்பகுதி வரை வடக்கு, கிழக்கில் புலிகளுடன்னான போரில் முப்படைகள் மற்றும் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த 28,158 பேர் கொல்லப்பட்டனர் என பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிகிரியாவை அண்மித்த பகுதிகளை அபிவிருத்தி செய்ய தீர்மானம்

சிகிரியாவை அண்மித்த பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் குறிப்பிடுகின்றது.

மத்திய கலாசார நிதியத்துடன் இணைந்து இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பணியகத்தின் பணிப்பாளர் அனில் பீரிஸ் தெரிவித்தார்.

இதற்கமைய, சிகிரியாவை அண்மித்த பகுதிகளை சுத்தப்படுத்தும் மற்றும் புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்பற்ற முறையில் காணப்படும் பாறைகள் தொடர்பில் கண்டறிதல், பெறுமதியான ஓவியங்களை பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகளும் இதனூடாக முன்னெடுக்கப்படவுள்ளதாக புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# விஞ்ஞான வளர்ச்சியின் வளர்ச்சி - 2

ரவி நடராஜன்






**19ஆம் நூற்றாண்டில், நியூட்டனின் கருத்துக்களை பல விதத்திலும் உபயோகித்த இயக்கவியல் வல்லுனர்கள், (mechanical engineers) ஏராளமான வெற்றிகளை, பல தொழில்களில் கண்டார்கள். முதலில் நீராவி சக்தி, பிறகு, திரவ சக்தி, என்று பல விதத்திலும் தொழிற்சாலைகளில் வெற்றி கண்டு, தொழிற் புரட்சி மூலம் இங்கிலாந்தை உலக வல்லரசாக உயர்த்துவதற்கு முக்கிய உந்துகோல், 19ஆம் நூற்றாண்டின் விஞ்ஞானச் சிந்தனை மற்றும் அதன் பயன்பாடுகள் என்று சொல்லலாம்.**

**19ஆம்** நூற்றாண்டின் விஞ்ஞான வளர்ச்சியின் மிகப் பெரிய தூண்டுகோல்களாக அமைந்தவை பின்வருமாறு:

1. விஞ்ஞானப் புத்தகங்கள் பெரும் எண்ணிக்கையில் அச்சடிக்கப்பட்டுப் பரவலாகவும், ஓரளவு மலிவாகவும் கிடைக்கவே நிறைய மக்களால் படிக்கப்படுவது ஒரு பரவலான பண்பாடாகத் தொடங்கியது.

2. மக்களுக்கு (அனேகமாக ஐரோப்பாவில்) கல்வி என்பது ஒரே வகையாகத் தொகுக்கப்பட்டு, நாடெங்கும் சமமான வகையில் கொடுக்கப்படவும், பரந்த மக்களிடையே படிப்பறிவு வளரத் தொடங்கியது. அத்தகைய அறிவு நாட்டின் பொருளாதார, தொழில் முறை உற்பத்தியின் வளர்ச்சிக்கு உதவும் என்பது அரசுகளுக்கும், ஆள்வோருக்கும் விளங்கத் தொடங்கியது.

3. மெதுவாக, அரசாங்கங்கள் விஞ்ஞானத்தில் முதலீடு செய்யத் தொடங்கின. ஆனால், அந்நாளைய அரசாங்கங்களின் நோக்கம், விஞ்ஞான வளர்ச்சியால் வியாபாரம் விரி-வடையும் என்பது மட்டுமே (விஞ்ஞான முன்னோடி இங்கிலாந்தை "கடைக்காரர்கள் தேசம்" என்று உலகம் சொல்லி வந்தது.)

4. விஞ்ஞான முன்னேற்றங்கள் ஒழுங்காக விஞ்ஞான வெளியீடுகளில் வெளியிடப்பட்டு, விவாதிக்கப்பட்டு, ஒழுங்காக படிப்படியாக வளரக் காரணம், இந்தக் கட்டத்தில் உருவாக்கப்பட்ட முறைகள். இந்த வகை வெளியீடுகளில் ஒரு முன்னோடியும் மிகவும் மதிக்கப்பட்டதொரு வெளியீடுமானது Royal Society –apd; Philosophical Transactions என்ற வெளியீடு. இது அமெரிக்க விஞ்ஞான வளர்ச்சி இன்னும் வளரத் தொடங்காத, துவக்கநிலையிலிருந்த காலம் எனலாம். 18ஆம் நூற்றாண்டில், மருத்துவம் பற்றிய முதல் வெளியீடான Medical Essays and Observations, றோயல் எடின்பரோ சங்கத்தால் (Royal Edinburg Society) வெளியிடப்பட்டது. ஒரு நூற்றாண்டுக்கப்புறம், 1848இல் உருவாக்கப்பட்ட AAAS என்ற American Association for the Advancement of Science என்ற அமைப்புதான் மெதுவாக, ஆனால் தொடர்ச்சியாக வளர்ந்து, இன்று உலகின் மிகப் பெரிய விஞ்ஞான ஆய்வுகளை வெளியிடும் அமைப்பாக உள்ளது. அதே காலத்தில், இன்று உலகில் மிகவும் மதிக்கப்படுகின்ற அமெரிக்க விஞ்ஞான வெளியீடுகளான, Nature (1869) மற்றும் Science (1880) துவங்கின.

5. பிரிட்டிஷ் சிந்தனையாளர் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் (Bertrand Russel) விஞ்ஞான வளர்ச்சியைப் பற்றி சொன்னது 19 ஆம் நூற்றாண்டின் சாரத்தையே விவரிப்பது போல இருக்கும். ரஸ்ஸல் சொல்கிறார், "எங்கோ இருக்கும் நட்சத்திரங்கள் மற்றும் கிரகங்களை ஆராயும் பணியில் விஞ்ஞான முயற்சிகள் தொடங்கின - நியூட்டன் காலம் வரை அப்படியே நடந்தது. அடுத்தபடியாக, நமக்கு நெருங்கிய மனித உடலைப் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சி தீவிரமாகத் தொடங்கியது 19ஆம் நூற்றாண்டில். அத்துடன், உயிரினங்கள் பற்றிய தெளிவு ஏற்பட்டது டார்வினின் 19ஆம் நூற்றாண்டு பரிணாம கோட்பாட்டிற்குப் (theory of evolution) பிறகுதான். கடை-சியில், எல்லோருக்கும் மிக நெருக்கமான மனித மனதைப் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சி, 19ஆம் நூற்றாண்டின் ஃப்ராய்டின் (Sigmund Freud) ஆராய்ச்சிக்குப் பிறகுதான்."

19-ஆம் நூற்றாண்டில் சோதனை அறிவியல் (experimental science) மற்றும் தொழில்நுட்பம், கோட்பாட்டு அறிவியலை (theoretical science) விட வேகமாக முன்னேறியது. பொதுவாக, ஒரு சோதனை முடிவை சரியாகப் புரிந்து கொள்வதற்குக் கோட்பாடுகள் உதவின. அத்துடன், இந்த நூற்றாண்டில், நியூட்டனின் சிந்தனைகள், பல்வேறு துறைகளில் மேலும் விரிவு படுத்தப் பட்டன. உதாரணமாக, வில்லியம் தொம்ஸன் (William Thomson) என்பவர், நியூட்டனின் சிந்தனைகளை, வெப்ப இயக்கவியலுக்கு (thermodynamics) விரிவு படுத்தினார். இங்கிலாந்தில் நடந்த முதல் தொழில் புரட்சி, நியூட்டனின் கோட்பாடுகளை அன்றாடம் பயன்படுத்தக் கூடிய பொருள்களாக மக்களுக்கு அளித்தது.

19ஆம் நூற்றாண்டில், நியூட்டனின் கருத்துக்களை பல விதத்திலும் உபயோகித்த இயக்கவியல் வல்லுனர்கள், (mechanical engineers) ஏராளமான வெற்றிகளை, பல தொழில்களில் கண்டார்கள். முதலில் நீராவி சக்தி, பிறகு, திரவ சக்தி, என்று பல விதத்திலும் தொழிற்சாலைகளில் வெற்றி கண்டு, தொழிற் புரட்சி மூலம் இங்கிலாந்தை உலக வல்லரசாக உயர்த்துவதற்கு முக்கிய உந்துகோல், 19-ஆம் நூற்றாண்டின் விஞ்ஞானச் சிந்தனை மற்றும் அதன் பயன்பாடுகள் என்று சொல்லலாம்.

"செவ்வாய் கிரகத்தில் இந்த நாள், இந்த நேரத்திற்கு விண்கலம் சென்றடையும் என்று சரியாகச் சொல்ல, அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு இணையே கிடையாது". சாதாரணப் பேச்சிலே இப்படிச் சொல்பவரை நாம் பார்த்திருப்போம். இவர்களே, "செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் உண்டா இல்லையா என்று திட்டவட்டமாக சொல்ல முடியவில்லையாம். அதற்குப் போதுமான சாத்தியங்கள் இல்லையாம்," என்று சற்று நிராசையோடு சொல்வதையும் கவனிக்கிறோம்.

மேலே, முதல் குறிப்பு, 19ஆம் நூற்றாண்டில் உருவாகிய விஞ்ஞான சிந்தனையின் இன்றைய வெளிப்பாடு. அதாவது, விஞ்ஞான முறைகளில் எதை செய்தாலும், மிகத் துல்லியமாகவும், சற்றும் கருத்து வேறுபாடுக்கு இடமில்லாமலும் இருக்க வேண்டும் என்ற கருத்து.

மேலே சொல்லப்பட்ட இரண்டாம் குறிப்பு, விஞ்ஞான முடிவுகள் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் (சூதாட்டத்தைப் போல) இருக்கக் கூடாது என்ற 20-ஆம் நூற்றாண்டு ஆரம்பகால சிந்தனையின் வெளிப்பாடு. மேலே சொன்ன இரண்டு உதாரணங்களும் திட முடிவுகளின் மேல் (determinism) உள்ள இரு வெளிப்பாடுகள். சந்தேகத்திற்கு விஞ்ஞானத்தில் இடமில்லை என்ற கருத்து இன்றுவரை நிலவுகிறது.

19-ஆம் நூற்றாண்டில் பல்வேறு அடிப்படை விஞ்ஞான சிந்தனை மாற்றங்கள் உருவாகியது மறுக்க முடியாத உண்மை. சில முக்கிய மாற்றங்கள்:

* எந்த ஒரு கோட்பாடும், சரியான சோதனை சாட்சியங்களுடன், சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட வேண்டும்.

* விஞ்ஞானத்தில் வாதங்கள் முக்கியம். ஆனால், சோதனை முடிவுகள் அசைக்க முடியாத, எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட தர்க்கத்துடன் விளக்கப்பட வேண்டும். இதற்கு கணக்கியல் அடிப்படை அவசியம். சார்புடைமை (bias) என்பதை அகற்றக்கூடிய சக்தி கணக்கியலுக்கு உண்டு.

* ஒரு கோட்பாடினை முன் வைக்க, அல்லது ஒரு சோதனையின் முடிவினை வெளியிட ஆராய்ச்சிக் கட்டுரை தகுந்த விஞ்ஞான வெளியீட்டில் முன் சொன்ன முறைகளோடு வெளியிடப் பட வேண்டும். அப்படி வெளியிடவோ, மறுக்கவோ முடிவு சொல்ல துறையில் வல்ல நிபுணர் குழு விவாதித்து ஒப்புக் கொள்ள வேண்டும்.

* மனிதப் புலன்களால் அளக்கக்கூடிய அளவுகளைத் தாண்டி, பல விஞ்ஞான அளவிடல்கள் மறைமுகமானவை. உதாரணம், மின்னழுத்தம் - மனிதப் புலன்களால் அளக்க முடியாதது. இப்படிப்பட்ட அளவிடல்கள் விஞ்ஞான வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவை. இவற்றின் அடித்தளம், கணக்கியல் மற்றும் லொஜிக். இதை, inductive முறைகள் என்கிறார்கள்.

* எந்த ஒரு விஞ்ஞான வெளியீடும் முன்பே வெளியிடப்பட்ட எந்த ஒரு வெளியீட்டை, எந்த விதத்திலும் கொப்பியடிக்கக் கூடாது. முன்பு வெளியிடப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளைச் சரியாக மேற்கோள்காட்டி வாதிடலாம். இவ்வாறு மேற்கோள் காட்டுவதை வெளியீட்டு முறை, மேற்கோள் அட்டவணை, ஆய்வுதவி நூல் பட்டியல் என்றெல்லாம் (bibliography) அழைக்கப்படுகிறது. இது மேலோட்டமாகப் பார்த்தால் மிகச் சாதாரண மாறுதலாகத் தெரியலாம். இதைக் கவனிப்பதென்ன அவசியம் என்றும் கேட்கத் தோன்றலாம். ஆனால் முந்தைய சிந்தனைகளின் தொடர்ச்சி ஒரு புதுச் சிந்தனை என்பது வெறும் மரபு நீட்சியைச் சுட்டுவதோடு, அந்தப் புதுச் சிந்தனையில் ஏதும் பழுதோ, அல்லது மேம்படவாய்ப்போ இருப்பது தெரிய வந்தால், அந்த புதுச் சாத்தியப்பாடுகள் எங்கிருந்தெல்லாம் கிட்டின என்று அறிவது பல கிளைப் பாதைகளை மறுபடி பரிசீலிக்கச் செய்யும். இந்தப் பரிசீலனையில் பல முன்னர் கவனிக்கப் படாமல் விடப்பட்ட அரிய சிந்தனைகள், ஆலோசனைகள் மீண்டும் கவனிக்கப்பட்டு மேலெழலாம். உதாரணமாக சமீபத்தில் கண்டுபிடிக்கப்படும் பல தாவரங்களின் மருத்துவ குணங்கள் பண்டைக் காலத்திலிருந்து சாதாரண மக்களிடம் புழங்கிய கருத்துகளே. ஆனால் இன்று அக்கருத்துகள்சோதிக்கப்படுவதோடு, என்ன காரணிகளால் அந்தத் தாவரங்கள் தம் மருத்துவ குணங்களைக் கொண்டிருக்கின்றன, என்ன முறைகளால் அவை நம் உடலுக்கு நன்மையைச் செய்கின்றன என்ற காரண காரியச் சங்கிலியை முழுதாக விரித்துணர இப்போது நம்மிடம் சோதிப்பு முறைகளும், கருவிகளும் உள்ளன. பட்டறிவு (experiential knowledge) இப்போது சோதிக்கப்பட்டு கோட்பாட்டறிவாக (theoretical knowledge) உறுதி செய்யப்படுகிறது.





பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெறவுள்ள தாமரைத் தடாக கலையரங்குக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விஜயம் செய்து முன்னேற்பாடுகளைப் பார்வையிட்டார்.

# நாமல் ஜனாதிபதியாவதை யாராலும் தடுக்க முடியாது

## ஈரான் தூதுவர்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகன் நாமல் ராஜபக்ச அடுத்த ஜனாதிபதியாவதனை யாராலும் தடுக்க முடியாது என ஈரானுக்கான இலங்கைத் தூதுவர் புய்சால் ராசீன் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ச குடும்பம் இந்த நாட்டுக்கு ஆற்றியுள்ள சேவைக்கு பிரதியுபகாரமாக மக்கள் நாமலையும் ஜனாதிபதியாக தெரிவு செய்வார்கள்.

இன்று கொழும்பை விடவும் ஆச்சரியமிக்க அளவிற்கு அம்பாந்தோட்டை அபிவிருத்தி அடைந்துள்ளது. உலகின் பலம் பெர்ருந்திய நாடுகள் பயங்கரவாதப் பிடியில் சிக்கியிருந்த போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் முயற்சியால் நாட்டில் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டது. இதன் காரணமாக ஆசியாவின் பல நாடுகளில் ஜனாதிபதியை ஆசிய சிங்கம் என அழைக்கின்றனர்.

எனவே, ராஜபக்சாக்களை பாதுகாப்பதற்கு இன,மத, குல பேதங்களைக் களைந்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். சபாநாயகர் சமால் ராஜபக்சவின் பிறந்த நாளை முன்னிட்டு அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


# புத்தர் காலத்திலும் சூதாட்டம் இடம்பெற்றது



இலங்கையில் கசினோ சூதாட்ட நிலையங்கள் ஏற்படுத்தப்படுவதனை எதிர்க்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்துள்ளார். கௌதம புத்தர் காலத்திலும் சூதாட்டம் நடைபெற்றது. இலங்கையர்கள் பங்கேற்க முடியாத வகையில் சூதாட்ட மையங்களை அமைப்பதில் தவறில்லை.

உலக மாற்றங்களுக்கு அமைவாக இலங்கையர்களும் மாறிக் கொள்ள வேண்டும். எனவே இலங்கையில் கசினோ சூதாட்ட மையங்களை அமைப்பதில் தவறில்லை. உலகுடன் செல்லும் பயணத்தின் போது இலங்கையர்கள் தனிமைப்பட்டு நிற்க முடியாது. சூதாட்டத்தில் இலங்கையர்கள் தூண்டப்படுவதனை தடுக்கவே பௌத்த பிக்குகள் குரல்கொடுக்க வேண்டும். சுற்றுலாத்துறையின் மூலம் இலாபமீட்ட வேண்டுமாயின் கசினோ போன்ற வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் தவறில்லை என உடுவே தம்மாலோக்க தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மழை குறித்து எச்சரிக்கையுடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தல்



நாட்டில், மாலை வேளைகளில் பெய்யும் இடியுடன் கூடிய மழை குறித்து எச்சரிக்கையுடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

பொதுமக்களின் கவனக்குறைவால் கூடுதலான மின்னல் தாக்கத்துக்குள்ளாகி ஆபத்துக்கள் அதிகரித்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ். ஆர் .ஜயசேகர தெரிவித்துள்ளார்.

மின்னல் தாக்கம் ஏற்படுவது அதிகரித்துள்ளது. பாரிய மின்னல் தாக்கங்களே காணப்படுகின்றது. ஆகவே இது குறித்து கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். மாலையில் பெய்யும் மழையை கருத்திற்கொண்டு தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். பொதுவாக வருடத்திற்கு 50 பேர் வரையில் மின்னல் தாக்கத்தினால் உயிரிழக்கின்றனர்.இதில் பெரும்பாலானவை கவனக் குறைவினாலேயே ஏற்படுகின்றது.

மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள முன்னெடுக்க வேண்டிய சில செயற்பாடுகளாக..

1. வெளியில் நிற்கக் கூடாது
2. உயர்ந்த மரத்திற்குக் கீழ் நிற்கக் கூடாது.
3. இரும்புகளை பயன்படுத்தக் கூடாது.
4. தொலைபேசிகளை பயன்படுத்தக் கூடாது.
5. மின் உபகரணங்களை பயன்படுத்தக் கூடாது.

தென்மேற்கு பருவப் பெயர்ச்சிக் காலநிலைதான் தற்போது காணப்படுகின்றது. மாலை நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்வது இந்தப் பருவப் பெயர்ச்சியின் விசேட அம்சமாகும். இந்த இடியுடன் கூடிய மழையை உருவாக்கும் மேகங்கள் மிக உயர்வாக காணப்படக்கூடியவை.இந்த மேகத்திலிருந்து பூமியை நோக்கி வரும் காற்று மணித்தியாலத்திற்கு 80 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடியவை.இதனால் மரக்கிளைகள் முறிந்து விழக்கூடும். வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்படக்கூடும். அதே போன்று ஆபத்துக்களும் ஏற்படலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

# சவூதி அரேபியா வழங்கிய பொதுமன்னிப்பு காலம் நிறைவு

சட்டவிரோதமாக சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும் நபர்களை அந்நாட்டில் இருந்து வெளியேற வழங்கப்பட்டிருந்த பொதுமன்னிப்பு காலம் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்துள்ளது. இந்த பொதுமன்னிப்பு காலத்தில் சவூதியில் சட்டவிரோதமாக தங்கியிருந்த சுமார் 10 ஆயிரம் இலங்கையர்கள் நாடு திரும்பியதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்தது. சவூதியில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலங்கையைச் சேர்ந்த 16 ஆயிரம் பேர் இந்தக் காலப் பகுதியில் அங்கு இலங்கை தூதரகத்தில் தம்மைப் பதிவுசெய்து கொண்டுள்ளனர். இவர்களில் 4 ஆயிரம் பேரை சவூதி வழங்கிய பொதுமன்னிப்பு காலத்திற்குள் இலங்கைக்கு அழைத்து வர முடியாமல் போயுள்ளது. இதனால் சவூதி வழங்கியுள்ள நிபந்தனைகளுக்கு அமைய அவர்கள் அங்கு தங்கியிருக்க முடியாது. எனினும் அவர்களை மீள அழைப்பதில் சிக்கல்கள் இருக்கின்றன.

இதனால் சவூதி அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி அவர்களை இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

சவுதி அரேபியாவில் சட்டவிரோதமாக தங்கியுள்ள வெளிநாட்டவர்களை வெளியேற்றுவதற்கு அந்நாட்டு அரசினால் வழங்கப்பட்ட விஷேட பொது மன்னிப்புக் காலம் முடிவடைந்துள்ள நிலையில் பொது மன்னிப்புக்கு உட்பட்ட சுமார் பத்தாயிரம் இலங்கையரும் நாடு திரும்பியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு வாரியம் தெரிவிக்கின்றது. கடந்த மே மாதம் 4 ஆம் திகதி முதல் நவம்பர் 3 ஆம் திகதி வரை இந்த பொது மன்னிப்புக் காலம் அந்நாட்டு அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே சுமார் 16,000 இலங்கையர்கள் சவுதி அரேபியாவில் சட்ட விரோதமாக தங்கியிருப்பதாக அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதுவராலய தகவல்கள் மூலம் அறியமுடிந்தது. இலங்கை



வெளிநாட்டு வேலைவாய்ப்பு வாரியத்தின் துணை பொது முகாமையாளரும் ஊடகப் பேச்சாளருமான மங்கள ரன்தெனிய, பொது மன்னிப்பு வழங்கப்பட்ட காலத்துக்குள் அதனைப் பெற தகுதியுடைய சுமார் 10,000 பேரும் நாட்டிற்கு அழைக்கப்பட்டு விட்டதாகக் கூறினார்.

மேலும் பெண்கள் உட்பட ஏனைய 6,000 பேரைப் பொறுத்த வரையில் சட்ட விரோதமாக தங்கியிருந்தாலும் சவுதி அரேபிய அரசாங்கத்தின் பொது மன்னிப்பு வரையறைக்குள் அவர்கள் உட்படாதவர்கள் என்றும் அவர் குறிப்பிடுகின்றார். அதாவது விசா இன்றி தங்கியிருந்தமை, கைவிரல் அடையாளங்கள் பதிவு செய்யாமை போன்ற அந்த நாட்டு சட்ட திட்டங்களை இவர்கள் மீறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரித்தானியா செல்வதற்கான பிணை வைப்பீடு இரத்து

பிரித்தானியாவுக்கு சுற்றுலா செல்பவர்கள் மூவாயிரம் பவுண்ட்ஸ்களை பிணைப் பணமாக செலுத்த வேண்டும் என்ற கட்டாய திட்டத்தை இரத்துச் செய்யவுள்ளதாக பிரித்தானிய உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.இலங்கை உள்ளிட்ட ஆறு ஆபத்தான நாடுகளில் இருந்து தமது நாட்டுக்கு பயணிப்போர் இவ்வாறான பிணைப் பணத்தை செலுத்த வேண்டும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், கானா மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் இருந்து பிரித்தானியாவுக்கு பயணம் மேற்கொள்வோருக்கு ஆறு மாத கால விசாவை வழங்க பணத்தை வைப்புச் செய்யும் திட்டம் கடந்த யூன் மாதம் முன்வைத்திருந்தது.

அது நவம்பர் மாதம் அமுல்படுத்தப்படும் என உள்துறை அமைச்சர் தெரேசா தெரிவித்திருந்தார்.

6 மாத கால விசா பெறுபவர்கள் அந்த அனுமதி காலத்தையும் தாண்டி பிரித்தானியாவில் தங்கியிருந்தால் வைப்புச் செய்த அந்தப்பணத்தை அரசாங்கம் பறிமுதல் செய்யும் என அந்த திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

விசா காலம் நிறைவடைந்து தொடர்ந்தும் பிரித்தானியாவில் தங்கியிருப்போர் அங்கு தங்கியிருப்பதை தடுக்கும் வகையில் இந்தத்திட்டத்தை கொண்டு வருவது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வந்ததாக உள்துறை அலுவலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் அதனைத்தொடர வேண்டும் என்று இன்னமும் முடிவு செய்யவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.ஆரம்பத்தில் இது ஆயிரக்கணக்கான பயணிகளை பாதிக்கும் என்றாலும் நூற்றுக்கணக்கானவர்களே அதற்கான இலக்காக இருந்ததாக கடந்த யூன் மாத அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

# ஒலியினால் ஏற்படும் மாசுக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை



பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ள அதிக சத்தத்தை வெளிப்படுத்தக் கூடிய வாகன ஒலியெழுப்பிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது. கடந்த முதலாம் திகதி தொடக்கம் சூழலுக்கு ஒலி ரீதியான மாசினை ஏற்படுத்தக் கூடிய வாகன ஒலியெழுப்பிகளை கொண்ட வாகனங்களை சுற்றி வளைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த இரண்டு தினங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புகளின் அடிப்படையில் பயணிகள் பேருந்துகளில் அதிக ஒலியினை வெளிப்படுத்தக் கூடிய ஒலியெழுப்பிகள் பொருத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.இதன்காரணமாக, எதிர்காலத்தில் தனியார் பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ள ஒலியெழுப்பிகளை பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் சாரங்க அலகப் பெரும தெரிவித்துள்ளார்.



காரைநகர் பிரதேச செயலக சர்வதேச சிறுவர் முதியோர் மாற்றலுடையோர் தினவிழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முதியவர் ஒருவர் கௌரவிக்கப்படுவதையும், சிறுவர்களின் பட்டிமன்ற நிகழ்வையும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவனுக்கு பிரதிநிதி ஒருவரால் பரிசில் வழங்கப்படுவதையும் காணலாம். (50)

## ஞானச்சுடர் மலர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலரின் ஐப்பசி மாத மலர் வெளிவந்துள்ளது.

இம்மலர் முருக நாம மகத்துவம், தினமும் பிரார்த்தனை, ஏகாதசி விரத மகிமை, விபூதியின் மகிமை, சிறுவர் கதைகள், தலயாத்திரை, சைவத் திருக்கோயில் போன்ற பல ஆன்மீக கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது.

## முரசின் இன்றைய பலன்



(05.11.2013 செவ்வாய்க்கிழமை)

விஜய வருஷம் ஐப்பசி மாதம் 19 ஆம் திகதி.
அனுச நட்சத்திரம் மு.இ - 10.18 வரை
பின் கேட்டை துதியை சித்தம்
இராகுகாலம 03.04- 04.34 வரை. சுபநேரம 10.34- 12.04 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** வெளிநாட்டுப் பிரயாணத்தை நம்பி பணம் கட்டியும் இதுவரை பதில் இல்லாமையால் கவலை, உதாசீனம் செய்தவர்கள் உதவிகேட்க நாடி வருவார்கள்.

**ரிஷபம்** வரவிருந்த திருட்டு உரியநேரத்தில் மனைக்கு விரைந்ததால் பொருட்கள் காப்பாற்றப்படல், பரீட்சை முடிவு சாதகமாக அமைந்ததால் வெளியூர் மண மகனை கைப்பிடிக்கும் யோகம் கிட்டுதல்.

**மிதுனம்** உங்கள் பதவிக் கதிரையில் அமர ஆசைப்படுவர் பற்றி மிகவும் அவதானமாக இருங்கள், கையளித்த பொறுப்பினை கனகச்சிதமாக முடித்து பாராட்டுப் பெறுதல்.

**கடகம்** மனதுக்கு இதமான செய்தி மணவீட்டாரிடமிருந்து வருவதால் ஆனந்தம், தட்டிக்கேட்க ஆளில்லாமல் அடாவழித்தனமிகுதியால் அச்ச உணர்வு ஓங்குதல்.

**சிம்மம்** பெற்றோரின் வற்புறுத்தலால் காதலைத் தியாகம் செய்து வெளியூர் மணமகனை முடிக்க சம்மதப்படல், காலாவதியான உணவுப் பண்டத்தினால் தேகநலம் பாதிக்கப்படல்.

**கன்னி** பிறன்மனைபுகும் எண்ணத்தை முளையிலே கிள்ளி எறிந்ததால் மானபங்கம் ஏற்படாமை, கடன் வசூலிக்க தனித்துச் செல்லாது துணையுடன் சென்றதால் சாதகமான முடிவு வரல்.

**துலாம்** வருந்திக்கொண்டிருக்கும் நோய்க்கு வைத்தியத்தை நாடாமையினால் ஆபத்து உருவாதல், பொறுமை சகிப்புத்தன்மையைத் தக்க வைத்ததால் தொழிலில் உயர்ச்சி தேடி வரல்.

**விருச்சிகம்** புதிய கோணத்தில் சிந்தனைக்குதிரையை தட்டி வட்டதால் பிரச்சினை சுலபமாகத் தீர்வடைதல், பழைய பிரச்சினையைச் சாட்டாக வைத்து பலர் முன்னிலையில் அவமானப்படுத்த முயன்றதால் களேபரம் உருவாதல்.

**தனுசு** தடைப்பட்டிருந்த வேலையை மாறுபட்ட அணுகு முறையைக் கையாண்டதால் வெற்றிக்கொடி நாட்டல், புதிய வேலை கிடைத்ததால் பழைய தொழிலைக் கைவிடல்.

**மகரம்** நோய் குணமடைதல், பிரச்சினை தீருமென்று காத்திருப்பதைக் கைவிட்டு முறைப்பாடு செய்ய மனதைத் திடப்படுத்தல்.

**கும்பம்** மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக்கொண்டிருக்காது காரியத்தில் இறங்குதல், விவாகப் பேச்சு முடிவின்றி இழுபடுவதால் கைவிட்டிருந்த பயணத்தில் இறங்குதல்.

**மீனம்** சிக்கல்கள் சாதகமான முடிவுக்குக் கொண்டு வருதல், சுறுசுறுப்புடன் இயங்குவதால் வேலைப்பளு நன்றாகக் குறைவடைதல்.

## மணலை பெறுவதில் நெருக்கடி கைநழுவிப்போகும் வீட்டுத்திட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட துணுக்காய் அனிச்சியன்குளம் கிராமத்தில் பயனாளிகள் மணலைப் பெறுவதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்குவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

இக்கிராமத்தில் மீள்குடியேறி வாழ்ந்து வரும் மக்களில் 132 குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் வீட்டுத்திட்டப் பணிகளை முன்னெடுக்கும் வகையில் மணலைப் பெறமுடியாதுள்ளதாகவும், இதனால் வீட்டுத்திட்டப் பணிகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாக பயனாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தமக்கு அரசாங்கத்தினூடாக வழங்கப்படும் இந்திய வீட்டுத்திட்டத்தினூடாக வீட்டைக் கட்டுவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ள போதிலும் அவை எட்டாக்கனியாக ஸ்தம்பிதமடைவதாக தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக உதவி அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத்தியுள்ளதாக பயனாளிகள் கூறுகின்றனர்.

இதேவேளை துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இக்கிராமத்திற்கு மட்டுமல்லாமல் கல்விளான், தேராங்கண்டல், யோகபுரம் மத்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள மக்களுக்கும் இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் வீட்டுத்திட்டத்தைப் பெற்றுள்ள பயனாளிகள் மணலைப் பெறுவதில் நெருக்கடிகளை எதிர்நோக்குவதாக தெரிவிக்கும் நிலையில் வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கும் மணலைப் பெறுவதற்கு ஆவண செய்யவேண்டும் என சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும் இந்நெருக்கடியால் தாம் வீட்டுத்திட்டப் பணிகளை மேற்கொள்ள முடியாது போயுள்ளதாகவும் தெரிவிக்கும் பயனாளிகள் இந்திய வீட்டுத்திட்டம் கைநழுவிப் போய் விடுமோ என மனக் கவலையுடன் இருப்பதாக அவாகள் தெரிவிக்கின்றனர். (140)

## சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான மருத்துவப் பரிசோதனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் மாற்றுவலுவுள்ளோருக்கான சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான மருத்துவப் பரிசோதனை இன்று இடம்பெறவுள்ளது.

காலை 8.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இப்பரி சோதனை நடைபெறவுள்ளது.

கொழும்பிலிருந்து வரும் விசேட மருத்துவ நிபுணர்கள் 10 பேர் பரிசோதனை நடவடிக்கை களில் ஈடுபடவுள்ளனர்.

இப்பரிசோதனை நடவடிக்கைகளுக்கு வருபவர்கள் வழமையான மருத்துவ பரிசோதனைக் கட்டணம் ரூபா 600 ஐக் கொண்டு வருதல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (90)

## மண்டைதீவு பிரதேசத்தில் நெல் விதைப்பு மும்முரம்

(மண்டைதீவு)

மண்டைதீவு பிரதேசத்தில் நெல் விதைப்பு நடவடிக்கைகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வரும் நிலையில் விதை நெல் இல்லாத விவசாயிகளுக்கு அப்பகுதியிலுள்ள விவசாயிகள் விதை நெல்லை வழங்கியுள்ளனர்.

பருவகால மழை ஆரம்பமாகியுள்ள நிலையில் தீவகத்தில் நெற்செய்கை பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி மண்டைதீவு விவசாயிகளும் விதைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள நிலையில் விதை நெல்லுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் விதை நெல்லை தமது சூட்டடியில் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தவர்களுக்கு விதை நெல் இல்லாத நிலையில் முன்னர் நல்ல விளைச்சலைப் பெற்ற விவசாயிகள் தமக்கென வைத்திருந்த நெல்லை ஏனைய விவசாயிகளுக்கும் விதைப்பதற்கு வழங்கியுள்ளனர்.

இச்செயற்பாட்டை எண்ணி மண்டைதீவு விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளதுடன் பாராட்டியுள்ளனர்.

எனினும், மழைவீழ்ச்சி குறைந்தாலோ அல்லது அதிக மழை பொழிந்து வெள்ளம் ஏற்பட்டாலோ மறுவிதைப்புக்கு மேலதிக நெல் கையிருப்பில் இல்லை எனவும் விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (23)

## கலைஞர்களுக்கு கௌரவம்

(யாழ்.நிருபர்)

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவனத்தில் நடைபெற்ற இலககிய விழாவில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 12 தமிழ், முஸ்லிம் கலைஞர்கள் வித்தகர் விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த இரா.தவராசா, கா.நடராசா, வீ.இராசமாணிக்கம், மு.கா.மு., முஸ்தபா திருகோணமலையைச் சேர்ந்த இ.தம்பிராசா, சாரதாதேவி ஸ்ரீஸ்கந்தராசா, மு.மெ.அலிஅக்பர், மீ.அ.பரீது, அம்பாறையைச் சேர்ந்த ந.பூபாலரத்தினம், கா.வீரக்குட்டி முபீதா உஸ்மான், அ.ம.மு.பாறூக் ஆகியோரே கௌரவம் பெற்ற கலைஞர்களாவர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் 2012 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நூல்களில் சிறந்த நூல்களாகத் தெரிவு செய்யப்பட்ட நூல்களின் படைபபாளிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா பணப் பரிசிலும் விருதும் வழங்கப்பட்டதோடு, பொன்னாடை போர்த்தியும் கௌரவிக் கப்பட்டனர். (10)




கிண்ணம் வழங்கப்படுவதையும், சம்பியன் அணியையும் காணலாம்

# கிண்ணம் மன்னார் சென். ஜோசப் வசம்

(மன்னார்)

கால்பந்தாட்ட சம்மேளன தலைவரின் வெற்றிக் கிண்ணத்தை மன்னார் பனங்கட்டுகொட்டு சென் ஜோசப் அணி கைப்பற்றிக்கொண்டது. கால்பந்தாட்ட சம்மேளன தலைவரின் வெற்றிக்கிண்ணத்திற்கான கால்பந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாலை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பல அணிகள் பங்குபற்றின.

கடந்த ஒரு மாதகாலமாக நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் சென்ஜோசப் அணியும் கிறின்பீல்ட் அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதிக் கொண்டன. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சென். ஜோசப் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.


இப்போட்டி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி மற்றும் விளையாட்டுதுறை அமைச்சர் தி.குருகுலராஜா, கௌரவ விருந்தினராக வடமாகாண கடற்றொழில்,போக்குவரத்து , கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர்களான பிறிமுஸ் சிராய்வா , ஆர்னோல்ட், மன்னார் நகரசபை முதல்வர் எஸ்.ஞானபிரகாசம் மற்றும் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன தலைவர் றஞ்சித் றொட்றிகோ, மன்னார் நகரசபை உறுப்பினர் டிலான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இரண்டாவது முறை சம்பியன்



மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில், சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றார். பிரான்ஸ் தலைநகர் பாரிசில், மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர் நடைபெற்றது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், உலகின் இரண்டாம் நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜோகோவிச்,3ஆவது இடத்தில் உள்ள ஸ்பெயினின் டேவிட் பெரரை எதிர்கொண்டார். அபாரமாக ஆடிய ஜோகோவிச் 7-5, 7-5 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். இது, மாஸ்டர்ஸ் ரென்னிசில் ஜோகோவிச்சின் இரண்டாவது பட்டம். முன்னதாக 2009இல் நடந்த இறுதிப் போட்டியில், பிரான்சின் மோன்பில்சை வீழ்த்தி முதன்முறையாக கோப்பை வென்றார்.

# 3ஆவது இந்திய வீரர்



(டுபாய்)

ஒருநாள் போட்டிகளுக்கான சர்வதேச கிரிக்கெட் சபையின் தரவரிசைப் பட்டியலில் இந்திய வீரர் ஹோலி முதல் முறையாக முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளார். நட்சத்திர வீரர் சச்சின், கப்டன் டோனியை தொடர்ந்து முதல் இடத்தைப் பிடிக்கும் 3ஆவது இந்திய வீரர் என்ற பெருமை ஹோலிக்குக் கிடைத்துள்ளது.

அவர் 857 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், தென்னாபிரிக்காவின் அம்லா (844) 2ஆவது இடத்திலும் உள்ளனர். இந்திய தொடரில் மிக சிறப்பாக விளையாடிய ஆஸி. அணி கப்டன் பெய்லி (835) 3ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

ஐ.சி.சி. ஒருநாள் தரப்படுத்தலில் முதல் 10 துடுப்பாட்ட வீரர்கள் வருமாறு:

| தரநிலை | வீரர் | புள்ளி |
|---|---|---|
| 01 | ஹோலி (இந்தியா) | 857 |
| 02 | அம்லா (தென்னாபிரிக்கா) | 844 |
| 03 | ஜோர்ஜ் பெய்லி(ஆஸி.) | 835 |
| 04 | சங்கக்கார (இலங்கை) | 829 |
| 05 | டிவில்லியர்ஸ்(தென்னாபிரிக்கா) | 826 |
| 06 | டோனி (இந்தியா) | 780 |
| 07 | ஜொனாதன் ட்ரொட் (இங்கி.) | 754 |
| 08 | டில்சான் (இலங்கை) | 746 |
| 09 | மிஸ்பா உல் ஹக்(பாக்.) | 720 |
| 10 | வட்சன் (ஆஸி.) | 708 |

# சச்சினின் மறு உருவம் ஹோலி

## இயன் சப்பால் கணிப்பு

ஒரு நாள் போட்டியில் சச்சினின் மறு உருவமாக ஹோலி உருவெடுத்திருப்பது பந்து வீச்சாளர்களுக்கு தொல்லைதான் என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வீரர் இயன் சப்பால் தெரிவித்துள்ளார். சச்சின் ஓய்வு பெற உள்ள நிலையில், அவுஸ்ரேலிய பந்து வீச்சாளர்கள் நிம்மதி பெருமூச்சுவிடலாம். இது அதிக காலம் நீடிக்க வாய்ப்பு இல்லை. ஏனென்றால் சச்சின் இடத்தை பூர்த்தி செய்ய ஹோலி உள்ளார். சமீபத்தில் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக இவர் அடித்த இரண்டு அதிரடி சதங்கள் இந்தியாவுக்கு வெற்றி தேடிக் கொடுத்தன. இது 1997-08இல் சார்ஜாவில் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக சச்சின் அடித்த சதங்களை நினைவுபடுத்தின. துடுப்பாட்ட வரிசையில் சச்சினின் 4ஆவது இடத்தை ஹோலி நிரப்பலாம். இவர், எதிரணி பந்து வீச்சாளர்களுக்கு தொடர்ந்து தொல்லைக் கொடுப்பார் என்பதில் சந்தேகமில்லை. சேஸிங் செய்யும்போது, அணியின் வெற்றியில் ஹோலியின் பங்கு கணிசமாக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பேரானந்தம்

நியூசிலாந்து அணிக்கெதிரான ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியமையானது பேரானந்தத்தை அளிப்பதாக பங்களாதேஷ் அணிக் கப்டன் முஷ்பிகுர் ரஹிம் தெரிவித்துள்ளார்.

பந்து வீச்சாளர்கள், துடுப்பாட்ட வீரர்கள் என அனைத்துத் துறைகளிலும் எமது வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியமையே நியூசிலாந்துடனான ஒரு நாள் தொடரை இலகுவாக வென்றமைக்குக் காரணம். டெஸ்ட் தொடரையும் வெல்லக் கூடிய வாய்ப்பு எங்களுக்கு இருந்தபோதும் அதனை நாங்கள் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டோம். இருப்பினும் சோர்வடையமால் ஒரு நாள் தொடரை வென்றது பெரு மகிழ்ச்சி அளிக்கின்றது. தொடர்ந்து வரும் போட்டிகளிலும் திறமைகளை வெளிப்படுத்தி வெற்றிகளைக் குவிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சாதிக்க உதவிய புதிய விதி



ஒருநாள் போட்டியில் இரட்டைச்சதம் அடித்தது மகிழ்ச்சியாக உள்ளது. இதற்கு, ஐ.சி.சி.,யின் புதிய களத்தடுப்பு விதிமுறைகள் கைகொடுத்தன. இதன்படி, கடைசி 10 ஓவரில் ஐந்து களத்தடுப்பாளர், 30 யார் வட்டத்துக்குள் நிறுத்த வேண்டும் என்பதால், அதிரடியாகவும், சுலபமாகவும் ஓட்டங்களைச் சேர்க்க முடிந்தது என இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரோகித் சர்மா தெரிவித்துள்ளர்.

பொதுவாக போட்டியில், அதிரடி ஆட்டத்துக்கு மாற சிறிது நேரம் எடுத்துக் கொள்வேன். இதுதான் எனது துடுப்பாட்ட ஸ்டைல்.சமீபத்தில் ஜெய்ப்பூரில் நடந்த போட்டியிலும் இந்த முறையை கையாண்டேன். அதே முறையையே பெங்களூர் வெளிப்படுதினேன். ஆரம்பத்தில் நிதானமாக ஆடி, பின் அதிவேகமாக ஓட்டங்களை எடுத்தேன். இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையில் நடுவரிசையில் களமிறங்க தேர்வு செய்யப்பட்டேன். ஆனால் போட்டியில் ஆரம்ப வீரராக களமிறக்கப்பட்டேன். இப்பணியை சிறப்பாக செய்தது மகிழ்ச்சி அளிக்கிறது. வரும் காலங்களில் எந்த வரிசையில் களமிறங்குவேன் எனத் தெரியாது. டெஸ்ட் போட்டியில் விளையாட வேண்டும் என்பது நீண்ட நாள் கனவு, இலக்கு. வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்பேன். டெஸ்ட் போட்டியிலும் சாதிக்கும் பட்சத்தில், என்னை விட மகிழ்ச்சியான வீரர் யாரும் இருக்க முடியாது என்று தான் கூறுவேன் என அவர் மேலும் தெரிவித்தார்.




சச்சினின் 199ஆவது டெஸ்ட் போட்டிக்காக கொல்கத்தாவில் பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கொல்கத்தாவில் தனது 199ஆவது டெஸ்டில் (நாளை ஆரம்பமாகவுள்ளது) பங்கேற்கிறார். இதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன. போட்டி நடக்கும் ஈடன் கார்டன் மைதானத்தின் முன்பு சச்சினின் மெகா கட் அவுட்கள் வைக்கப்பட்டுள்ளன. இவரது சாதனை படங்கள் அடங்கிய அலங்கார வாகனத்தை நேற்று மேற்கு வங்க கிரிக்கெட் சங்க தலைவர் ஜக்மோகன் டால்மியா, கொடி அசைத்து ஆரம்பித்து வைத்தார். சச்சின் மெகா கட் அவுட்டையும், அலங்கார வாகனத்தையும் காணலாம்.

# வென்றது மட்ரிட்

(மட்ரிட்)

ரேயோ வலேகெனோ அணிக்கு எதிரான லா லிகா கால்பந்து தொடரின் லீக் போட்டியில் ரியல் மட்ரிட் அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் உள்ளூர் கிளப் அணிகள் பங்கேற்கும் லா லிகா கால்பந்துத் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் லீக் போட்டியில் ரியல் மட்ரிட், ரேயோ வலேகெனோ அணிகள் மோதின. முதல் பாதியில் ரியல் மட்ரிட் அணிக்கு கிறிஸ்டியானோ ரொனால்டோ (3ஆவது நிமிடம்), கரீம் பென்ஜிமா (31ஆவது நிமிடம்) ஆகியோர் கோல் அடித்தனர். இதற்கு ரேயோ அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

தொடர்ந்து நடந்த இரண்டாவது பாதியில் ரியல் மட்ரிட் அணிக்கு நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ (48ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு ரேயோ அணியின் ஜெனாதன் வியாரா (53, 55ஆவது நிமிடத்தில்) அடுத்தடுத்து இரண்டு கோல் அடித்து பதிலடி கொடுத்தார். முடிவில், ரியல் மட்ரிட் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# சங்காவுக்கு கிளியில் உற்சாக வரவேற்பு



(கிளிநொச்சி)

இலங்கை அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டார். முரளி நல்லிணக்க ருவென்ரி-20 தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த பாடசாலைகள் கூட்டு அணிகள் மோதி வருகின்றன. கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டிக்கு விசேட அதிதியாக குமார் சங்கக்கார கலந்து கொண்டார். வீரர்கள் அணிவகுத்து நிற்க, பாண்ட் வாத்திய இசையுடன் சங்கக்காரவுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதன் போது வீரர்களுடன் உரையாடிய சங்கக்கார, கிரிக்கெட் நுணுக்கங்கள் குறித்தும், அடுத்த நிலைக்கு விரைவாக முன்னேற வேண்டும் எனத் தெரிவித்தார்.

# அரச அதிபர் கிண்ணக் கால்பந்து இறுதியில் தெல்லிப்பளை, கரவெட்டி

(கரவெட்டி)

அரச அதிபர் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு தெல்லிப்பளை மற்றும் கரவெட்டி பிரதேச செயலக அணிகள் தகுதி பெற்றுள்ளன.

யாழ். மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் பிரதேச செயலக பணியாளர்களுக்கிடையில் நடாத்தப்பட்டு வரும் அரச அதிபர் வெற்றிக்கால்பந்தாட்டத் தொடரின்அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் பருத்தித்துறை இமையாணன் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில்நடைபெற்றது.

இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும், பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தின. இறுதியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் கரவெட்டிப் பிரதேச செயலக அணியும், நல்லூர் பிரதேச செயலக அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே கரவெட்டி பிரதேச செயலக அணி ஆதிக்கம் செலுத்தியதுடன் கோல் மழை பொலிந்தது. இறுதியில் கரவெட்டி பிரதேச செயலக அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(எஸ்.பி.)

## இன்றைய ஆட்டம்

(சங்கானை)

சங்கானைக் கல்வி கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட கால்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகளில் 14, 16, 18 வயதுப் பிரிவு அணிகள் மோதவுள்ளதாகவும், போட்டிகள் அட்டவணை பங்குபற்றும் அனைத்துப் பாடசாலைகளுக்கும்அனுப்பப்பட்டிருப்பதாகவும், எனவே, பங்குபற்றும் அனைத்து அணிகளையும்உரிய வேளைக்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறு சங்கானைக் கோட்ட உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (93)

(நெல்லியடி)

வடமராட்சிக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கோட்ட மட்ட கால்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் மற்றும் இமையாணன் மத்திய விளையாட்டு மைதானங்களில் இடம்பெறவுள்ளது.

இதில் 14, 16, 18 ஆகிய வயதுப் பிரிவு அணிகள் மோதவுள்ளன. இப்போட்டிகளில் பங்குகொள்ளும் அணிகளை குறித்த நேரத்திற்கு வருகை தந்து போட்டியை விரைவாக நடாத்தி முடிக்க ஒத்துழைப்புத் தருமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (93)

# நட்சத்திரங்களின் மாபெரும் கால்பந்து கிண்ணம் வென்றது மானிப்பாய் இந்து



(சுன்னாகம்)

நட்சத்திரங்களின் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி கைப்பற்றிக் கொண்டது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட நட்சத்திரங்களின் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி கடந்த 2ஆம் திகதி ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகிய அணிகள் மோதின.

விலகல் முறையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் மோதின. ஆட்டம் ஆரம்பமாகிய முதல் நிறைவடையும் வரை மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மாறி மாறி கோல் மழை பொலிந்ததுடன் முழுமையான ஆதிக்கம் செலுத்தியது. இதற்குப் பதில் கோல் போடும் முயற்சியை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி வீரர்களால் மேற்கொள்ளப்பட்டபோதும் இறுதி வரையும் அது பலனளிக்கவில்லை. இறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றி நட்சத்திரங்களின் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணியும், யூனியன் கல்லூரி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய மகாஜனக் கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. இப்போட்டி நிகழ்வில் அணி ஆதரவாளர்கள், ஆசிரியர் குழாம், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியாளர்களை உற்சாகப்படுத்தினர். (93)

## நாளைய ஆட்டம்

(தெல்லிப்பளை)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்படுகின்ற பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் இனிங்ஸ் போட்டி தற்போது நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது.

இதில் நாளைய தினம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி மோதவுள்ளது.

இரு அணிகளுமே சமபலம் கொண்ட அணி என்பதால் இப்போட்டி மிகுந்த விறுவிறுப்பு நிறைந்ததாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இருப்பினும் இந்த வருடம் சில வெற்றிகளைப் பதிவாக்கியுள்ள மகாஜனக் கல்லூரி அணிக்குச் சொந்த இடத்தில் இப்போட்டி இடம்பெறுவது கூடுதல் பலத்தை அளிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

(93)

# 3 பிரிவுகளில் யாழ். மத்தி வெற்றி

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான கால்பந்தாட்டப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி மூன்று பிரிவுகளில் வெற்றிபெற்றது. மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்குமிடையிலான நட்புறவு ரீதியான கால்பந்தாட்டப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மாலை 2 மணி முதல் இடம்பெற்றது. இப்போட்டியில் இரு பாடசாலைகளினதும் 14,16,18,20 வயதுப் பிரிவு அணிகள் மோதின.

.14 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் ஆட்டம் ஆரம்பமாகிய சிறிது நேரத்தில் மத்திய கல்லூரி கோல் ஒன்றைப் பெற்றுக் கொண்டது. தொடர்ந்து இரு அணிகளும் கோல் போட எடுத்த முயற்சிகள் பலனளிக்காமையால் போட்டி 1:0 என்னும் கோல் கணக்கில் யாழ். மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.

16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இரு அணிகளும் முற்பாதியாட்டம் வரை 1:1 என்னும் கோல் அடிப்படையில் சமநிலையிலிருந்தது. பின் இரண்டாவது பாதி ஆட்டத்தில் கிடைத்த சந்தப்பத்தை சாதகமாகப் பயன்படுத்திய யாழ். மத்திய கல்லூரி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

18 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

20 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி முழுமையாக ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்தில் முதலாவது கோலினை மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி பெற்றுக் கொண்டது. பின் சிறிய இடைவெளியில் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டது. இறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (48)

## நாளை 3ஆவது ஒரு நாள்

(டுபாய்)

பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் மூன்றாவது போட்டி நாளைய தினம் டுபாயில் இடம்பெறவுள்ளது.

இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றிகளைப் பதிவாக்கியுள்ள நிலையில் மூன்றாவது போட்டியில் வெற்றி பெறும் முனைப்புடன் இரு அணிகளும் களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


இதேவேளை, இரண்டாவது போட்டியில் இலகுவான வெற்றியிலக்கான போதும், அதில் தோல்வியடைந்தது ஏமாற்றம் அளிக்கின்றது. இது ஒட்டுமொத்தமாக துடுப்பாட்ட வீரர்களே பொறுப்பேற்க வேண்டும்.

இருப்பினும் அடுத்து வரும் போட்டிகளில் ஒருங்கிணைந்து செயற்பட்டு தொடரைக் கைப்பற்றிக் கொள்வோம் என தென்னாபிரிக்க அணிக் கப்டன் டிவில்லியர்ஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கூறிக்கொண்டு பேச்சுக்களை தொடர்வதாகக் கூறும் இரு தரப்புக்கிடையேயும் உண்மையாகவே பிரச்சினைகளை தீர்க்கும் நோக்கம் ஏதாவது இருக்கிறதா என இந்த இடத்தில்

# உருவாகும் முரண்பாடுகளை தீராப்பிரச்சினையாக்குதல்

- சாலையூரான் -



இலங்கையில் தமிழ் மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான முரண்பாடு தீராப்பிரச்சினையாக தொடர்வதற்கான நிலையான அடித்தளம் இப்போது உறுதியாகிவிட்டிருப்பதாக தெரிகிறது.

எமது மக்களுக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை என எண்ணத்தோன்றும் இந்த நிலை தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தீர்வுப்பேச்சுக்கான வெவ்வேறு தீர்க்கமான சந்தர்ப்பங்களில் அவ்வப்போது தன்னை வெளிக்காட்டிக்கொண்டபோதும் வடக்கு மாகாண சபை தேர்தலுக்குப்பிறகு இந்த அவநம்பிக்கையான போக்கு இன்னும் தீவிரமடைந்திருப்பதாக தெரிகிறது.

இதுவிடயத்தில் பிரச்சினைகளை தீர்க்கப்போவதாக கேட்கத்தோன்றுகிறது.

இலங்கையில் இனப்பிரச்சினை தோன்றிய காலந்தொட்டு இருதரப்பு தலைமைகளும் இனத்துவ நிலைப்பட்டு தம்மை தலைவர்களாக்கிக்கொள்ள வேண்டும் என்கிற குறிக்கோளும் கூடவே தொழிற்பட்டிருப்பதன் விளைவு, பிரச்சினைகள் தீராப்பிரச்சினைகளாக்கப் பட்டிருக்கின்றன.

இந்த முரண்பாட்டின் உள்ளடக்கம், வெவ்வேறு காலங்களில் நடைபெறும் தேர்தல்களில் அதிகாரத்துக்கு வரும் இரு தரப்புக்களும் பரஸ்பரம் ஒன்றுடனொன்று தம்மை வெறுப்பேற்றிக் கொள்வதை எப்போதும் தமது திட்டத்தின் ஒரு பிரதான பகுதியாக வைத்துக்கொண்டிருப்பதாகும்.

இந்த வெறுப்பேற்றலை இருதரப்பிலும் சாமானியக் குடிமக்கள் மத்தியில் நியாயமானதென நம்ப வைக்கும் இந்தப் போக்கினுள்ளே இதில் இன்னும் பல உள்நோக்கங்கள் பொதிந்திருப்பதாகத் தெரிகிறது.

உரிமைக்கான வேண்டுதலை அடிநாதமாகக் கொண்டு உருவாக்கும் அல்லது உருவாகும் முரண்பாடு இனத்துவ நிலைப்பட்டு உரிமைக்கான வேண்டுதல்களாக முன்வைக்கப்பட்ட பின் அவை கிடைக்க முடியாத அல்லது அடைந்துகொள்ள முடியாத கோரிக்கைளாக பட்டியலிடப்படுகின்றன.

கூடவே அவை கிடைப்பதற்கு சாத்தியமா இல்லையா என்பதை தமிழ் மக்கள் பரிசீலிப்பதற்கு கால அவகாசமில்லாமலே அவற்றை அடைந்து கொள்வதற்காக போராடுவது என்பது தீர்க்கமானதாக அறிவிக்கப்படுகிறது. இப்போது இந்த அறிவிப்பை புனிதமானதாக அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தத் தீர்மான அறிவிப்புக்கு பிறகு அதனை முன்னெடுப்பது என்பது அறிவிக்கப்பட்டதன் பின் ஏற்படும் இழப்புக்கள் சிரமங்களின் போது உருவாகும் அவநம்பிக்கைகள், குழப்பங்கள், தடுமாற்றங்களின் போது இரு தரப்பு தலைமைகளாலும் தம்மீது பழிகள் விழுந்துவிடாதவாறு அவை ஊடகங்களின் உதவியுடன் பரஸ்பரம் எதிர்த்தரப்புக்கள் மீது ஏற்றிவிடப்படுகின்றன. போதாக்குறைக்கு ஏற்படும் ஒவ்வொரு இழப்பின் போதும் அந்த இழப்பு தேசத்துக்கானதாக அறிவிக்கப்பட்டு அதற்கு பாத்திரமானவர்கள் புனிதர்களாக அறிவிக்கப்படுகிறார்கள்.

அந்த அறிவிப்பை மேலும் வலுவுள்ளதாக ஆக்கவென இதனை நாட்டு மக்களுக்கு துணிச்சலுடன் அறிவிப்பவர் தீரம்மிக்க நாட்டுப்பற்றாளராக அறிவிக்கப்பட்டு அவரைப் போன்ற பலர் முன்னணி அரங்குக்கு கொண்டுவரப்படுகிறார்கள்.

இதுதான் நாட்டின் தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையிலான இனத்துவ நிலைப்பட்ட விடுதலைப் போரின் விதியாக இருக்கிறது. இந்த நிகழ்ச்சிப்போக்கின் விளைவுகளை இப்போது நாம் நேரடியாக அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இதில் அரசும் தமிழ் தரப்பும் எதிர்கொண்டிருக்கும் பிந்திய அனுபவம் சற்று வித்தியாசமானதாக இருக்கிறது.

கௌரவப்பிரச்சினை இருதரப்புக்கும் உச்சம் பெற்றுவிட்ட பின் முடிந்தால் நீயும் செய்துபார் என்பது போல் அரசுத்தரப்பும் களத்தில் இறங்கி இருப்பதாக தெரிகிறது.

தேர்தல் வெற்றிக்களிப்பில் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வை காணப்போவதாக கூறிக்கொண்டிருக்கும் தமிழ்க் கூட்டமைப்பினர் தமது தரப்புக்களை திருப்திப்படுத்துவதற்காக எதிர்த்தரப்பை சிக்கலான, தன்மானத்தை கிளறிவிடும் நிர்ப்பந்தத்துக்கு தள்ளிவிட்டதில் ஏற்பட்டிருக்கும் விளைவு இது.

அத்தோடு சேர்த்து உள்நாட்டில் பேசித்தீர்க்கும் முயற்சிகளுக்குப் பதில் வெளிச்சக்திகள் மீது தமிழ் மக்களை நம்பிக்கை வைக்க எமது தலைவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டதன் விளைவும் இதில் சேர்ந்திருக்கிறது. இப்போது வடக்கு மாகாண சபை நிர்வாகத்தை தொடரலாமா இத்தோடு விட்டுவிடலாமா என சிந்திக்குமளவுக்கு மிகவும் சங்கடமான நிலைக்கு தமிழ்க் கூட்டமைப்பினர் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

பதிலுக்கு தமிழ் தலைமைகளுடன் இனிமேல் பேச்சுக்களுக்குப் போவதா இல்லையா என சிந்திக்குமளவுக்கு அரசுக்கும் தன்மானப் பிரச்சினைகள் உச்சம் பெற்றுவிட்டதாக தெரிகிறது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்குப் பிறகு வெற்றிக்களிப்பில் அரசு மீது தாம் விடுத்த தொடர் அறிவிப்புக்கள் தமிழ் மக்களின் நலனில் இருந்து உண்மையில் தேவையானவையா? என்பதை தமிழ் கூட்டமைப்பினர் மறுபரிசீலனைக்குட்படுத்த வேண்டிய தருணம் இது.

# போராடும் கலைஞன்

- ஷங்கர்ராமசுப்ரமணியன் -

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்து மறைந்துபோன கொரிய ஓவியக் கலைஞன் ஜாங் சியுங்-இயோப். ஓவிய மேதைமைக்காகவும் தாறுமாறான நடத்தைகளுக்காகவும் அறியப்பட்டவன். கொரியாவில் ஏழைக் குடும்பத்தில் பிறந்து, சிறு வயதில் பல அவமதிப்புகளோடு வளர்ந்த அந்த ஓவியனால், தான் வளர்ந்த பிறகு, தனது ஓவியங்களுக்கு சமூகம் கொடுத்த கௌரவத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத நிலை இருந்துள்ளது. அகௌரவம் மற்றும் அநாகரீகம் என பொதுசமூகம் கருதும் வாழ்வை நடத்தியதின் வழியாக அவன் சமூகத்தைத் தொடர்ந்து அவமதித்தவன். குடி, வரைமுறையற்ற உறவுகள், வன்முறை நடத்தைகளே அவனது அன்றாடமாக இருந்துள்ளது. அக்கலைஞனின் வாழ்க்கை தொடர்பாகக் கிடைத்த சிதறலான தகவல்களிலிருந்தும், சொற்பமாகக் கிடைத்த அவனது ஓவியப் படைப்புகளிலிருந்தும் தூண்டுதல் பெற்றுக் கற்பனையையும் சேர்த்து உருவாக்கப்பட்ட திரைப்படமே பெயிண்டட் பயர்.

இலத்தீன் அமெரிக்க ஓவியக் கலைஞர் ப்ரைடா காலோ பற்றிய திரைப்படமான ப்ரைடாவோடு ஒப்பிடத் தகுந்த படம் இது. ஆனால் ப்ரைடாவை விட பெயிண்டட் பயர் திரைப்படம் ஆழமும், கவித்துவமும் கொண்டது.

ஒரு முரட்டுத் தாளில் பதற்றத்துடனும், அலைக்கழிப்புடனும் உருவாகும் கோடுகளை ஒரு கை வரைவதிலிருந்து படம் தொடங்குகிறது. பெரும் நெருக்கடிகளுடனும், கொந்தளிப்புடனும் உருவான கோடுகள் ஆழ்ந்த அமைதி கொண்ட ஓவியமாக உருமாறுகின்றன. இதுதான் படத்தின் முதல் காட்சி. அப்படி வரையப்படும் ஓவியங்கள்தான் கலை பற்றிய உணர்வேயற்ற பணக்காரர்களின் கைகளைச் சேர்கிறது என்ற ஆழ்ந்த விமர்சனத்துடன் படம் தொடங்குகிறது.

ஜப்பானியப் பேரரசின் தலையீட்டுக்குக் கொரிய நாடு உள்ளாகும் பின்னணியில், அங்குள்ள குடியானவர்களின் போராட்டம், பொம்மை அரசைக் கவிழ்த்து ஏற்கனவே உள்ள நிலப்பிரபுத்துவ



அமைப்பைக் குலைத்துப் போடுகிறது. புதிய சோசலிஷ அமைப்பில், ஏற்கனவே அரசவையினரால் போற்றப்பட்ட கலைஞர்களின் வாழ்வு நிராதரவாகிறது. இந்தப் பின்னணியில் ஓவியனாகும் ஜாங் சியுங்-இயோப், தனது சிறந்த படைப்புகள் பாமரர்கள் கையில் செல்வதைவிடத் தானே அவற்றை அழிக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறான். குடியிலும், பெண் நாட்டத்திலும், வன்முறைகளிலும் அதீதமாக ஈடுபடுகிறான். ஒரு கட்டத்தில் கண் பழுதுபட்டுப் போக, கோடுகளை நேர்த்தியாக வரைய முடியாது என்ற நிலை வரும்போது, யாரும் அறியாத ஒரு இடத்துக்குப் போய் பீங்கான குடுவைகளைச் சுடும் சூளைக்குள் புகுந்து சுவடே இல்லாமல் மறைந்துபோகிறான்.

கொரிய ஓவியப் பாணியிலேயே மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் ஒரு கலைஞனின் அலைக்கழிப்பான வாழ்வை நடிகர் சோய் மின்-சிக் அற்புதமாகச் சித்தரித்திருப்பார். ஏழை மக்களின் வாழ்க்கையோடு, அதன் சகல கொண்டாட்டங்கள், துயரங்களையும் வெளிப்படுத்தியதில் செவன் சாமுராயின் டோசிரோ மிபுனேயை நினைவுபடுத்தும் நடிகர் இவர். கொரியாவின் இயற்கை எழில்வாய்ந்த நிலக்காட்சிகளை ஒரு ஓவியனின் கண்களால் படம்பிடித்த திரைப்படம் இது.

தான் வாழும் சமூகத்துக்கும், கலாசாரத்துக்கும் மிகப் பெரிய படைப்புப் பங்களிப்புகளைச் செய்யும் கலைஞர்கள் ஏன் சொந்த வாழ்வில் நிலைகுலைந்தவர்களாக இருக்கிறார்கள்? துயரங்களால் அலைக்கழிக்கப்படுபவர்களாகவும், துயரங்களைத் தேடித் துரத்துபவர்களாகவும் அவர்கள் ஏன் வதைபடுகிறார்கள் என்ற கேள்வியை எழுப்பும் படைப்பு இது.

மனித குலத்துக்கு மிகப் பெரிய அழகைப் பரிசாகத் தரும் ஒரு கலைஞன் தனது வாழ்வை ஏன் அலங்கோலமாக்கிக் கொள்கிறான்? இதைத்தான் பெயிண்டட் பயர், கொரிய ஓவியக் கலைஞன் ஜாங் சியுங்-இயோப் வாழ்க்கை வழியாக ஆழமாக விசாரிக்கிறது.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் கொரியாவில் இருந்த ஓவிய முறைமைகள், பாணிகள், பயன்படுத்தப்பட்ட பொருட்கள் ஆகியவற்றை மிகவும் நம்பத்தகுந்த வகையில் சித்தரிக்கும் படம் இது. க்வான் டய்க் இம் இயக்கிய திரைப்படம் இது. இந்தப் படத்தின் ஒளிப்பதிவாளர் ஜியாங் சங் குறிப்பிடத்தகுந்தவர். இப்படம் 2002இல் வெளியானது.

# சவால்

ஒரு கிராமத்தில் இருந்த பண்ணையார் மிகவும் திமிர் பிடித்தவர். ஊர் மக்கள் அனைவரும் தனக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்பது அவருடைய எண்ணம்.

அந்தக் கிராமத்தில் மூஸா எனும் ஓர் இளைஞன் வசித்து வந்தான். அவன் மிகவும் புத்திக்கூர்மை உடையவன்.

ஒரு நாள் பண்ணையார் தனது குதிரையில் அமர்ந்து கிராமத்தைச் சுற்றி வந்தார். ஊர் மக்கள் அவரைக் கண்டால் நடுங்குவார்கள். அதனால் அவர் எதிரே வருவதைக் கண்டவுடன் அவரை வணங்க ஆரம்பித்தார்கள். மூஸா மட்டும் அவரை வணங்கவில்லை. இதைக் கவனித்த அந்தப் பண்ணையார் மூஸாவை அழைத்தார்.



"நீ யார்?"

"என் பெயர் மூஸா"

"நீ எந்த ஊர்? உன்னைப் பார்த்தால் இந்த ஊர் மாதிரி தெரியவில்லையே!"

"இந்த உலகத்தில் உள்ள அனைத்து ஊர்களும் எனது ஊர்தான்... தற்போது இந்த ஊரில் இருக்கிறேன்"

"நீ ஏன் என்னை வணங்கவில்லை?"

"நான் எதற்காக உங்களை வணங்கவேண்டும்? என்னைவிட புத்திக்கூர்மை அதிகம் உள்ளவர்களைத்தான் நான் வணங்குவேன்"

இதைக் கேட்ட பண்ணையாருக்குக் கோபம் வந்துவிட்டது.

"நான் உனக்கு ஒரு சவால் விடுகிறேன். அதில் நீ ஜெயித்துவிட்டால் உன்னை புத்திசாலி என ஒப்புக்கொள்கிறேன்"

இவ்வாறு பண்ணையார் சொன்னதும் மூஸா அதற்கு ஒப்புக்கொண்டான்.

"என்ன சவால் என்று சொல்லுங்கள்"

"என்னைக் குதிரையின் மீதிருந்து, நீ உன் பேச்சு சாமர்த்தியத்தால் இறக்க வேண்டும். அதுவே சவாலாகும்"

மூஸா யோசித்தான்... "பண்ணையார் அவர்களே, நீங்கள் கீழே நின்றால் உங்களைக் குதிரையின் மீது ஒரு நொடியில் ஏற்றிவிடும் சாமர்த்தியம் எனக்கு இருக்கிறது. நீங்கள் குதிரையில் இருந்து இறக்கச் சொல்லுகிறீர்களே!"

"அப்படியா, சரி... உன்னுடைய சாமர்த்தியத்தை நான் பார்க்கிறேன்"

உடனே குதிரையிலிருந்து கீழே இறங்கினார் பண்ணையார்.

"சரி, இப்போது என்னைக் குதிரை மீது ஏறச் செய் பார்க்கலாம்"

இதைக் கேட்ட மூஸா சத்தம் போட்டுச் சிரித்தான்...

"என்னைப் பார்த்து ஏன் சிரிக்கிறாய்?"

"குதிரை மீது இருந்து உங்களை இறக்க வேண்டும் என்று சொன்னீர்கள். உங்களை இறக்கி விட்டேன் பார்த்தீகளா?"


மூஸாவின் வாய் ஜாலத்தில் தான் ஏமாந்து போனதை உணர்ந்த பண்ணையார் கோபமாகக் குதிரை மீது ஏறி அமர்ந்து, புறப்படத் தயாரானார்.

"பண்ணையாரே, மீண்டும் நீங்கள் தோற்றுவிட்டீர்கள். குதிரை மீது உங்களை ஏற்றி உட்கார வைத்து விட்டேன் பார்த்தீர்களா?"

இப்போது மீண்டும் தான் ஏமாந்து விட்டதை உணர்ந்த பண்ணையார் அவமானத்தால் அங்கிருந்து வேகமாகப் புறப்பட்டுச் சென்றார்.

ஊர் மக்கள் மூமூஸாவின் புத்திசாலித்தனத்தை வியந்து பாராட்டினார்கள்.

# டைட்டானிக் திரைப்படம்




◗ இப்படத்தை உருவாக்க ஒரு சிறப்பு ஸ்டுடியோ உருவாக்கப்பட்டது.

◗ ட்வென்டியத் சென்சுரி ஃபொக்ஸ் நிறுவனம் இதற்கென்றே மெக்சிகோவில் 40 ஏக்கர் நிலத்தை வாங்கியது. அதில் இரண்டு பிரமாண்டமான தண்ணீர் தொட்டிகளை அமைத்தார்கள். ஒன்றின் ஆழம் 90 அடி. அகலம் 800 அடி. இந்தத் தொட்டிதான் கடலாகும். அதில்தான் கப்பல் மூழ்கும் காட்சி எடுக்கப்பட்டது. இதற்காக இந்தத் தொட்டியில் 170 இலட்சம் கலன் தண்ணீர் நிரப்பப்பட்டது.

◗ இரண்டாவது தொட்டி 30 அடி ஆழமாகும். அதில் 50 இலட்சம் கலன் தண்ணீர் நிரப்பப்பட்டது. முன்பாதி கப்பல், 40 அடி தண்ணீரில் மூழ்க சக்தி வாய்ந்த ஒரு ஹைட்ரோலிக் ஜாக் பயன்படுத்தப்பட்டது.

◗ படம் முழுவதும் கம்ப்யூட்டரில் உருவாக்கப்பட்ட ஸ்பெஷல் உருவங்களும் உத்திகளும் பயன்படுத்தப்பட்டன.

◗ உண்மையான டைட்டானிக் கப்பல் கடலில் மூழ்கியபோது இறந்தவர்களின் எண்ணிக்கை 1,523. உயிர் தப்பியவர்கள் 705 பேர்.



தென்னாபிரிக்கா சென்ற மகாத்மா காந்தி இந்தியா திரும்பிய நேரம்.

அவரைப் பேட்டி எடுப்பதற்காக குஜராத்தி பத்திரிகை நிருபர் வந்திருந்தார். காந்தி கப்பலை விட்டு இறங்கியதும், அவரைப் பார்த்து அந்த நிருபர் அடுக்கடுக்காக ஆங்கிலத்தில் கேள்வி கேட்க ஆரம்பித்தார். காந்தி சற்று நேரம் பொறுமையாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

பிறகு அவரைப் பார்த்து, "நீங்களும் ஓர் இந்தியர். நானும் ஓர் இந்தியன். உங்கள் தாய்மொழி குஜராத்தி. என் தாய்மொழியும் அதுதான். அப்படியிருக்க ஆங்கிலத்தில் கேள்வி கேட்க ஆரம்பித்தது ஏன்? தென்னாபிரிக்கா சென்று சிலகாலம் அங்கு தங்கியிருந்ததால் தாய்மொழியை மறந்திருப்பேன் என்ற எண்ணமா? அல்லது பாரிஸ்டர் பட்டம் பெற்றவராயிற்றே, இவருடன் ஆங்கிலத்தில் பேசினால்தான் மதிப்பு என்று எண்ணமா?" என்று கேட்டார்.

பேட்டி எடுக்க வந்திருந்த நிருபருக்கு வெட்கமாகப் போய்விட்டது.

# தாய்மொழி!


# பாதிப்பில் உருவான படங்கள்




55. Sense and Sensibility (1995)

பணக்காரர் ஒருவர் இறந்ததும் அவரது இரண்டாவது மனைவியும் மூன்று பெண்குழந்தைகளும் அநாதரவாக விடப்படுகின்றனர். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சொத்து மூத்த மனைவி குடும்பத்தினரால் வஞ்சிக்கப்படுகிறது. வாழ்ந்துகெட்ட அவர்கள் பழையபடி மீளும் கதை. எம்மா தொம்சன், கேட் வின்ஸ்லெட், ரொம் வில்கின்ஸன் ஆகியோர் நடித்தது.

**தமிழில் - மம்முட்டி, அஜித், ஐஸ்வர்யா ராய், தபு ஆகியோர் நடித்து ராஜீவ் மேனன் இயக்கத்தில் வெளிவந்த கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன் (2000)**




56. Cellular (2004)

தனது காதலியைத் தேடிக்கொண்டிருக்கும் ஓர் இளைஞனது செல்போனுக்கு ஓர் அவசர அழைப்பு வருகிறது. வயதான பெண் ஒருவர் தான் கடத்தப்பட்டிருப்பதாகவும் காப்பாற்றும்படியும் கேட்கிறார். அந்த இளைஞனின் நம்பருக்கு மட்டுமே அவரால் தொடர்புகொள்ள முடிகிறது. இதற்கிடையில் கடத்தல்காரர்கள் அவளது கணவரையும் குழந்தையையும் கூட கடத்துகிறார்கள். அந்த இளைஞனின் செல்போன் தொடர்பை மட்டும் வைத்துக் கொண்டு அவர்கள் காப்பாற்றப்படும் கதை. கிம் பஸிங்கர், கிறிஸ் இவான்ஸ், ஜேசன் ஸ்ராதம் ஆகியோர் நடித்தது.

**தமிழில் - அஸ்வின் சேகர், வேதா, பிரபு, குஷ்பு ஆகியோர் நடித்து கே.ஆர்.உதயசங்கர் இயக்கத்தில் வந்த வேகம் (2007)**




57. Yours, Mine and Ours (1968)

மனைவியை இழந்த 10 குழந்தைகளின் தந்தையும் கணவனை இழந்த 8 குழந்தைகளின் தாயொருத்தியும் திருமணம் செய்துகொள்கின்றனர். 20 பேரும் ஒரு பெரிய வீட்டிற்குக் குடிபோகின்றனர். இரண்டு குடும்பங்கள் ஒரு குடும்பமாகி வாழும் போது நேரும் சிக்கல்களை நகைச்சுவையோடு சொல்லும் படம். லுஸிலி போல், ஹென்றி பொண்டா, வான் ஜோன்சன் ஆகியோர் நடித்தது.

**தமிழில் - லட்சுமி இயக்கத்தில் விஷ்ணுவர்தன், சுமித்ரா நடித்து கே.பாலச்சந்தர் தயாரித்து வெளிவந்த மழலைப் பட்டாளம் (1980)**




# மந்திரக் கிணறு!

கண்டமனூர் என்ற ஊரில் பேராசைக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் எந்தப் பொருளைப் பார்த்தாலும் அதை, தான் அடைய வேண்டும் என்று நினைப்பான். எனவே, நாளடைவில் பார்த்த சாரதி என்ற அவனுடைய பெயர் மறைந்து பேராசைக்காரனாயிற்று. ஒருநாள் வெளியூருக்கு வியாபார நிமித்தமாக வண்டியில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு சென்றான். வியாபாரம் முடிந்து, காட்டு வழியாக வந்து கொண்டிருந்தான். தண்ணீர் வேட்கை கொண்ட அவன் கண்களுக்கு கிணறு ஒன்று தெரிந்தது. வண்டியை விட்டு இறங்கிய அவன் அந்த கிணற்றருகே சென்றான். ஒரு பாத்திரத்தில கயிற்றைக் கட்டி அதை கிணற்றுக்குள் விட்டு தண்ணீர் எடுக்கத் தொடங்கினான். கிணற்றுக்குள் இருந்து, "யார் இங்கே தண்ணீர் எடுப்பது?" என்ற பயங்கரமான குரல் கேட்டது. அஞ்சி நடுங்கிய அவன் கிணற்றுக்குள எட்டிப் பார்த்தான். உள்ளே யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. நடுங்கும் குரலில், "ஐயா! நான் ஒரு ஏழை. தண்ணீர் குடிபபதற்காக இங்கு வந்தேன். நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"விரும்பியதை எல்லாம் கொடுக்கும் மந்திரக் கிணறு இது. இதைப் பாதுகாக்கும் பூதம் நான். யாருடைய கண்ணுககும் தெரியமாட்டேன்!" என்றது அந்தக் குரல். "மந்திரக் கிணறா? விரும்பியதை எல்லாம் தருமா?" என்று வியப்புடன் கேட்டான் அவன். "உன்னிடம் பொற்காசுகள் உள்ளதா? ஒரு பொற்காசை இந்தக் கிணற்றுக்குள் போடு. உன் விருப்பம் எதுவானாலும் கேள். உடனே அது நிறைவேறும். நன்றாக நினைவு வைத்துக்கொள். இரண்டு முறைதான் இந்தக் கிணறு உன் எண்ணத்தை நிறைவேற்றும்!" என்றது அந்தக் குரல். "என்னதான் நடக்கிறது பார்ப்போமே" என்ற எண்ணத்தில் ஒரு பொற்காசைக் கிணற்றுக்குள் போட்டான். "விலையுயர்ந்த நகைகளாலும், பொற்காசுகளாலும் என் வண்டி நிரம்ப வேண்டும்!" என்றான் அவன். ஒரு நொடிக்குள் அவன் வண்டி பொற்காசுகளாலும், நகைகளாலும் நிரம்பி இருந்தது. இதைப் பார்த்து வியப்படைந்தான் அவன்.

"ஆ! ஏராளமான செல்வம் கிடைத்து விட்டது. இந்த நாட்டிலேயே பெருஞ்செல்வன் நான்தான்!" என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டே வண்டியில் அமர்ந்தான். "ஐயோ! காட்டு வழியாகச் செல்ல வேண்டுமே! வழியில் திருடர்கள் இருப்பார்களே! அவர்கள் இந்த நகைகளையும் பொற்காசு களையும் கைப்பற்றிக் கொள்வார்களே. என்ன செய்வது?" என்று சிந்தித்தான்.

நல்ல வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது. கிணற்றருகே வந்த அவன் தன்னிடமுள்ள இரண்டாவது பொற்காசையும் அதற்குள் போட்டான். "உனக்கு என்ன வேண்டும்?" என்று உள்ளிருந்து குரல் கேட்டது. "வண்டியிலிருக்கும் நகைகளும், பொற்காசுகளும் என் கண்களுக்கு மட்டும் தெரிய வேண்டும். பிறர் கண்களுக்குத் தெரியக்கூடாது!" என்று கேட்டான். "அப்படியே ஆகட்டும்!" என்று குரல் கேட்டது.

வண்டியை ஓட்டிக் கொண்டு புறப்பட்டான். எதிரில் திருடர்கள் சிலர் வந்தனர். அவர்கள் கண்களுக்கு வண்டியில் இருந்த நகைகளும், பொற்காசுகளும் தெரியவில்லை. தன் அறிவுக் கூர்மையை மெச்சிக் கொண்டான் பேராசைக்காரன். மகிழ்ச்சியுடன் தன் வீட்டை அடைந்தான். விட்டுக்குள் ஓடினான். "இனி நாமோ, நம் பரம்பரையோ வறுமையில் வாட வேண்டியதில்லை. அரசனைப்போல செல்வச்செழிப்புடன் வாழலாம். வண்டியில் விலையுயர்ந்த பொருட்கள் என்னென்ன கொண்டு வந்துள்ளேன் பார்!" என்று மகிழ்ச்சியுடன் சொன்னான்.




வண்டி காலியாக இருப்பதைப் பார்த்து அவன் மனைவி திகைத்தாள். "என்னங்க! வண்டியில் விலையுயர்ந்த பொருட்கள் இருப்பதாகச் சொன்னீர்களா? எந்தப் பொருட்களும் இல்லையே!" என்றாள். அவன் கண்களுக்கு வண்டியில் ஏராளமான பொற்காசுகளும், நகைகளும் இருப்பது தெரிந்தது. மனைவியைப் பார்த்து, "வண்டியை நன்றாகப் பார்!" என்றான்.

"நன்றாகப் பார்த்து விட்டுத்தான் சொல்கிறேன்!" என்றாள் மனைவி. அப்போதுதான் அவனுக்கு தான் கேட்ட இரண்டாவது வரம் எவ்வளவு தவறானது என்பது புரிந்தது. தன் மனைவியிடம் நடந்ததைக் கூறினான். கிடைத்த விலைமதிப்பற்ற பொருட்களைப் பயன்படுத்த முடியாத நிலையை எண்ணி வருத்தம் அடைந்த அவன், வண்டியை ஓட்டிக் கொண்டு மீண்டும் காட்டுக்குச் சென்றான்.

அந்த இடத்தில் மந்திரக் கிணறும் இல்லை ஒன்றும் இல்லை. பைத்தியம் பிடித்தவனைப்போல் வண்டியை எட்டி உதைத்தான். அதிலிருந்து நகைகளும், பொருட்களும் கீழே கொட்டிச்சிதறின. என்ன பிரயோசனம்! அவை இவன் கண்களுக்கு மட்டும் தெரிந்தன. தன்னுடைய பேராசை குணத்திற்கு கிடைத்த பரிசு என நினைத்து மிகவும் வருந்தினான் பார்த்தசாரதி.

# மாவீரன் பண்டாரவன்னியன்



ஈழத்தின் வன்னிப்பகுதியில் அரசாட்சி செய்தவன் தான் இந்தப் பண்டாரவன்னியன். வன்னியின் இறுதி மன்னன். இலங்கைத்தீவில் யாழ்ப்பாணம் உட்பட பல இராசதானிகள் வெள்ளையர்களிடம் வீழ்ச்சி கண்டபின்னரும் வன்னிமண் நீண்டகாலம் வெள்ளையரிடம் வீழ்ந்து விடாமல் இருந்தது. அந்த வன்னி இராசதானியின் இறுதி மன்னனான பண்டாரவன்னியன் தனது இறுதிமூச்சுவரை வெள்ளையரை எதிர்த்துப் போரிட்டான். ஆவணி 25 ஆம் நாள் அம்மன்னனின் நினைவுநாளாக நினைவுகூரப்படுகிறது.

முன்பு, பண்டார வன்னியனின் நினைவுநாளாக வேறொரு நாள்தான் நினைவுகூரப்பட்டு வந்தது. அது நடுகல்லொன்றில் குறிப்பிடப்பட்ட நாளொன்றாக இருந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தில் கற்சிலை மடு எனும் ஒரு கிராமத்தில் நடுகல்லொன்று உண்டு. வெள்ளையரின் படைத்தளபதி ஒருவரால் 'பண்டார வன்னியன் இவ்விடத்தில் தோற்கடிக்கப்பட்டான்' எனும் தரவு அக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல்லில், பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட நாளைத்தான் நீண்டகாலமாக அவனின் நினைவுநாளாகக் கொண்டாடி வந்தார்கள் தமிழர்கள்.தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தலைமைப்பீடம் வன்னிக்குப் இடம் பெயர்ந்தபின் இந்நினைவுநாள் மாற்றப்பட்டது. ஜெயசிக்குறு நடவடிக்கை தொடங்கப்பட்டபின் 1997 ஆம் ஆண்டில் பண்டார வன்னியின் நினைவுநாள் ஆவணி 25 ஆம் நாள் என அறிவிக்கப்பட்டது.

## ஆவணி 25 இற்கும் பண்டார வன்னியனுக்கும் என்ன தொடர்பு..?




அந்தக்காலத்தில் முல்லைத்தீவுக் கரையோரத்தைக் கைப்பற்றிய வெள்ளையர்கள் அங்கே படைத்தளமொன்றை அமைத்திருந்தார்கள். அப்போது வன்னிமை முற்றாகப் பறிபோய் விடவில்லை. பனங்காமத்தை மையமாக வைத்து பண்டாரவன்னியனின் அரசாட்சி நடைபெற்று வந்தது.

வெள்ளையரின் முல்லைத்தீவுப் படைத்தளம் மீது பண்டாரவன்னியன் போர் தொடுத்து, அப்படைத்தளத்தை நிர்மூலமாக்கினான். அத்தாக்குதலில் அங்கிருந்த இரண்டு பீரங்கிகளைக் கைப்பற்றியதாக வரலாற்றுக் குறிப்புகளுண்டு. அந்த நாள் தான் ஆவணி 25. பண்டாரவன்னியன் வெள்ளையரின் முல்லைத்தீவுப் படைமுகாமைத் தாக்கி பீரங்கிகளைக் கைப்பற்றிய நாளையே தற்போது பண்டாரவன்னியனின் நினைவுநாளாக நினைவுகூர்கின்றோம்.





சொல்லப் போவதை நல்லாக் கேளு
உடலும் உள்ளமும் உன்னதமாகும்!
நாளும் உணவில் கீரை சேரு
நன்றாய் நீயும் வளர்வாய் பாரு
பச்சைக் காய்கள் பலவும் சேரு
ஊட்டம் உடம்பில் சேரும் பாரு
அத்திப் பழம் உண்டு பழகு
ரத்தம் நன்கு ஊறும் பாரு!
உதிரம் குறைந்தால் சோகை வரும்
வாழ்வில் சோகம் கவிழ்ந்து விடும்
உதிரம் உறைந்தால் உயிர் போகும்
உறவினர் நிம்மதி பறி போகும்!
ரத்த தானம் கொடுத்துப் பாரு
பொங்கும் ஆனந்தம் பெறுவாய் பாரு
ரத்தம் இல்லையேல் வாழ்வு இல்லை
இரக்கம் இல்லையேல் மனிதனே இல்லை!

*கி.திவ்யன் (தரம்-2)*
*அச்சுவேலி ஆரம்பப்பாடசாலை*

# சூரிய குடும்பம்

**வியாழன்**

ஐந்தாவது கோள் தான் வியாழன். இதுவே கோள்களில் மிகப்பெரியது. இதன் பருமன் ஏனைய கிரகங்களை விட பெரிதாக உள்ளதினால் இதனை "ராட்சத கிரகம்" என அழைக்கப்படுகின்றது. வியாழன் பூமியைப் போல 1300 மடங்கு பெரியது. வியாழன் வாயுக்களால் ஆனது. வியாழனில் ஒரு பெரிய சிவப்புப் பகுதி உள்ளது. மெல்லிய மங்கலான வளையம் ஒன்று



வியாழனைச் சூழ்ந்துள்ளது. இவ்வளையம் பனிக்கட்டி மற்றும் தூசுகளால் ஆனது. இது தன்னைத்தானே ஒருமுறை சுற்ற 9 மணித்தியாலங்களும் 55 நிமிடங்களும் ஆகின்றது. ஆகவே இந்த ராட்சத கிரகம் பூமியை விட எவ்வளவு வேகமாகச் சுழலுகின்றது எனபதைக் கற்பனை பண்ணிப்பார்க்கலாம்.

அதேவேளை வியாழன் சூரியனை ஒருமுறை சுற்றிவர பதினொரு வருடங்களும் முந்நூற்று பதினைந்து நாட்களும் எடுக்கின்றது. வியாழனிலிருந்து கிடைக்கப்பெற்ற நிறமாலையை விஞ்ஞானிகள் ஆராய்ந்து பார்த்தபோது அங்கு அம்மோனியா, மெதேன் போன்ற வாயுக்கள் இருப்பதைக் கண்டறிந்தனர். நாம் வாழுகின்ற பூமிக்கு ஒரே ஒரு உபகிரகம் உள்ளது. ஆனால் வியாழனுக்கு பதினாறு உபகிரகங்கள் சுற்றிவருவதாக அண்மையில் கண்டிபிடித்துள்ளனர்.சனி

சனி ஆறாவது கோள். இது இரண்டாவது பெரியகோள். வியாழனைப் போன்று சனியும் வாயுக்களால் ஆனது. சனியைச் சுற்றித் தட்டையான வட்ட வடிவமான மிகப்பெரிய வளையங்கள் உள்ளன. இவற்றை வைத்தே சனியை அடையாளம் காண இயலும்.


இந்தப் பெரிய சனிக் கோளைத் தண்ணீரில் போட்டால் மிதக்குமாம்! ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ஏனெனில் சனியில் உள்ள வாயுக்கள் நீரைவிட (அடர்த்தி குறைந்தவை) இலேசானவை. சனியின் நிறம் மஞ்சள். சூரியனை ஒருமுறை சுற்றிவர 29.5 ஆண்டுகள் ஆகின்றன.

**யுரேனஸ்**

ஏழாவது கோள் யுரேனஸ். இதுவும் வியாழன் சனியைப் போன்று வாயுக்களால் ஆனதே. இதனைச் சுற்றியும் வளையங்கள் உளளன. யுரேனஸ் ஆகும். 1781 ஆண்டுவரை சூரிய குடும்பத்தில ஆறு கிரகங்களே உள்ளன என்று நம்பியிருந்தனர். வில்லியம் ஹரஷா என்னும் விஞ்ஞானியினால் யுரேனஸ் என்ற கிரகம் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டதாம். இதன் விட்டம் 48000 கிலோ மீற்றராகும். தன்னைத்தானே சுற்ற பத்து மணி நாற்பத்து எட்டு நிமிடங்கள் எடுக்கின்றது. சூரியனை ஒருமுறை சுற்ற 84 வருடங்கள் செல்கின்றது. யுரேனெஸ்ஸிற்கு ஐந்து உப கிரகங்கள் உள்ளன.

(தொடரும்....)

# நாடகக் கலைஞர் கௌரவிப்பும் அனந்தம் மலர் வெளியீடும்



வடமராட்சி அல்வாயூர் கவிஞர் நாடகமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகக் கலைஞர் கலாபூஷணம் மா. அனந்தராசனுக்கான பாராட்டு விழாவும் அனந்தம் மலர் வெளியீடும் நேற்று முன்தினம் மாலை தேவரையாளி இந்துக்கல்லூரி மண்டபத்தில் ஓய்வு பெற்ற அதிபர் செ. சதானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் கலந்து சிறப்பித்தார். நிகழ்வில் இறைவணக்கத்தை செல்வி வை. வைசாளினியும் வரவேற்புரையை வி. கவிச்செல்வனும் நிகழ்த்தினர். ஆசியுரையை சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜக்குருக்கள் நிகழ்த்தினார்.

வாழ்த்துரைகளை இ.து குலசிங்கம், சி. பசுபதி, வடமாகாண சபை உறுப்பினர் வே. சிவயோகன் ஆகியோரும் பாராட்டுரைகளை கொற்றை பி. கிருஷ்ணானந்தன், கே.ஆர் டேவிட், கலாநிதி செ. திருநாவுக்கரசு, மா. கிருஷ்ணகாந்தன் ஆகியோரும் நிகழ்த்தினர்.

நிகழ்வில் 'அனந்தம்' என்ற மலர் வெளியீடும் இடம்பெற்றது. நூலின் முதற்பிரதியை ஓய்வுபெற்ற ஆசிரியர் க. கந்தசாமியும் சிறப்புப் பிரதியை ந. கிருஷ்ணானந்தனும் பெற்றுக் கொண்டனர்.

நூல் வெளியீட்டுரையை வேல் நந்தனும், நயப்புரைகளை பரா.ரதீஸ், ஆ. கந்தையா ஆகியோரும் நிகழ்த்தினர். நூல் தொடர்பான ஏற்புரையை மலர் இணையாசிரியர் சு. குணேஸ்வரன் நிகழ்த்தினார். விழா நாயகன் மா. அனந்தராசன் ஏற்புரையை நிகழ்த்தினார். நிகழ்வின் இறுதியில் நன்றியுரையை க. வரதவேல் நிகழ்த்தினார். (48)

# மருத்துவ சிகிச்சைக்கு பிரயாணக் கொடுப்பனவு

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் மருத்துவ சிகிச்சைக்காக பிரயாணங்களை மேற்கொள்ளும் 21 வறியவர்களுக்கு பிரயாணக் கொடுப்பனவை பெற்றுக் கொடுக்க பிரதேச செயலர் த.முகுந்தன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் யுனிசெவ் அமைப்பின் நிதியின் மூலம் இத்தகைய நிதி உதவி தேவைப்படுவோருக்கு தலா 1500 ரூபா வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

சமூகசேவைகள் அதிகாரி சு.ஜெயானந்தராசா பிரதேச செயலரின் பணிப்பின் மூலம் கிராம அலுவலர்களைத் தொடர்பு கொண்டு வெளிக்கள ஆய்வின் மூலம் தகுதிவாய்ந்த பயனாளிகளைத் தெரிவு செய்துள்ளார்.

அரச மருத்துவமனைக்கு யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு, கண்டி, போன்ற தூர இடங்களுக்குச் செல்பவர்களுக்கு இவ்விதமான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவருகின்றன. (90)



மாதகல் நுணசை வித்தியாலயத்தில் கல்வி கற்கும் கருணாகரன் கவிசன் புலமைப்பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளை பெற்றமையை பாராட்டி சுன்னாகம் றோட்டறக்கழகம் கௌரவித்தபோது... (48)

# மாணவர்களின் உள நலனை பாதுகாக்கவேண்டியது அவசியம்

## கலாநிதி ஆறுதிருமுருகன்

(திருநெல்வேலி)

பெரும் பாலான ஆசிரியர்கள் உடல் ஆரோக்கியம் பாதிப்படைந்த நிலையிலேயே பணியாற்றுகின்றார்கள் பல சமூக நெருக்கீடுகளினால் உளம் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் வாழும் சூழலில் இன்நூல் இரு சாராரையும் பெற்றோரையும் ஆற்றுப்படுத்தக்கூடிய செய்திகளோடு வெளி வந்துள்ளமை பாராட்டுக்குரியது என செஞ்சொற் செல்வர், கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

இணுவில் அறிவாலயத்தில் நடைபெற்ற கா.வைத்தீஸ்வரனின் "மாணவர் ஆரோக்கிய மேம்பாடு" என்னும் நூல் வெளியீட்டின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இளைப்பாறிய மக்கள் வங்கிப் பிராந்திய முகாமையாளர் அ.குகதாசன் தலைமையில் அறிவாலய மண்டபத்தில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய செஞ்சொற்செல்வர், மாணவர்களும், ஆசிரியர்களும் நோயாளர்களாக வைத்தியப் பதிவுக் கொப்பிகளோடு திரியும் பரிதாப நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இன்று எம் மண்ணில் மாணவர்களின் உடல், உளம் என்பன மிகவும் பாதுகாக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

வறுமையில் வாடும் சிறுவர்கள், வசதி மிக்க மாணவர்கள் ஒன்றாகக் கற்கும் சூழலில் உள நெருக்கீடு வகுப்பறைகளில் ஏற்படத் தொடங்குகிறது. வசதியுள்ள மாணவர் தமது பிறந்ததினத்தை மிக ஆடம்பரமாகக் கொண்டாடி வகுப்பறைக்கு அல்பத்தோடு செல்கின்றார்கள் இதனால் அன்றாடம் வாழ்வாதார உதவி இன்றித் தவிக்கும் மாணவனின் மனம் பாதிப்படைகிறது. இந்நிலையில் ஆசிரியர்கள், மாணவர்கள் தொடர்பான உள ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவதற்கு மாணவர் ஆரோக்கிய மேம்பாட்டு நூல் மிகவும் பயன்தரவல்லது என்பதில் ஐயமில்லை என்றார். (137)

# பதிவிறக்கப் பெட்டகம்

எனக்கு மகாபாரதம் கதை பிடிக்கும். ராஜாஜி எழுதிய வியாசர் விருந்து நூலினைப் பதினான்கு வயதில் படித்தேன். அப்பொழுதிலிருந்து எனக்கு பாரதக் கதை சுவாரசியம் மிக்கதாக இருக்கின்றது. அக்கதை கடவுளுடன் சம்பந்தமுடையதாக இப்பவும் எனக்குத் தோன்றவில்லை. மனித வாழ்க்கை குறித்த விசாரணை என்று தோன்றும். ஆண் மேலாதிக்கச் சமூகத்தில் பங்காளிச் சண்டை தீரவே தீராதது. இன்றைய உலகில் நவீன மகாபாரதம் என்று பெருமாள் முருகனின் புதிய நாவல் ஆளண்டாப் பட்சி நாவலைச் சொல்லலாம். கொங்கு நிலப் பின்புலத்தில் ஒரு குடும்பத்தில் பாகப் பிரிவினையில் ஏற்படும் முரண்களை வைத்து நாவல் விரிகின்றது. ஒரே வீட்டில் பிறந்து வளர்ந்த அண்ணன் தம்பிகள் வளர்ந்த பிறகு நிலம் அல்லது சொத்தைப் பிரிக்கும் போது கசப்பு பொங்கி வழிகின்றது. அப்பாவியான சகோதரனை ஏமாற்றுவது சாதரணமாக நடைபெறுகின்றது. ஏன் இப்படி எல்லாம் நடை பெறுகின்றது என்ற கேள்வியை முன் வைத்துப் பெருமாள் முருகன் புனைந்துள்ள நாவல் ஆழமான கேள்விகளை முன் வைக்கின்றது. நிலத்தின் அடிப்படையிலான சமூக மதிப்பீடுகள் நிலவுகின்ற கிராமத்திலிருந்து வந்த எவரையும் ஒரு கணம் சலனமடைய வைக்கும் பெருமாள் முருகனின் ஆளண்டாப் பட்சி நாவல். ஆண்களின் உலகம் சலிப்பும் கசப்பும் வன்மமும் குரோதமும் மிக்கதுதானா? மீண்டும் மீண்டும் மகாபாரதம் புதிய ஊடகங்கள், வடிவங்களில் வெளியாவது அதற்குத்தானா?

– ந.முருகேசபாண்டியன்

நிலத்தோடு தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு பிடிவாதமாகத் தங்கள் உலகத்திற்கான நியாயங்களைத் தாங்களே உருவாக்கிக் கொள்ளும் உறவினர்களைக் கண்டு பரிதாபம் மட்டுமே கொள்ள முடியும். அவர்களுக்காக விட்டுக் கொடுக்கத் தொடங்கினால் நமது அடையாளங்களையும் நமது காலம் பற்றிய புரிதலையும் தான் விட்டுக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் உறவினர்களைச் சந்திக்கும்போதும் கசப்புகள் மட்டுமே மிஞ்சிக் கொண்டிருந்தது; இருக்கிறது. ஆனால் நமது எழுத்தாளப் பெருந்தகைகளில் பலர் உறவுகளை அலுக்காமல் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கொண்டாடும் அபத்தம் தாங்க முடியாதவை.

– அ.ராமசாமி

நிச்சயமாக. எழுத்தின் வழியே நாம் சிருஷ்டிக்கும் உலகம் வேறு. கிராமம் சார்ந்த பங்காளிகள் அல்லது முறைகாரர்கள் உருவாக்கும் உலகம் வேறு. நம்மை ஏதாவது ஒரு சிமிழுக்குள் அடைக்க உறவினர்கள் பெரிதும் முயலுகின்றனர். உறவினால் வருவது என்ன என்று பார்த்தால் வெறுமைதான். மந்தையை விட்டுப் பிரிய நேர்வதுதான் இயற்கை. மந்தையின் புறக்கணிப்பு விடாமல் துரத்துகின்றது. சமூகத்துடன் முரண் ஏற்படுவது போல உறவினர்களுடன் இடைவெளி விரிந்து கொண்டே போகின்றது. பெருமாள் முருகனின் நாவலில் கசப்புதான் பொங்குகின்றது.

– ந.முருகேசபாண்டியன்

செல்போன் நமது வாழ்க்கையை மாற்றியதா அல்லது அது மாறிவிட்ட நமது வாழ்க்கையின் ஒரு அடையாளமா என்று நிறைய நேரம் யோசித்திருக்கிறேன். இதற்குள் உறவுகள் நிகழும் வேகமும் நிகழ்ந்து முடியும் வேகமும் மிகுந்த நாடகத் தன்மை கொண்டதாக மாறிவிட்டது. எவ்வளவு அந்தரங்கமான வார்த்தைகளுக்கும் எந்த அர்த்தமும் கிடையாது. இதெல்லாம் பாசாங்கான உறவுகள் என்பதைக் காட்டிலும் இவற்றைத் தவிர வேறு எந்த மாதிரியும் இவை நிகழ முடியாது என்பதுதான் உண்மை.

– மனுஷ்யபுத்திரன்

மண்ணிலிருந்து வெளியேறியவன் அடையும் முக்கியமான சவால் தன்னுள் ஊறிநிறையும் தன்னிரக்கத்தை வெல்வதுதான். தன் நிறத்தை, தன் மண்ணை, தன் பண்பாட்டைப் பற்றிய தாழ்வுணர்ச்சியாக அது நிறைகிறது. அதைவெறுத்துப் பழித்து விலக்கி இன்னொன்றாக தன்னை மாற்றிக்கொள்ளாமல் வாழமுடியாமலாகிறது. புலம்பெயர்ந்தவனின் பேரிழப்பு என்பது இதுதான். அதை உணர்ந்துகொண்டதும் அடையும் மிதமிஞ்சிய போலிப்பெருமிதம் இன்னொரு வகை திரிபு.

– ஜெயமோகன்

உண்மையின் பிரச்சினை என்னவென்றால், அது அடிப்படையில் அசௌகரியமானதும், பெரும்பாலான சமயங்களில் உப்புசப்பில்லாமல் இருப்பதும்; ஆனால், மனித மனம் தேடுவதோ, நகைக்கக்கூடுவதை, தடவிக்கொடுக்கப்படுவதை...

– எச்.எல்.மென்க்கென்

# வவுனியா பொதுநூலகம் தேசிய மட்டத்தில் இரண்டாமிடம்



வவுனியா நகர சபை பொது நூலகம் அகில இலங்கை ரீதியில் இரண்டாமிடத்தை பெற்றுள்ளது. தேசிய நூலக ஆவணமாக்கல் சபையினால் நடாத்தப்பட்ட போட்டியிலேயே தேசிய ரீதியில் இரண்டாமிடத்தினைப் பெற்றுள்ளது.

கடந்த வாரம் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற விருது வழங்கல் நிகழ்வின் போது இந்த விருது வழங்கப்பட்டது

இந்த நூலகத்திலேயே இலங்கையில் முதன் முறையாக கண்பார்வையற்றோருக்கான நூலகம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விசேட தேவையுடையவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கும் செயற்றிட்டம்

(கொழும்பு)

விசேட தேவையுடையவர்களுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்கும் செயற்றிட்டமொன்றை முன்னெடுப்பதற்கு சமூக சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடெங்கிலும் உள்ள 05 தொழிற்பயிற்சி நிறுவனங்களில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுககப்படவுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் அனுஷா கோகுல தெரிவித்துள்ளார்.

இலவசமாக நடத்தப்படும் இந்த தொழிற்பயிற்சிகளுக்கு 16 தொடக்கம் 35 வயதான விசேட தேவையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.03 மாதங்கள் தொடக்கம் 02 வருடங்கள் வரையிலான காலப் பகுதியைக் கொண்டதாக இந்தப பயிற்சிகள் காணப்படும்.

2014 ஆம் ஆண்டுக்கான தொழிற்பயிற்சி நடவடிக்கைகளுக்கு தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அவ்வாறானவர்கள் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சமூக சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு 0112 18 7040 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ள முடியுமெனவும் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

# வன்னியின் வாதச் சமர்

(வவுனியா)

தமிழ் மாமன்றத்தினர் நடாத்திய "வன்னியின் வாதச்சமர் 2013" வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது. 15 பாடசாலையைச் சேர்ந்த 45 மாணவர்கள் இதில் பங்கு பற்றி இருந்தனர்.

பொதுவாக விவாதப் போட்டியில், வெற்றி பெறும் அணிதான் அடுத்த சுற்றுக்குள் முன்னேற முடியும். ஆனால் இந்த வாதச் சமர் லீக் முறையிலே இடம்பெற்றது.

லீக் சுற்றில் ஒரு அணி 4 போட்டிகளை எதிர்கொண்டது. புதுவிதமான ஒரு நேர்த்தியான புள்ளித் திட்டத்தினை தமிழ் மாமன்றம் அறிமுகப்படுத்தியிருந்தது.

இதில் புள்ளிகள் அடிப்படையில் முதல் எட்டு இடங்களைப் பெறும் அணிகள் காலிறுதிக்குள் முன்னேறியுள்ளன. இந்த அணிகளுக்கான காலிறுதிப் போட்டிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம் பெறும்.

இதில் வெற்றிபெறும் அணிக்கு தமிழ் மாமன்றத்தின் கலாசார நிகழ்வில் பரிசில்களும், வெற்றிக் கேடயங்களும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ள[illegible]

# விவசாயம்சார் வர்த்தக விருதுகள் அமானா வங்கி அனுசரணை

இலங்கையில் விவசாயம் சார் வர்த்தகத்தின் அபிவிருத்திக்காக வர்த்தகத் துறையினரால் வழங்கப்பட்டு வரும் பங்களிப்பையும், செயலாற்றுகையையும் கருத்திற் கொண்டு தேசிய விவசாயம்சார் வர்த்தக மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய விவசாயம்சார் வர்த்தக மற்றும் விவசாயிகளுக்கான விருது விழாவுக்கு அமானா வங்கி அண்மையில் அனுசரணை வழங்கியது.

விவசாயம் சார் வர்த்தகத் துறையில் சம்பந்தப்பட்டுள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனத்துக்குரிய விசேட தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக விரிவான நிதித் தீர்வுகளை வழங்கி ஆதரவளிக்கும் ஒரு பலமான ஆதரவாளராக அமானா வங்கி விளங்குகின்றது. இந்தத் துறைக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்த வங்கி சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக்கான வங்கிச் சேவைப் பிரிவினை கொண்டுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய விவசாயம்சார் வர்த்தகத துறைக்கான விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வங்கியின் முகாமைப் பணிப்பாளர் பிரதம நிறைவேற்று அதிகாரி பைசல் சாலி கூறுகையில் பொதுவாக வங்கிகள் விவசாயிகளுக்கு நிதியுதவி அளிப்பதிலிருந்து விலகியிருந்தன. பல்வேறு கால நிலைத் தாக்கங்களால் அறுவடை பாதிக்கப்படுவதால் ஏற்படும் வியாபாரத் தளம்பல் நிலையே இதற்கான காரணமாகும். இவ்வாறான ஆபத்துக்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வங்கிகள் விவசாயிகளுக்கு சொந்தமான தங்கங்கள் மற்றும் ஆபரணங்களையே பாரம்பரியமாக நம்பி வந்துள்ளன.

நிதி திரட்டுவதற்கான ஒரு வழிமுறையாக விவசாயிகளுக்கு இந்த நகை அடகு முறைதான் காணப்பட்டது. ஆனால், அண்மைக் காலமாக தங்கத்தின் விலை பாரியளவில் வீழ்ச்சி கண்டிருப்பதால், இவ்வாறு நிதி திரட்டும் வழிமுறையும் குறைந்துள்ளது என்றார்.

# தேசிய சுவடிகள் பாதுகாப்பு தினம்

தேசிய சுவடிகள் பாதுகாப்பு வாரம் நேற்று முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய சுவடிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

1640 ஆம் ஆண்டு முதல் காணப்பட்ட ஆவணங்கள் தேசிய சுவடிகள் திணைக்களத்தில் காணப்படுகின்றன.

பிரித்தானியா ஆட்சிக் காலப்பகுதி மற்றும் சுதந்திரம் பெற்றதன் பின்னரான காலப் பகுதியில் தயாரிக்கப்பட்ட ஆவணங்களும் இங்கு இருப்பதாக தேசிய சுவடிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி சரோஜா வெத்தசிங்க தெரிவித்துள்ளார்.

இவற்றுள் பொறி யியல் துறை சார்ந்த அதிகளவிலான ஆவணங்கள் காணப்படுகின்றன. இது தொடர்பில் மக்களை தெளிவூட்டவும், பொறியியல் துறையில் ஆர்வம் காட்டுவோர் காணப்படின், அவர்கள் இது தொடர்பில் அறிந்துகொள்வதற்காகவே இந்த வருடம் தேசிய சுவடிகள் பாதுகாப்பு வாரம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

பண்டையகால சுவடிகளின் ஊடாக பல்வேறு விடயங்களை கற்றுக்கொள்ள முடியும். எதிர் காலத்தில் பொறியியல் துறை சார் நடவடிக்கைகளில் ஈடுபடும் போது, பண்டைய பொறியியல் துறைசார் அனுபவங்களை இதன் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்

பொறியியல் கற்கையை முன்னெடுக்கும் மாணவர்கள் மற்றும் பொறியியலாளர்களுக்கு வழிகாட்டியாகவும் பயனுள்ளதாகவும் இந்த தேசிய சுவடிகள் பாதுகாப்பு வாரம் அமையும் என நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆற்றுக்குள் விழுந்த தலைக்கவசத்தை எடுக்கப் பாய்ந்த சகோதரர்கள் மரணம்

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று பனங்காட்டு பாலத்தின் அருகே களப்பில் தவறி வீழ்ந்த தலைக்கவசத்தை எடுக்கச் சென்ற இரு சகோதரர்கள் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளனர். சம்பவத்தில் நாவற்காடு பிரிவைச் சேர்ந்த 25 வயதுடைய ஞானசேகரம் ஜெயந்திவாசன், 21வயதுடைய ஞானசேகரம ஜனார்த்தனன் ஆகிய இரு சகோதரர்களுமே மரணமடைந்தவர்கள்.



குறித்த சம்பவம் தீபாவளி தினத்தன்று மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது. சுழியோடிகள் பொதுமக்களின் உதவியோடு இரு மணித்தியாலங்களின் பின் அண்ணனுடைய சடலமும், ஆறு மணித்தியாலங்களின பின் தம்பியின் சடலமும் மீட்கப் பட்டது.

சம்பவ தினமான தீபாவளி தினத்தை கொண்டாடுவதற்காக தங்களது நண்பர்களுடன் சேர்ந்து இரு சகோதரர்களும் சென்றுள்ளனர், இந்நிலையில் பாலத்தருகே நிற்கும்போது கைகளில் இருந்து தலைக் கவசம களப்பினுள் தவறிவிழுந்துள்ளது. தவறிய தலைக் கவசத்தை எடுப்பதற்காக மூத்த சகோதரர் முயற்சித்த வேளையிலேயே நீரில் மூழ்கியுள்ளார்.

அண்ணன் நீரில் மூழ்குவதை அவதானித்த தம்பியும் களப்பினுள் குதித்த போ[illegible] இச்சம்பவம் இடம்பெற்று[illegible]ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இரு சகோதரர்களும் மிகவும் நெருக்கமுடையவர்கள் என்பதுடன் எவ்வேளையிலும் ஒன்றாகவே இருப்பவர்கள். கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னரும் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது ஒன்றாகவே விபத்துக்குள்ளானவர்கள். இளையவர் அண்மையிலேயே வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பியவர் ஆவர்.

களப்பில் மூழ்கியவர்களை தேடும் பணியில் ஈடுபட்ட தோணி ஒன்று கவிழ்ந்த போதிலும் அனைவரும் தப்பித்துக் கொண்டனர். இச்சம்பவம் ஆலையடிவேம்பு பிரதேசத்தை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

# ஒரு மில்லியன் மரக்கன்றுகளை நாட்டுவதற்கு நடவடிக்கை

ஒரு மில்லியன் மரக்கன்றுகளை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சு தெரிவிக்கின்றது.


இதற்காக அரச நிறுவனங்கள் பலவற்றின் ஒத்துழைப்பு பெறப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஈ.எம்.யூ.டி. பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் ஊடாக மரக்கன்றுகளை நாட்டுவதன் முக்கியத்துவம் தொடர்பில் மக்களை தெளிவூட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாடசாலைகள், சிறைச்சாலைகள், பாதுகாப்பு பிரிவு, பொலிஸார், பிரதேச, மாகாண சபைகள் என அனைத்துடனும் இணைந்து தேசிய திட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது.

அத்துடன் எதிர்காலத்தில் சூழலை பாதுகாக்க வேண்டிய தன் முக்கியத்துவம் தொடர்பிலும் இதனூடாக தெளிவூட்டப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.





அரியாலை கிழக்குக் கடலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கடல் அனர்த்தத்தில் மூழ்கி மீட்கப்பட்ட மீன்பிடிப் படகையும் கடலில் மூழ்கி உயிரிழந்தவரின் சடலத்தையும் காணலாம். (படங்கள்-பார்த்தீபன்)

விஞ்ஞானம்

க.பொ.த.(சாதாரணதர)
மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


# கல்வி முரசு

32 | T | I

Grade - 11

ஆசரியர்: T.கஜேந்திரன்


(01) வளிமண்டலத்தில் நைதரசன் வாயுச் சதவீதம் உயர்வானது.தாவரத்துக்கு நைதரசன் தேவையாயினும் அதற்கு மிக்குறைவாகக் கிடைக்கும் மூலகங்களுள் அதுவும் ஒன்றாகும். இயற்கையில் நைதரசன் சுற்றோட்டமாகச் செல்லும் வட்டம் கீழே தரப்பட்டுள்ளது.




1. மேற்படி வட்டத்தின் இடைவெளிகளில் பொருத்தமான சொல்லை.'.சொற்களை இட்டு பூர்த்தி செய்க.
a.................................................... b.................................. ..............................
c.................................................... d....................................................................
e....................................................

2.
a. அங்கிகளின் உடலில் நைதரசன் எந்தச்சேர்வைகளாகக் காணப்படும்?

b. விலங்குகளுக்குத் தேவையான நைதரசன் தேவைகள் பிரதானமாக எவ்வாறு கிடைக்கும்?

3. சில நுண்ணங்கிகளுக்கு வளியில் உள்ள நைதரசனை நேரடியாக நைதரசன் சேர்வைகளாக மாற்றமுடியும். அதற்கான உதாரணம் ஒன்று தருக?

4.
a. அங்கிகளின் இறந்த உடலில் காணப்படும் நைதரசன் சேர்வைகளால் அமோனியா வாயு உருவாகும். அமோனியாவின் சூத்திரத்தை எழுதுக.

b. N=14,H=1 ஆயின் அமோனியாவின் மூலக்கூற்று நிறையைக் காண்க.


5.
a. வளி மண்டலத்தில் ஓசோன் வெறுமையாதலுக்கு பொறுப்பான இரசாயனப் பதார்த்தங்களின் பிரதான கூட்டம் யாது?

b. அவ் இரசாயனப் பதார்த்தத்தை பிறப்பிக்கும் ஒரு மூலம்.'.சாதனத்தை குறிப்பிடுக?

c. ஓசோன் வெறுமையாதலின் ஒரு சூழல் விளைவையும் அதனால் ஏற்படும் உடல் நலக்கேட்டையும் . குறிப்பிடுக.

(02) ஒரு மாணவர் குழு தயாரித்த உறுஞ்சன்மானியின் அமைப்பு உருவில் காட்டப்பட்டுள்ளது. இந்த உபகரண அமைப்பை வெவ்வேறு இடங்களில் வைத்து வளிக்குமிழி 50 மில்லிமீற்றர் தூரம் செல்வதற்கு செலவாகிய நேரத்தை அளக்க முடிவு செய்த அவர்கள் ஒவ்வொரு இடத்திலும் 5 வாசிப்புக்கள் வீதம் பெற்று அவற்றின் இடைப்பெறுமானங்களை பின்வருமாறு அட்டவணைப்படுத்தினார்கள்.

| இடம் | செலவாகிய நேரம் (s) |
|---|---|
| தாவரக் கிளையை 30 நிமிடங்கள் பொலித்தீன் உறையினால் மூடி வைத்த பின்னர். | 70 |
| காற்று வீசும் இடம் | 42 |
| நிழலான இடம் | 57 |
| இருளில் | 62 |
| கடுமையான சூரிய ஒளியில் | 53 |




1. இவ் உபகரணத்தை தயார் செய்யும் போது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் 02 தருக?

2. a. மேற்படி அட்டவணையின் படி ஆவியுயிர்ப்பு வீதம் உயர்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணி யாது?

b. தாவர இலையில் இருந்து நீர் ஆவியுயிர்ப்பு மூலம் வெளியேறுவதை குறைக்கும் பொதுவான காரணி யாது?

c. இப்பரிசோதனைக்காக ஒரே இடத்தில் 5 வாசிப்புக்கள் பெறப்பட்டதற்கான காரணம் யாது?

d. கிடைத்த வாசிப்பு பெறுமானங்கள் வேறுபடுவதற்கான காரணத்தை தருக?

3. தாவரக் கிளையினால் நீர் ஈர்க்கப்படும் வீதத்தை அளப்பதற்காக இந்த அமைப்பை எவ்வாறு பயன்படுத்தலாம் என சுருக்கமாக விளக்குக.

4. வறண்ட சூழலில் வளரும் தாவரங்களில் ஆவியுயிர்ப்பை தவிர்ப்பதற்காக பல்வேறு உத்திகள் உள்ளன.
a. வறண்ட சூழலின் சிறப்பியல்பு யாது?

b. வறண்ட சூழல் ஒன்றில் வளரும் தாவரம் ஒன்றைப் பெயரிட்டு ஆவியுயிர்ப்பை குறைப்பதற்காக அத்தாவரத்தில் காணப்படும் உத்தியொன்றை குறிப்பிடுக?

5. தாவரங்களுக்கு ஆவியுயிர்ப்பின் மூலம் கிடைக்கும் இரண்டு அனுகூலங்களை குறிப்பிடுக.

(03) மனித உடலில் சில தொகுதிகளின் பகுதிகளைக் காட்டும் படங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
1. அப்படங்களில் காட்டப்படும் பகுதிகள் அடங்கியுள்ள தொகுதிகளை கவனத்திற் கொண்டு பின்வரும் . அட்டவணையை பூர்த்தி செய்க.



a b c d

| படம் | அது உள்ளடங்கும் தொகுதி | படத்தில் காட்டப்பட்ட இரண்டு பகுதிகள் | பெயரிட்ட உறுப்புக்களின் பிரதான தொழில்கள் |
|---|---|---|---|
| a | | 1. வெளிக்காவு நரம்புமுளை<br>2 ...................................... | 1. ......................<br>2 ...................... |
| b | | 1. ......................................<br>2 ...................................... | 1<br>2. சதையச் சாற்றை சுரத்தல் |
| c | சிறுநீரத் தொகுதி<br>2 ...................................... | 1. ......................................<br>2 ...................................... | 1. ......................<br>2 ...................... |
| d | | 1. சுவாசச் சிறுகுழாய<br>2. ................................. | 1. ......................<br>2 ...................... |

b. உடலின் நீர்ச்சமநிலையை பேணுவதற்கு உதவும் தொகுதி மேற்குறிப்பிட்டவற்றுள் எது?

3.
a. இவற்றுள் ஒரு தொகுதியைச் சேர்ந்த ஓர் உறுப்பு வீங்குவது 'கழலை' எனப்படும். அத்தொகுதி எது?

b. 'கழலை' ஏற்படுவது, அம்மனிதனில் ஒரு கனியுப்பு குறைபாட்டாலேயே ஆகும். அவ் கனியுப்பின் பயன் எது?

c. இவ் நோய் நிலைமைக்கு உள்ளாகியுள்ள ஒருவருக்கு நீர் கூறும் பரிகார நடவடிக்கை ஒன்று தருக?

*(04)*
*1.* a. விலங்குகளில் குருதிச்சுற்றோட்டத் தொகுதியின் ஒட்டுமொத்தமான தொழில் யாது?

b. விலங்குகளில் சுற்றோட்ட தொகுதியின் மிகமுக்கியமான பகுதிகளை/அம்சங்களைத் தருக?

2. a. மனிதனில் காணப்படும் குருதிச்சுற்றோட்டத் தொகுதி எது?

b. அதன் சிறப்பியல்புகள் 02 தருக?

3. a. குருதித் திரவவிழையம் என்பது யாது?

b. குருதித் திரவவிழையத்தின் பிரதான கூறு யாது?

c. குருதியில் ஒட்சிசன் எவ்வாறு கொண்டு செல்லப்படுகின்றது?

4. குருதிச்சிறுதட்டு எண்ணிக்கையைக் கொண்டு நிதானிக்கப்படத்தக்க நுளம்பால் காவப்படும் நோயைப் . பெயரிடுக.

### கட்டுரை வினாக்கள் (பகுதி B)

(01) தற்கால உலகில் வர்த்தக ரீதியில் செயற்கையாகத் தாவரங்களை இனப் பெருக்கஞ் செய்யும் போது, இழையவளர்ப்பு அதிகளவில் பயன்படுத்தப்படு கின்றது.

1. a. இழையவளர்ப்பில் பயன்படுத்தப்படும் போசனை ஊடகத்தில் இருக்க வேண்டிய இரு பதார்த்தங்களை தருக?
   b. இழையவளர்ப்பின் போது இழையப்பகுதிகள் வளர்வதற்கு கிருமியழித்த சூழல் நிலமைகள் கட்டாயம் பயன்படுத்தப்படுகின்றன. இதற்குரிய காரணத்தை குறிப்பிடுக?
   c. இழையவளர்ப்பின் இரு அனுகூலங்களைக் குறிப்பிடுக?

2. சில தாவரங்களில் இருக்கும் நிலக்கீழ் தண்டுகளின் மூலம் இனப்பெருக்கத் தொழில்கள் நிறைவேற்றப்படுகின்றன.
   a. இத்தகைய நிலக்கீழ்த் தண்டுகள் இருக்கும் இரு தாவரங்களை பெயரிடுக?
   b. இனப்பெருக்கம் தவிர இத்தகைய தண்டுகள் மூலம் நிறைவேற்றப்படும் வேறோரு முக்கிய தொழிலைக் குறிப்பிடுக?

3. சூலின் கருக்கட்டலின்றி செயற்கையாக பூவில் இருந்து கனி கொள்ளல் கன்னிக்கனியமாதல் எனப்படும். இவ்வாறு உருவாகும் பழங்களில் ஒரு பிரதிகூலம் உண்டு. அதனைக் குறிப்பிடுக?

4.
   a. இவ்வுருவில் காணப்படும் வித்து எம்முறை முறைக்கேற்ப பரம்பலடை வதற்கு இசைவாக்கம் அடைந்துள்ளது?
   b. மேலே (a) இல் நீர் குறிப்பிட்ட முறைக்கேற்ப பரம்பலடைவதற்கு வித்துக்களில், பழங்களில் இருக்கவேண்டிய இரு சிறப்பியல்புகளைத் தருக?


5. புவிக்கோளின் மிகவும் சிறிய பிரதேசத்திற்கு வரையறுக்கப்பட்ட உயிர்க் கோளத்தினுள்ளே பல்வேறு ஒழுங்கமைப்பு மட்டங்கள் ஒழுங்காக அமைந் துள்ளன.
a. புவிக்கோளத்தின் எந்தப்பகுதி உயிர்கோளம் என அழைக்கப்படுகிறது?
b. அங்கிக் குடித்தொகை என்பதனை விளக்குக?
c. சிறிய ஒரு நன்னீர்க் குளத்தை' அண்டிக் காணத்தக்க நான்கு இணைப்புக் களைக் கொண்ட ஓர் உணவுச் சங்கிலியை எழுதுக?

(02) 2 மறுவலு உள்ள ஒரு மின்கேத்தலில் $20^0C$ இல் 2kg நீர் உள்ளது. நீரின் தன்வெப்ப கொள்ளளவு $4200jkg^{-1} C^{-1}$ ஆகும்.

1. நீர் கொதிக்கும் வெப்பநிலையாகிய $100^0C$ வரைக்கும் நீரைவெப்பமாக்கும் போது கேத்தலில் உள்ள நீரின் மூலம் உறுஞ்சிக்கொள்ளப்படும் வெப்பத்தின் அளவைக் காண்க?

2. நீர் கொதிக்கும் வரைக்கும் வெப்பமாக்குவதற்கு 6 நிமிடங்கள் எடுக்குமெனில் வெப்பமாக்கும் சுருளின் மூலம் பிறப்பிக்கப்படும் வெப்பத்தின் அளவைக் காண்க?

3. நீரைக் கொதிக்க வைக்கும் வரையில் வெப்பமாக்கும் போது மின்கேத்தல் வெப்பமாவதற்கு செலவிடப்படும் வெப்பத்தின் அளவினதும் கேத்தலில் இருந்து சுற்றாடலுக்கு ஏற்பட்ட வெப்ப இழப்பினதும் மொத்தம் யாது?



4. கொதிக்க வைப்பதற்காக நீருக்கு வழங்கப்படும் சக்தி சாதாரண அடுப்பிலா மின்கேத்திலா வினைத்திறனாக பயன் படுத்தப்படுகின்றது. காரணம் தருக?

(03)

1. இரசாயனத் தாக்கம் ஒன்றின் வீதத்தை ஊக்கி ஒன்றினைப்பயன்படுத்துவதன் மூலம் மாற்ற முடியும். தாக்கவீதத்தை மாற்றுவதற் காக கையாளக்கூடிய வேறு இரண்டு முறைகளைத் தருக?
2. ஆய்வுகூடத்தில் பொற்றாசியம் குளோரேற்றை சூடாக்குவதன் மூலம் ஒட்சிசன் வாயு தயாரிக்கப்படுகின்றது. மங்கனீசுரொக்சைட்டு சேர்ப்பதனால் அத்தாக்கம் மிக விரைவாக நடைபெறும் என்பதனை ஒரு பரிசோதனை மூலம் சுருக்கமாகத் தருக?
3. செப்பு நைத்திரேற்று வெப்பமேற்றப்படும் போது பெறப்படும் வாயுவொன்றி னால் நிரப்பப்பட்ட ஒன்றை ஒன்று ஒத்த இரண்டு பரிசோதனைக்குழாய்கள் மூடப்பட்டு ஒரு பரிசோதனைக்குழாய் அறைவெப்பநிலையில் உள்ள நீரிலும் மற்றையது ஏறத்தாழ 343K வெப்பநிலையில் உள்ள நீரிலும் வைக்கப் பட்டுள்ளன.
a. சிறிது நேரத்தின் பின்னர் அப்பரிசோதனைக்குழாய்களில் அவதானிக்கக்கூடிய வேறுபாடுகள் யாதாக இருக்கும்?
b. வெப்பநிலை அதிகரிக்கும் போது கபில நிறமானதற்கு காரணம் என்ன?
c. அம் மாற்றத்திற்கு ஈடுசெய்யப்பட்ட சமன்பாட்டை எழுதுக?
d. முசலம் ஒன்றின் மூலம் மேற்படி குழாய் ஒன்றினுள் நிலவும் அமுக்கத்தை அதிகரிப்பின் நீர் எதனை அவதானிக்ககூடியதாக இருக்கும்?

## கர்நாடக சங்கீதம்

### தியாகராஜர்

நாரதர் துறவி வேடத்தில் தியாகராஜர் வீட்டிற்கு வந்து அவர் இசையைக் கேட்டு பின் "ஸ்வரார்ணவம்" "நாரதீயம்" மற்றும் பல கிரந்தங்களை இவரிடம் வைத்து விட்டு மதிய உணவிற்கு திரும்பி வருவதாகக் கூறிச் சென்று விட்டார். இவர் வராது போகவே தியாகராஜர் ஏமாற்றமடைந்தார். அன்று அவர் கனவில் நாரதர் தோன்றிட தானே காலையில் வந்த துறவி என்று கூறி, கிரந்தங்களை பரிசாக ஏற்குமாறும் கூறினார். தியாகராஜர் கிரந்தங்களினால் பயனுற்று விஜய ஸ்ரீ ராகத்தில் "வரநாரத" என்ற க்ருதி, தர்பார் இராகத்தில் நாரத குருஸ்வாமி க்ருதி, கானடா இராகத்தில் 'ஸ்ரீ நாரத நாத ஸரஸீநஹ' என்ற க்ருதி, அடானா இராகத்தில் 'நாரத கான போல' என்ற க்ருதி முதலியவற்றை செய்து தன் நன்றியைத் தெரிவித்தார்.

ஒரு முறை தஞ்சை மஹாராஜா தன் மீது பாடல் இயற்றுமாறும் அதற்கு நிறைய தங்கத்தைத் தருவதாகவும் தியாகராஜரிடம் வேண்டுகோள் விடுத்தார். தியாகராஜர் இதை மறுத்து 'நரஸ்துதி செய்யேன்' என்று கூறி கல்யாணி இராகத்தில் 'நிதி சால ஸுகடள' என்னும் க்ருதி இயற்றினார். இவருடைய சகோ தரர்கள் மகாராஜாவின் வேண்டுகோளை தியாகராஜர் ஏற்காததால் கோபமடைந்து தியாகராஜருடைய ஸ்ரீ ராம விக்ரஹத்தை காவிரி ஆற்றில் எறிந்து விட்டார்கள். தியாகராஜர் வருத்தமுற்று 'எந்துதாகி நாடோ' என்று தோடி இராகத்திலும் 'நேறெந்து வெதகுதுரா' என்று கர்நாடக பெஹாக் இராகத்திலும் 'ஏபாபமு ஜெஸிதினோ' என்று அடானா இராகத்திலும் பாடினார். கொண்டு பிலஹரி இராகத்தில் 'கனு கொண்டினி' எனும் க்ருதியையும், ஆஹிரி இராகத்தில் 'சல்லரே' எனும் க்ருதி யையும் இயற்றிப் பாடினார்.

இவருக்கு ஸீதாலட்சுமி எனும் மகள் பிறந்தார். இவர் ஒரு முறை திருப்பதிக்கு தரிசனம் செய்ய சென்றபோது திரை மூடியிருந்ததால் 'தெர தியகராதா' எனும் கெளிபந்து இராகக் க்ருதியை இசைக்க திரை விலகியது. பின் 'வேங்கடய நின்னு' என்னும் மத்யமாவதி இராக பாடலை இயற்றி இசைத்தார். ஸ்ரீரங்கத்திற்கு விஜ யம செய்து 'ஓரங்கஸாயி' - 'ராஜீவெடல' ஜீதாமுராரே' எனும் க்ருதிகளை ஸ்ரீரங்க நாதர் மேல் இயற்றினார்.

வாலாஜாபேட்டை, புத்தூர், சோளிங்கர், லால்குடி சென்னை முதலிய ஊர்க ளுக்குச் சென்று சென்னையில் பந்தர் தெருவில் உள்ள கோவூர் சுந்தரேச முதலி யாரின் விருந்தினராகத் தங்கி கௌரவிக்கப்பட்டு அங்கு தேவகாந்தாரி இராகத்தை 8 நாட்கள் இசைத்தார். பின் திருவல்லிக்கேணி பார்த்தஸாரதி கோவிலுக்குச் செனறு காபி இராகத்தில் 'சாரி வெடலின பார்த ஸாரதிட' எனும் க்ருதியை இசைத் தார். பின் தன் சீடரான வீணை குப்பய்யரின் வேணடுகோளுக் கிணங்க திருவொற்றி யூர் சென்று அங்கு தங்கி 'திருவொற்றியூர் பஞ்சரத்னம்' என்னும் கிருதிகள் இயற்றினார். பின்னர் கோவூர் சென்று அங்குள்ள ஸுந்தரேஸ்வரர் மீது பஞ்சரத்ன க்ருதிகள் இயற்றினார். கோவூர் பஞ்சரத்ன க்ருதிகள் என அழைக்கப்படும்.

மற்றும் லால்குடி பஞ்சரத்னம், ஸ்ரீரங்க பஞ்சரத்னம் ஆகிய சேஷத்ர கிருதி களையும் இயற்றினார். உயர்ந்த தாது செறிவும், ஸாகித்ய பாவமும் உள்ள கனராக பஞ்சரத்னம் என்னும் தொகுதி க்ருதியை இயற்றினார். தியாகராஜர் கோவிந்தாச்சார்யரின் 72 மேளகர்த்தா பத்ததியை பின்பற்றி சுமார் 25, 000 உருப்படிகளை இயற்றினார். பல புதிய இராகங்களை ஏற்படுத்தி பல அபூர்வ இராகங்களிலும் க்ருதிகளை இயற்றினார். இவருடைய அங்கித முத்திரை "தியாகராஜ, தியாகராஜனுத, தியாகராஜவினுத" என்பதாகும்.

மேலும் ப்ரகலாத பக்தி விஜயம், ஸீதாராம் விஜயம், நௌகா சரித்திரம் முதலிய இசைநாடகங்களையும், உத்ஸவ சம்பிரதாய கீர்த்தனைகள், திவ்யநாம கீர்த்தனைகள் முதலியவற்றையம் இயற்றியுள்ளார். மேலும் ஸதராகரத்ன மாலிகா என்ற 100 இராகங்களில் அமைந்த 100 பாடல்களின் தொகுப்பை இயற்றியுள்ளார். இவருடைய இசை நாடகங்கள் கீர்த்தனைகள், க்ருதிகள், தருக்கள், கத்யங்கள், பத்யங்கள், உத்பலமாவாக்கள், த்விபதிகள் போன்ற இசை வகைகளையும் தர்ணிகைகள் என்ற இலக்கிய உருவகைகளையும் கொண்டவை ஆகும்.

இவருடைய கிருதிகள் ஸங்கீத பாவம், பக்தி பாவம் நிரம்பியவை. இவருடை க்ருதிகளை திராட்சை ரஸத்திற்கு ஒப்பிடுவர். பின்னர் மனைவி இறந்ததும் சன்யாஸ வாழ்க்கை வாழ்ந்து ஸ்ரீராமரிடம் தன்னை அவருடைய பாதார விந்தங்களில் சேர்த்துக் கொள்ளுமாறு முறையிட்டார். ஒருநாள் ஸ்ரீராமர் கனவில் தோன்றி "இன்னும் பத்து மாதத்தில் என்னை வந்தடைவாய். உனக்கு மறுஜென்மம் உள்ளது" எனக் கூற தியாகராஜர் தனக்கு மறு ஜென்மம் வேண்டாம் என்னை தங்கள் பாதாரவிந்தங்களில் சேர்த்துக் கொள்ளுங்கள் என முறையிட்டு 'ஷீணமை திருக' என்ற முகாரி இராகப்பாடலையும் 'மோஷமு கலதா' என்ற சாரமதி இராகப் பாடலையும் ஸ்ரீராமரைப் பிரார்த்தித்து இசைத்தார்.

பின்னர் 10 மாதத்தால் இறைவனடி சேர்ந்தார். இவருடைய விருப்பப்படி காவேரி நதிக்கரையில் குருஸொண்டி வேங்கடரமணய்யா ஸமாதி அருகே பாவா ஸ்வாமி படித்துறையில் அடக்கம் செய்யப்பட்டது. இதன்பின் 1925 ஆம் ஆண்டு தியாகராஜருக்கு ஒரு கோவில் கட்டப்பட்டது. வருடாவருடம் அங்கு புஷ்யபகுள பஞ்சமியின்போது தியாகராஜ ஆராதனை நடந்து வருகிறது.

இவருடைய சிஷ்யர்கள்...

வீணை குப்பையய்யர்
ஸீப்பராம பாகவதர்
உமையாள்புரம் க்ருஷ்ணபாகவதர்
தில்லை ஸ்தானம் ராமய்யரங்கர்

இவர் இயற்றிய உருப்படி ...

| | | |
|---|---|---|
| ஸங்கீத ஞானமு | - தன்யாஸீ | - ஆதி |
| நாதஜீதா | - ஆரபி | - ரூபகம் |
| எவரிமாட | - காம்போஜி | - ஆதி |

# யாழ்ப்பாணம் மாநகர சபையின் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்-2013

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01 ஆம் திகதி முதல் மாநகரசபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி பதவியணிகளில் உள்ள வெற்றிடங்களின் விபரங்களிற்கமைய, கௌரவ ஆளுநரினால் அனுமதிக்கப்பட்ட சேவைப்பிரமாணக்குறிப்பின் பிரகாரமும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2013.02.08 ஆம் திகதிய NP/05/01/GE6/UNS/RQ ம் இலக்க கடிதத்திற்கமைவாகவும், கீழ் குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக குறிப்பிட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிப்பெயர் | பதவி இலக்கம் |
|---|---|
| சுகாதார தொழிலாளி வகுப்பு III | 01 |
| வேலைத்தொழிலாளி வகுப்பு III | 02 |
| நகரமண்டப பாதுகாவலர் வகுப்பு III | 03 |
| நூலக உதவியாளர் வகுப்பு III | 04 |
| மேசன் வகுப்பு III | 05 |
| திருத்துனர் வகுப்பு III | 06 |
| இயந்திர இயக்குநர் வகுப்பு III | 07 |
| தச்சுத்தொழிலாளி வகுப்பு III | 08 |
| சாரதி வகுப்பு III | 09 |

**சேவை நிபந்தனைகள்**

1.இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.
2.ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்
3.நியமனம் பெறுபவர்கள் 3 வருட தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத்தகைமைகள்**

1.விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும் அத்துடன் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்..
2.விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித்திகதி 19.11.2013 அன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்களிற்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
3.நன்னடத்தை உடையவராகவும் தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4.தொழில்நுட்பம் சார் சேவைகளிற்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

சபையால் தெரிவு செய்யப்பட்ட நேர்முகப்பரீட்சை குழுவினால் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டதற்கமைவாக கல்வித்தகைமை தொழில் அனுபவம், வேலைமனப்பாங்கு என்பவற்றிற்கு புள்ளிகள் இடப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளிற்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1.யாழ்.மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் ரூபா 250 ஜச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து உரிய விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப படிவத்தை பூரணப்படுத்தி தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.
2. விண்ணப்பப்படிவத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு

**ஆணையாளர், யாழ்.மாநகரசபை, பருத்தித்துறை வீதி, நல்லூர்.** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
4.தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட வேண்டும்.
5.ஆட்சேர்ப்பு திட்ட விதிமுறைகளின் படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென தெரியவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தி வைக்கப்படும்.

**விண்ணப்பங்கள்யாவும் விண்ணப்ப முடிவுத்திகதி 19.11.2013 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.**

**பதவி இலக்கம் :** 01 , 02, 03 , 04 ,
**கல்வித் தகைமை :** கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
**சம்பளம் :** 01.01.2013 ஆம் திகதிய ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப்பிரமாண குறிப்பின் படி மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 11730 – 18 x120 – 13890 (PL- 1- 2006 A) ஆகும்

**பதவி இலக்கம் :** 05 , 06, 07 , 08

**கல்வித் தகைமை :**
கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் கல்வி நிறுவனத்தில் ஆறு மாதங்களிற்கு குறையாத குறிப்பிட்ட துறைரீதியான தொழில்சார் கற்கைநெறி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம் :** 01.01.2013 ஆம் திகதிய ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப்பிரமாண குறிப்பின் படி மாதாந்த சம்பள அளவுத்திட்டம் Rs. 12210 – 18x130 - 14550 (PL 2 2006 A) ஆகும்
**பதவி இலக்கம் :** 09
**கல்வித் தகைமை :**1. கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை/தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்கு குறையாத பாரவண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுனர் அனுமதிப்பத்திரத்தை (Class Of Vehicle C,C1) விண்ணப்ப இறுதித்திகதிக்கு மூன்று வருடங்களிற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்.
3. மோட்டார் வாகன சாரதியாக மூ்ன்று வருட அனுபவத்திற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 5 அடி 2 ½ அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
5. விண்ணப்பதாரி இரவு, பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியைக் கொண்டிருப்பதுடன், சிறந்த கண்பார்வையினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
6. பெருந்தெரு விதிமுறை பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
**சம்பளம் :** 01.01.2013 ஆம் திகதிய ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப்பிரமாண குறிப்பின் படி மாதாந்த சம்பள அளவுத்திட்டம் Rs. 12470–18 x130–14810 (PL 3 2006 A) ஆகும்

**மாநகரசபை அலுவலகம்**
**பருத்தித்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.** (C/3188) (2013.10.31)

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

# புலனாய்வாளர் குழு சிறைச்சாலைகளுக்கு நியமனம்

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவில் சேவையாற்றுவதற்காக, மேலும் ஒரு தொகுதியினர் பணியில் இணைத்துக் கொள்ளப்படவிருப்பதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்திரரத்ன பல்லேகம தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பணிகளுக்கு 194 அதிகாரிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதுடன் இவர்களில் 30 பேர் புலனாய்வுப் பிரிவுக்காக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவர்களில் குறைந்த தலா 5 பேர் நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் பணிகளில் அமர்த்தப்பட உள்ளனர்.

சிறைச்சாலைகளில் நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்காக சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவை வலுப்படுத்துவது கட்டாயமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# பிரித்தானிய பிரஜை கடலில் மூழ்கி மரணம்

(கொழும்பு)

காலி, ஹிக்கடுவை பிரதேசத்தில நேற்று முன்தினம் மாலை பிரித்தானிய பிரஜை ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.மேலும் மூன்று பேருடன் இணைந்து கடலில் நீராடச் சென்ற நிலையில் அவர் கடலில மூழ்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாரிய அலையில் சிக்கி அவர் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் பிரதேசவாசிகளின் உதவியுடன் மீட்கப்பட்டுள்ளது.

56 வயதான பிரித்தானிய பிரஜையே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். கே. ஜோன் என்று அடையாளம் காணப்பட்டுள்ள இந்த பிரித்தானிய பிரஜையின் சடலம் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஹிக்கடுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அழகுக் கலை உரிமையாளர்கள் 250 பேருக்கு எதிராக வழக்கு

நாடு முழுவதிலும் தரம் குறைந்த மற்றும் காலாவதியான அழகுசாதனப் பொருட்களை பயன்படுத்தி வந்த் 250 அழகுக்கலை நிலையங்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோரை பாதுகாக்கும் நோக்கில் நாடு முழுவதிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட அழகுக்கலை நிலையங்களில் இந்த திடீர் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டன.

கொழும்பிலுள்ள அழகுக் கலை நிலையங்களுக் கெதிராகவே அதிக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக சுட்டிக் காட்டிய அதிகார சபை தலைவர் ரூமி மர்சூக், அதனைத் தவிர பொலன்னறுவை, கம்பஹா, குருணாகல், மாத்தறை, புத்தளம், நுவரேலியா, யாழ்ப்பாணம், கண்டி, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பல அழகுக்கலை நிலையங்களும் முற்றுகையிடப்பட்டதாகக் கூறினார்.

அழகுக்கலை பற்றிய ஓரளவு அறிவைப் பலப்படுத்தி பலர் தரம் குறைந்த மற்றும் காலாவதியான அழகுசாதனப் பொருட்களை பயன்படுத்தி பணம் சம்பாதிப்பதாக கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு முறைப்பாடு கிடைத்தது.இதனைத் தொடர்ந்தே அமைச்சரின் பணிப்புரையின் பேரில் இந்த சுற்றி வளைப் புகள் முன்னெடுக்கப்பட்டதாக வும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, தொடர்ந்தும் இந்த சுற்றி வளைப்புகள் முன்னெடுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.







## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................
முகவரி :- ........................................
பிறந்த ஆண்டு :- ........................................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

........................................
பெற்றோர் கையொப்பம்

# அமெரிக்க இராஜாங்கச் செயலர் எகிப்துக்கு திடீர் விஜயம்

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி எகிப்திற்கு முன் அறிவிப்பு அற்ற விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

மத்திய கிழக்கு, கிழக்கு ஐரோப்பா மற்றும் வடஆபிரிக்க நாடுகளுக்கான ஒன்பது நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் முதல் கட்டமாக ஜோன் கெரி கைய்ரோவைச் சென்றடைந்துள்ளார். கடந்த ஜுலை மாதம் பதவி கவிழக்கப்பட்ட மொஹமட் மூர்சிக்கு எதிரான வழக்கு விசாரணை நடைபெறவுள்ள நிலையில், அவரின் இந்த விஜயம் இடம்பெற்றுள்ளது.

நாட்டின் அரசியல் அதிகார மாற்றம் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள இருதரப்பு உறவுகள் குறித்து இராணுவ பின்புலத்துடனான அரசாங்கத்துடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதனிடையே மொஹமட் மூர்சியின் வழக்கு விசாரணைக்கும் ஜோன் கெரியின் விஜயத்திற்கும் எந்தவித தொடர்பும்



இல்லை என அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர். மொஹமட் மூர்சி பதவி கவிழக்கப்பட்ட பின்னர் எகிப்திற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

# சுற்றுலா படகு கவிழ்ந்தது; தாய்லாந்தில் 6 பேர் பலி



தாய்லாந்தில் சுற்றுலா படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 6 பேர் மூழ்கி பலியாயினர். தாய்லாந்தில் பட்டயா கடற்கரை நகருக்கு 100 சுற்றுலா பயணிகளை ஏற்றி வந்த படகு கோலர்ன் என்ற தீவின் அருகே நேற்று முன்தினம் மாலை இயந்திர கோளாறு ஏற்பட்டு கடலில் மூழ்கியது.

இதுபற்றிய தகவல் அறிந்ததும் விரைந்து வந்த மீட்பு படையினர் கடல் நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த சிலரை மீட்டனர். பலரை மீட்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன, இதுவரை 6 சடலங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## உலகச் செய்திகள்

# திருமணவிருந்தில் துப்பாக்கிச் சூடு; நைஜீரியாவில் 30 பேர் பலி

நைஜீரியாவில் திருமண விருந்தில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கி சூட்டில் 30 பேர் பலியாகினர்.நைஜீரியாவல் 'போஹோ காரம்' என்ற அமைப்பை சேர்ந்த தீவிரவாதிகள் அரசுக்கு எதிராக போராடி வருகின்றனர்.



வடமேற்கு நைஜீரியாவில் உள்ள போர்னோ உள்ளிட்ட மாகாணங்களில் இவர்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

இப்பகுதியில் வாழும் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை கொன்று வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் போர்னோ மாகாணத்தில் திருமண விருந்தில் தீவிரவாதிகள் தாக்கினார்கள். அப்போது விருந்தில் பங்கேற்றவர்கள் மீது சர மாரியாக துப்பாக்கிசூடு நடத்தினர்.

அதில் மணமகன் உட்பட 30 பேர் பலியாகினர். பலர் படுகாயம் அடைந்தனர். இச்சம்பவம் பாமா மற்றும் பங்கி நகருக்கு இடையேயுள்ள ஒரு கிராமத்தில் நடந்தது. இச்சம்பவத்துக்கு போகோ ஹாரம் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர்.


கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு இப்பகுதியில் உள்ள தமத்ரு நகரில் பொலிஸாருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே நீண்ட நேரம் துப்பாக்கி சண்டை நடந்தது. அதில் பலர் உயிரிழந்தனர்.

# குண்டை செயலிழக்க வைக்க 20 ஆயிரம் பேர் வெளியேற்றம்

இரண்டாம் உலகப்போர் காலத்து குண்டை செயலிழக்க வைக்கும் முயற்சியாக - 20 ஆயிரம் மக்கள் ஜேர்மனியில் வெளியேற்றப்பட்டு வருகின்றன.

ஜேர்மனி தலைமையேற்று நடத்திய இரண்டாம் உலகப் போர்(1939 - 1945) காலத்தில் பயன்படுத்தப்பட்ட மற்றும் பதுக்கி வைக்கப்பட்ட குண்டுகள் ஜேர்மனி நாட்டின் பல பகுதிகளில் அவ்வப்போது கிடைத்து வருகின்றன.

சில வேளைகளில் அதிக எடை கொண்ட இராட்சத குண்டுகளும் கிடைப்பதுண்டு. அவ்வகையில், வெடிக்காமல் இருக்



கும் (1800 கிலோ) குண்டு ஜேர்மனியின் முக்கிய தொழில் பிரதேசமான ருர் மாகாணத்தில் சமீபத்தில் கிடைத்தது.

இந்தக்குண்டை செயலிழக்க வைக்கும் முயற்சியில் வெடி குண்டு நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர். குண்டுகளை செயலிழக்க வைக்கும் முயற்சி "கரணம் தப்பினால் மரணம்" என்பது போல் ஆபத்தானது என்பதால் டார்ட்மண்ட் நகரில் வசிக்கும் சுமார் 20 ஆயிரம் மக்களை பாது காப்பு நடவடிக்கையாக அதிகாரிகள் வெளியேற்றியுள்ளனர்.

# திருநங்கை அழகுராணி



உலக திருநங்கையர் அழகு ராணியாக பிரேசில் திருநங்கை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உலக ஆணழகன் போட்டி, உலக அழகி போட்டி போன்றே சில ஆண்டுகளாக திருநங்கையர்களுக்கான உலக அழகு ராணி போட்டியும் நடைபெற்று வருகிறது.

அவ்வகையில், தாய்லாந்து தலைநகர் பாங்கொங்கில் 9ஆவது உலக திருநங்கையர் அழகு ராணி போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.

அமெரிக்கா, பிரேசில், ஜப்பான், தென் கொரியா ஆகிய 16 நாடுகளைச்சேர்ந்த திருநங்கைகள் இந்த போட்டியில் பங்கேற்றனர். அ:வர்களது உடல் மற்றும் முக வசீகரம், அறிவுக் கூர்மை ஆகியவற்றின் அடிப்படையில் பட்டத்துக்குரியவர் தேர்வு செய்யப்பட்டார். இதில் பிரேசில் நாட்டை சேர்ந்த மார்கெலோ ஓஹியா(வயது-18) அழகு ராணியாக முடிசூட்டப்பட்டார். 10 ஆயிரம் டொலர் ரொக்கப் பரிசு மற்றும் தாய்லாந்தின் உல்லாச நகரமான பட்டயாவில் உள்ள விடுதியில் ஓராண்டு வரை இலவசமாக தங்கும் அனுமதி போன்றவையும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

# பெண்களின் உடை அழகை வர்ணிப்பவர்கள் கவனத்திற்கு!

நியூசிலாந்தில் பெண் ஒருவரது உடையை புகழ்ந்த நபர் கொலை செய்யப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவை சேர்ந்த தருண் அஸ்தானா என்பவர் நியூசிலாந்தின் ஆக்லாந்து நகரில் பயிற்சி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார்.சம்பவ தினத்தன்று மாலையில் ஹோட்டலுக்கு சென்றுள்ளார், அங்கே ஒரு பெண் தனது காதலனுடன் வந்திருந்தார்.

அந்தப்பெண் அணிந்திருந்த உடை நன்றாக இருந்ததால், அவரை பாராட்டியுள்ளார் அஸ்தானா. இதனைப்பார்த்து கொணடிருந்த காதலனுக்கு கோபம் வரவே, அஸ்தானாவை சரமாரியாக தாக்கியுள்ளார்.இதனால் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது, படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்த்தனர்.இருப்பினும் சிகிச்சை பலனளிக்காததால் பரிதாபமாக உயிரிழந்தார், இதனையடுத்து குறித்த காதலரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நியூசிலாந்து வாழ் தமிழர்கள் இடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தரை-கடலில் ஓடும்கார் மூலம் உலகைச் சுற்றிவர முயற்சி



கடல் மற்றும் தரையில் ஓடும் நவீன கார் மூலம் 60 ஆயிரம் கி.மீற்றர் பயணித்து உலகை சுற்றும் முயற்சி தொடங்கப்பட்டுள்ளது.

வட ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான எஸ்டோனியாவை சேர்ந்த மெய்ட் நிப்சன்(வயது- 44) என்பவர் இந்த காரின் மூலம் கடல் மற்றும் தரை வழியாக 60 ஆயிரம் கி.மீற்றர் பயணித்து 9 மாதங்களில் உலகை சுற்றிவரும் சாகச பயணத்தை கடந்த சனிக்கிழமை தொடங்கினார்.

4 x 4 மீற்றர் பரப்பளவு கொண்ட இந்த கார், நீரில் பயணிக்கும் போது 10 மீற்றர் உபஇணைப்பு கொண்ட படகாக மாறிவிடும். இதற்காக சுமார் 200 மணி நேரம் கடலில் ஒத்திகை பயணத்தை நடத்தியுள்ள மெய்ட் நில்சன் நேற்று முன்தினம் டெய்லின் இருந்து தனது சாகச பயணத்தை தொடங்கினார்.

எஸ்டோனியா, லட்வியா, விதுவேனியா, போலாந்து, ஸ்லோவேக்கியா, ஸ்லோவேனியா, இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின், மொராக்கோ, மவுரிடானியா, செனெகல், வெட்டே வளைகுடா, பிரேசில், அர்ஜெண்டினா, சிலி, பெரு, கொலம்பியா, பனாமா, நிகாராகுவா, ஹொன்டுராஸ், கவுடெமாலா, மெக்சிக்கோ, அமெரிக்க, கனடா மற்றும் ரஷ்யா வரியாக 60 ஆயிரம் கி.மீற்றர் தரை வழியாகவும், கடல் மற்றும் ஆறுகள் மார்க்கமாக சுமார் 9 மாதங்கள் பயணித்து மீண்டும் அவர் எஸ்டோனியா வந்தடைவார் என எதிர்பார்க்கப்படுகிறது

# ஆசியா - ஐரோப்பாவை இணைக்கும் துருக்கியின் சுரங்க ரயில் பாதை

ஆசியாவையும், ஐரோப்பாவையும் இணைக்கும் விதமாக, துருக்கியில், கடலுக்கடியில் செல்லும், ரயில் சேவை ஆரம்பிக்கப் படவுள்ளது. துருக்கி நாட்டில், "மர்மரே" என்று பெயரிடப்பட்டுள்ள, இந்த ரயில், இரண்டு தீவுகளை இணைக்கிறது் இந்த ரயில் சேவை மூலம், ஒவ்வொரு மணி நேரத்திற்கும், 75 ஆயிரம் பயணிகள் செல்ல முடியும். நாள் முழுவதும், 10 இலட்சம் பேர் பயணிக்க முடியும்.

கடந்த வாரம் நடந்த ஆரம்ப விழா வில் பங்கேறற, துருக்கி அதிபர் அப் துல்லா குல், பிரதமர் ரீசேப் தயிப் எர் டோகன், ஜப்பான் பிரதமர் ஷிங்ஜோ அபே உள்ளிட்டோர், இந்த சுரங்க ரயிலில் பயணித்தனர்.துருக்கி, குடியரசாகி, 90 ஆண்டுகள் நிறைவு பெற்றதை கொண் டாடும் வகையில், இந்த ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



கடலுக்கடியிலான ரயில் சேவையால், இஸ்தான்புல்லில் போக்குவரத்து வசதி களை அதிகரிக்க முடியும் என் றும், ஓரிடத்தில் இருந்து மற் றொரு இடத்திற்கு, 4 நிமிடத் தில் சென்ற டைய முடியும், என் றும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கடலுக்கடியில், 13.6 கி.மீ., நீளம், 1.4 கி.மீ., ஆழம்,55 மீற்றர் சுற்றளவு கொண்ட, ரயில் பாதை அமைக்கும் பணி, கடந்த 2004ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது. ஆனால், அகழ்வாராய்ச்சி காரணமாக, இப்பணியில் தாமதம் ஏற்பட்டது. ரயில் பாதை அமைப்பதற்கான மொத்த செலவில், நான்கில் ஒரு பகுதி நிதியை, ஜப்பான் வழங்கியுள்ளது.

# கைப்பணித்துறை அபிவிருத்தி; கொழும்பில் சர்வதேச மாநாடு

(கொழும்பு)

தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் பல கலந்து கொள்ளும் கைப்பணித்துறை சார்ந்த மாநாடு ஒன்று நேற்று கொழும்பில் இடம்பெற்றது.

கைப்பணித்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் மேற்படி மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தெங்கு தும்பு மற்றும் துகழ்கள் சார்ந்த மெருகூட்டப்பட்டதும் பெறுமதி சேர்க்கப்பட்டதுமான கைப்பணித்துறை சார்ந்த மாநாடு நேற்றுக் காலை நீர் கொழும்பு, ஜெட்வின் ஹோட்டல் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவும், தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஸ்பகுமாரவும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்ட இந்நிகழ்வில் தன்சானியா, இந்தியா, இலங்கை, பிரேசில், இத்தாலி, மலேசியா, இந்தோனேசியா, நைஜீரியா, பிலிப்பைன்ஸ், சீனா, கொரியா, தாய்லாந்து உட்பட பல நாடுகளைச் சேர்ந்த துறை சார் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தெங்கு அபிவிருத்தி தொடர்பில் திறைசேரியின் பிரதி செயலாளர் கலாநிதி பீ.எம்.எஸ். படகொடவால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன், தெங்கு தும்பு மற்றும் துகழ்கள் சார்ந்த கைப்பணித்துறை வளர்ச்சி தொடர்பில் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிமல் சோமவீர உரை நிகழ்த்தினார்.

நிகழ்வில், பிரதி அமைச்சர்களான விக்டர் அன்ரனி பெரேரா, லக்ஸ்மன் வசந்த பெரேரா உட்பட அமைச்சர்களின் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# பயன்மிக்க பழ மரக்கன்றுகள் தீவகத்தில் விநியோகம்

திவிநெகும திட்டத்திற்கு அமைவாக வேலணை பிரதேச செயலர் பிரிவில் இருக்கின்ற அனைத்து மக்களும் பயன் பெறத் தக்கதான முறையில் வேலணை பிரதேச செயலர் காரியாலயத்தில் வைத்து மக்களுக்கு மா, எலுமிச்சை, தோடை, கொய்யா போன்ற பயன்தருகின்ற மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு நேற்று பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷனினால் ஆரம்பித்து வைக்கப் பட்டதையடுத்து வேலணைப் பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கிய அனைத்து கிராம அலுவலர் காரியாலயங்களிலும் வைத்து அந்தந்தப் பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. (05)

## மாநாட்டில்...

அந்தக் காட்சிகளை பார்க்கவே முடியாது. அந்த அளவுக்கு பயங்கரமாக உள்ளது. இதை வன்மையாக கண்டிக்கிறேன் என்றார்.

பிரதமர் மாநாட்டில் பங்கேற்பதற்கு மத்திய அமைச்சர்களில் ஜி.கே.வாசன், ப.சிதம்பரம் மற்றும் நாராயணசாமி ஆகியோர் தமது எதிர்ப்பை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானிய...

அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஜப்பானிய அரசாங்கத்திற்கு அறிக்கையிடும் முகமாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த குழுவினரே இவ்வாறு யாழ். அரச அதிபரைச் சந்தித்து கலந்துயாடினர். நேற்று முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகி சுமார் 45 நிமிடங்கள் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது யாழ். மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கான வீட்டுத் தேவை மற்றும் வாழ்வாதார உதவிகள் குறித்தும் இந்தக் குழுவினரிடம் யாழ். அரச அதிபர் கோரிக்கை விடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் ஜப்பானிய அரசாங்கம் யாழ். மாவட்டத்தில் கடற்றொழில்சார் அபிவிருத்தித்திட்டங்கள் பலவற்றை செயற்படுத்தியதுடன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு புதிய நான்கு மாடி கட்டடத் தொகுதியையும் நிர்மாணித்துக் கொடுத்திருந்தமை இங்கு குறிப் பிடத்தக்கது. (பா)

## சனல் - 4...

ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இந்த காணொளி சம்பந்தமான சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என கேட்டிருந்தது.

இது குறித்து கருத்து வெளியிடும் போதே உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த சிந்தனையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் தான் எமக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் இணக்கப்பாடுகள் உள்ளன. ஏனைய எந்த விடயங்கள் தொடர்பில் பரஸ்பர நிலைப்பாடுகள் இருக்க முடியும். அத்துடன் ஈ.பி.டி.பி.க்கும் எமக்கும் இடையிலான நிலைப்பாட்டில் பாரிய வித்தியாசங்கள் இல்லை.

அமைச்சர் டக்ளஸ் விசாரணை நடத்துமாறு கூறுகிறார். அந்தக் காணொளி போலியானது இல்லையென்றால் மட்டும் விசாரணை நடத்த வேண்டும் என நாங்கள் கூறுகிறோம்.

சனல் - 4 தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பு என்றாலே எமக்கு சந்தேகம் ஏற்படுகிறது. இராணுவம் இது போலியானது என தெரிவித்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியதை காணமுடிந்தது.

அந்த காணொளி போலியானது என்று ஆய்வுகளில் தெரிய வந்தால் அது பற்றி விசாரண்ணகளை நடத்த வேண்டியதில்லை.

அதனை விடுத்து இராணுவத்தினர் அல்லது தனிப்பட்ட இராணுவ வீரருக்கு எதிராக உண்மையில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டால் அது பற்றி விசாரணை நடத்தி இராணுவத்தின் மதிப்பை தற்காத்து கொள்ள வேண்டும் என்றார்.

## அக்கராயன்...

தாய்மார்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து ஐநூறு ரூபா பெறுமதியான முத்திரை சமுர்த்தி திட்டத்தின் கீழ் வழங்க்கப்பட்டு வருகிறது.

இந்த முத்திரைக்கு குறித்த கர்ப்பிணி தாய்மார்கள் தங்கள் பிரதேசங்களில் உள்ள கூட்டுறவுக் கிளைகளில் சத்துணவுப் பொருட்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

அந்த வகையில் கடந்த வாரம் அக்கராயன் பிரதேசத்தில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்ட சத்துணவுத் திட்டத்தின் கீழான முத்திரைக்கு அக்கராயன் பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் அக்கராயன் கிளையினால் விநியோகிப்பட்ட உணவுப்பொருட்கள் அனைத்தும் மிகவும் மோசமாக பாவிக்க முடியாத நிலையில் பழுதடைந்து காணப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அக்கராயன் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முகாமையாளரிடம் பாதிக்கப்பட்டவர்கள் வினவிய போது அந்த பொருட்களையே முத்திரைக்கு விநியோகிக்குமாறு எங்களிடம் வழங்க்கப்பட்டுள்ளதாக முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் எதுவும் செய்யமுடியாத நிலையில் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பழுதடைந்த பயறு, கௌப்பி, கடலை, நெத்தலி கருவாடு, அரிசி என்பவற்றை கோழிகளுக்கும், புறாக்களும் உணவாக வழங்கியதாக அக்கராயன் பிரதேச வறிய குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்கள் தெரிவித்துள்ளனர்.

வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கே சமுர்த்தி உதவித் திட்டங்கள் வழங்கப்படுகிறது. அதிலும் அந்த குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படுகின்ற பொருட்கள் தரமானதாக இருக்கவேண்டும் என தெரிவிக்கும் பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர், தன்னிடமும் பாதிக்கப்பட்டுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் மேற்படி பழுதடைந்த பொருட்களை காட்டி முறையிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (29)

# அமைச்சர்கள், எம்.பி.க்களின் வெளிநாட்டுப் பயணத்திற்கு தடை

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் மாநாடு, வரவு செலவுத் திட்டம் என்பன நடைபெறவுள்ளதால், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் ஆளும் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆளும் கட்சியின் அலுவலகம், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாடு எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடைபெறும்.

இதனையடுத்து 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 21ம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளார்.

வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதங்கள் டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

அதேவேளை மேற்படி இரண்டு மாதங்களில் அமைச்சுக்களின் செயலாளர் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோரும் வெளிநாடு செல்வதற்கு அரசாங்கம் தடைவிதித்துள்ளது.

## கொழும்பில்...

எங்களுடைய கல்வித்தராதரங்கள் நாங்கள் பார்த்த தொழில்கள் அனைத்தையும் எழுதிக் கொடுத்தோம். பிறகு பத்திரிகையில் பார்த்தோம் என்னை உள்ளூராட்சி அமைச்சுக்கும், திருவாளர் பசுபதிப் பிள்ளையை மின்சார இணைப்புக்கும் நியமித்திருக்கிறார்கள். இவ்வாறே அனைவருக்கும் பொறுப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

இந்தப் பொறுப்புக்களை கொடுப்பதற்கு முதல் இந்த 25 பேரையும் அவர்கள் ஒன்றும் கேட்கவும் இல்லை. இது தொடர்பாக கதைக்கவும் இல்லை. எங்களுக்கு அந்த துறையிலே என்ன ஆற்றல் இருக்கின்றது. என்ன தகுதி இருக்கின்றது. அவற்றை நாம் எவ்வாறு கொண்டு செல்வோம். எங்களிடத்தில் இந்தப் பொறுப்பை தந்திருக்கின்றீர்கள். இப்பொழுது உதாரணத்திற்கு உள்ளூராட்சி அமைச்சை எனது பொறுப்புக்குத் தந்திருந்தால் உள்ளூராட்சி அமைச்சுக்குரிய செயலாளருக்கு என்னைத் தெரியாது.

உள்ளூராட்சி ஆணையாளருக்கு எங்களைத் தெரியாது. நாங்கள் சில நேரம் அவர்களுடைய சபைக்குப் போய் ஏதாவது ஒரு விசயத்தைக் கேட்டால் சில நேரம் அவர் என்னை வெளியால போ என்று சொல்லக்கூடும். அதற்காகத்தான் நாம் அவர்களிடம் சொல்லியிருந்தோம் அந்த குறித்த அமைச்சின் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர்களை அழைத்து அவர்களையும் எங்களையும் அறிமுகப்படுத்தி நாங்கள் இந்த விடயங்களுக்கு வரும் போது அதற்கு அனுசரணையாக நடந்துகொள்ளுமாறு கூறியிருந்தோம். அதற்குச் சொன்னார்கள் இந்த விடயம் தொடர்பாக அடுத்தடுத்த கூட்டத்திலே யோசிப்போம் என்று.

எங்களுக்கு சில பொறுப்புக்கள் தரப்பட்டுள்ளது என்பது உண்மை. ஆனால் முதலமைச்சர் சொன்னார் தற்காலிகமாக நாங்கள் சில பொறுப்புகளைத் தந்திருக்கிறோம் ஒருமாதம் இரண்டு மாதம் போனதற்கு பின்னர் நாங்கள் மீளாய்வு செய்வோம் என்று. அது மீளாய்வு செய்யாவிட்டாலும் பறவாயில்லை.

ஆனால் சம்பந்தப்பட்ட திணைக்கள உத்தியோகத்தர்களை அழைத்து இவர்கள் இந்த பொறுப்புகளுக்கு நியமிக்கப்ட்டிருக்கின்றார்கள். அவர்களோடு கலந்து பேச வேண்டும் என்று ஏனென்றால் இப்பொழுது மாகாண சபைக்கு வருகை தந்திருக்கும் பிரதம உத்தியோகத்தர்கள் அனை வரையும் நேற்றுப் பார்த்தேன் எல்லாருமே எழுபத்தொன்பதையும், எண்பதையும் தாண்டிய வயதையுடையவர்கள்.

முதன் முதலிலே பூநகரியிலே உதவி அரசாங்க அதிபராக இருந்தவர் கிருஸ்ணமூர்த்தி அப்ப நான் அந்த பூநகரியிலேயே எம்.பி.சி.எஸ் பொதுமுகாமையாளராக இருந்தபோது என்னுடைய தலைவர் அவர்தான் அவர் இப்போது மாகாண சபை அசம்பிளியின் செயலாளர். அவருக்கு இப்போது சரியாக எண்பது (80) வயது.

இதேபோல் திருவாளர் அமிர்தலிங்கத்தை உங்களுக்குத் தெரியும் கிளிநொச்சி கச்சேரியிலே காணிக்கு பொறுப்பாக இருந்தவர் அவர் பொதுச்சேவை ஆணைக்குழுவின் ஒரு உத்தியோகத்தர். முதலமைச்சர் கொழும்பில் இருந்து வந்திருக்கிறார் அவர் மேலே படிக்கட்டில் ஏறுவதற்கு ஒருவர்தான் கையைக் கொடுத்து தூக்கி விட்டார்.

இவர்களுக்கு எங்களுடைய வன்னி மக்களினுடைய வாழ்க்கை கிளிநொச்சி மக்களுடைய வாழ்க்கை எங்களுடைய மக்கள் இது வரை காலமும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற பிரச்சினைகள் அவர்களுக்கு வாழ்வாதார பிரச்சினைகள் அடிப்படைப் பிரச்சினைகள் என்பதனைப் பற்றி உணர்வதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை மீது...

இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடைமுறைச் சாத்தியமற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேச ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்த இலங்கையுடன் பொதுநலவாய நாடுகள் அமைப்புச் செயலகம் இணைந்து செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்கம் தொடர்பிலான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இம்முறை அமர்வுகளிலும் கடந்த காலங்களைப் போன்றே அனைத்து தரப்பினரும் பங்கேற்பார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## வலி. வடக்கில்...

எனவே மக்களின் வீடுகள் இடித்தழிக்கப்படுவதனை எதிர்த்தும் அங்கு மக்களை குடியமர்த்தக் கோரியும் வலி. வடக்கு பிரதேசசபையின் ஏற்பாட்டில் பலாலி மயிலிட்டி மீள்குடியேற்றத் தலைவர் குணபாலசிங்கம் தலைமையில் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் தினமும் காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

அத்துடன் பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள வரும் வெளிநாட்டுத் தலைவர்கள் வடக்கிற்கும் விஜயம் செய்யவுள்ள நிலையில் அவர்களது கவனத்தை ஈர்க்கும் வகையிலும் இப்போராட்டம் இடம்பெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியக் கடற்பரப்பில் கைதான இலங்கை மீனவரை விடுவிக்க ஏற்பாடு

கடற்றொழிலாளர்கள் பரிமாற்றத் திட்டத்தின் கீழ், இந்தியாவில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுதலை செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்ததன் பின்னர், இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுவிப்பது தொடர்பில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்படுமென கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசிக்கும் இந்திய மீனவர்களை கைதுசெய்யாது, அவர்களின் படகுகளை மாத்திரம் கைப்பற்றுவதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கைக்கு உரித்தான 200 கடல்மைல் தூரத்தை தாண்டி, சர்வதேச கடற்பரப்பிற்குள் சென்று, மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென கடற்றொழிலாளர்களுக்கு தொடர்ந்தும் அறிவுறுத்தல் விடுத்து வருவதாக கடற்றொழில் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடற்றொழிலாளர்கள் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் தாம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக அவர்களின் உறவினர்கள் குறிப்பிடுகின்றனர்.

எனவே, உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து அவர்களை விரைவில் விடுதலை செய்யுமாறும் உறவினர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை, இலங்கை மீனவர்கள் 97 பேர் தற்போது இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்தது.

இவர்களில் 87 மீனவர்கள் தமிழகத்திலும், 10 மீனவர்கள் ஆந்திர பிரதேசத்திலும் கைதுசெய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## சருகுப் புலி கடித்ததால்; 4 ஆட்டுக்குட்டிகள் பலி

யாழ். புன்னாலைக்கட்டுவன் ஈவினைப் பகுதி பிரதேசவாசி ஒருவரின் 4 ஆட்டுக்குட்டிகள் சருகுப்புலி கடித்து இறந்துள்ளன. மேற்படி பிரதேச வாசிக்கு சொந்தமான 4 ஆட்டுக்குட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மர்மமான முறையில் உயிரிழந்திருந்தன.

இந்நிலையில் மேற்படி ஆட்டுக்குட்டிகளினை பரிசோதனைக்குட்படுத்திய உடுவில் பிரதேச கால்நடை அபிவிருத்தி திணைக்கள மிருக வைத்தியர், மேற்படி ஆட்டுக்குட்டிகள் சருகுப்புலி கடித்ததினாலேயே இறந்துள்ளதாகத் தெரிவித்தார்.

## வருமானத்தைப் பயன்படுத்தி கடனைச் செலுத்தும் அரசாங்கம்

### அநுரகுமார எம்.பி. கூறுகிறார்

அரசாங்கம் வருமானத்தை பயன்படுத்தி கடன் செலுத்தி வருவதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. கடன் மற்றும் வட்டியைச் செலுத்துவதற்காகவே அரசாங்கம் வருமானத்தை பயன்படுத்தி வருகின்றது என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். 2014 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்திலும் இதே நிலைமை நீடிக்க உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் கடன் தொகைகளைப் பெற்றுக் கொண்டு அன்றாட நடவடிக்கைகளை மேற்கொண்டு, வருமானத்தைக் கொண்டு அவற்றைச் செலுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். அரசாங்கம் வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றுக் கொள்ளும் போது பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்படுவதாகவும் அதனை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவே அரசாங்கம் முனைப்பு காட்ட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.



## ஜேர்மன் வாகன விபத்தில் இலங்கை இளைஞர் பலி

ஜேர்மனியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் 21 வயதான இலங்கை இளைஞர் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஜேர்மனியின் ஸ்டுட்காட் பிரதான நகருக்கு அருகில் உள்ள மாக்குரோய்னிகன் என்ற நகரில் வசித்து வந்த அலெக்சாண்டர் பீரிஸ் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் அதிகாலை 9.00 மணியளவில் மோட்டார் சைக்கிளில் நகருக்கு சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த பொழுது பென்ஸ் கார் ஒன்றில் மோதுண்டு உயிரிழந்தார். பென்ஸ் காரை ஓட்டிச் சென்ற 45 வயதான ஜெர்மனிய சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். நீர்கொழும்பை சேர்ந்த டொனால்ட் பீரிஸ் மற்றும் ஆன் நிலாந்தி ஆகியோரின் இளைய புதல்வரான அலெக்சாண்டர் மின் தொழில்நுட்பவியலாளராகத் தனது தந்தையுடன் தொழில் புரிந்து வந்தார்.

## கடலில் மூழ்கி உயிரிழந்த மீனவரின் சடலம் மீட்பு

கிழக்கு அரியாலைக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் படகுடன் கடலில் மூழ்கி காணாற்போன மீனவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன், படகும் கரைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் கொழும்புத்துறையைச் சேர்ந்த கனகலிங்கம் சிவலிங்கம் (வயது-52 என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அரியாலை கிழக்கு கடற்பகுதியில் களங்கட்டித் தொழில் நடவடிக்கையில் வேறு மூன்று கடற்றொழிலாளர்களுடன் இணைந்து இவர் ஈடுபட்டிருந்தவேளை, பிற்பகல் 3.00 மணியளவில் காற்றுடன் மழை பெய்யவே இவர்கள் பயணம் செய்த படகு கடலில் மூழ்கியதாகத் தெரியவருகின்றது. இதன் போது சிவலிங்கத்தைத் தவிர ஏனைய மூவரும் வேறு ஒரு படகில் ஏறிக் கரை திரும்பியதாகவும் இதன் பின்னர் கடலில் மூழ்கி காணாமற்போன சிவலிங் கம் சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன், அவரது படகினையும் உறவினர்கள் மீட்டு நேற்றுக்காலை கொழும்புத்துறை துறைமுகத்துக்கு எடுத்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.பொலிஸாரின் விசாரணைகளையடுத்து பரிசோதனைக்காக சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதுடன், விசாரணை மற்றும் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(பா)

## வயது வந்தவர்கள் இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வயது வந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதன் காரணமாக, எதிர்வரும் 28 வருடங்களில் சமூக ரீதியான பாரிய பல பிரச்சினைகள் தோன்றலாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சமூக பாதுகாப்பு சபையின் தலைவரான சுமணா ஆரியதாச இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

முதியோர் தொகை அதிகரிப்பைப் போல சிறார் தொகையும் வெகுவாக அதிகரித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், தொழில்புரியும் வயதிலுள்ளோரின் எண்ணிக்கை கட்டுப்பாடாகவே உள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 2041 ஆம் ஆண்டளவில், ஐந்து பேரில் நான்கு பேர் வயதானவர்களாக இருப்பர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மாணவிக்கு ஆபாசப் படம் காட்டிய ஆசிரியர் கைது

(மன்னார்)

மன்னார் வட்டக்கண்டல் பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் அங்கு கல்வி பயிலும் 12 வயது மாணவிக்கு ஆபாசப்படம் காட்டியதாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பள்ளமடு பொலிஸாரி னால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஆசிரியர் தனது கையடக்கத் தொலைபேசி மூலம் மாணவிக்கு ஆபாசப்படம் காட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், குறித்த ஆசிரியர் அவ்வாறு செய்திருக்கமாட்டாரெனத் தெரிவித்து கைதான ஆசிரியரை விடுவிக்கக் கோரியும், 80 இற்கும் மேற்பட்ட மாணவர்களும், பெற்றோரும் நேற்று மாலை பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆனால் கைதான ஆசிரியரைத் தம்மால் விடுதலை செய்ய முடியாதெனவும், விசாரணைகளின் பின்னர் இன்றைய தினம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்ததையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (113)

## பொதுநலவாய மாநாட்டால் நாட்டிற்கு பல்வேறு நன்மை

கொழும்பில் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் மாநாட்டின் மூலம் இலங்கைக்கு பல நன்மைகள் கிடைக்கும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைக் கூறினார்.

இலங்கை தொடர்பில் சர்வதேச நாடுகளின மனங்களில் இருக்கும் எதிர்மறையான மனநிலையில் மாற்றங்களை ஏற்படுத்த இந்த மாநாடு ஒரு சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என்றும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.


உலகம் முழுவதும் 73 மில்லியன் வேலைவாய்ப்புக்கள்*

*HiltonWorlwide.com/Youth, World Tourism Organization







உலகெங்கும் சுற்றும் அமெரிக்க உல்லாசப் பயணக் கப்பல்கள்

வேலைவாய்ப்பு உத்தரவாதமான வருமானத்துடன் கூடிய ஹொட்டேல் பயிற்சி

- பயிற்சிக் காலத்தில் ஒரு இலட்சம் வரையான வருமானம்
- பயிற்சி நிறைவில் Work Permit உடன் வேலைவாய்ப்பு
- UK, Australia, Canada, ஐரோப்பிய நாடுகளில் செட்டில் ஆகும் வாய்ப்பு

SPOT ADMISSION
முதல் 10 அனுமதிகளுக்கு
25% கட்டணக்கழிவு

வெளிநாட்டுப் பிரதிநிதி Ryan Kok நேரடியாகப் பங்கேற்கும்
விளக்கக் கருத்தரங்கு & உடனடி அனுமதி
நவம்பர் 08 வெள்ளி மாலை 2மணி யாழ். சிகரம் மண்டபம்
நவம்பர் 09 சனி காலை 9 மணி கிளிநொச்சி சோலைவனம்
பிற்பகல் 2 மணி வவுனியா நெல்லி ஸ்ரார்
நவம்பர் 10 ஞாயிறு காலை 10 & பிற்பகல் 2 மணி கொழும்பு தமிழ்ச்சங்கம்

குறிப்பு: இதுவரை சென்ற 4 அணி மாணவர்களையும் சிகரம் பணிப்பாளர் நேரில் சென்று பார்வையிட்டு அவர்களுக்கான தொழில் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்


வேலைவாய்ப்புடனான பயிற்சியை வழங்கும் SEGi பல்கலைக்கழக பிரதிநிதிகளுடன்


Skills Malaysia INVITE அரசாங்க பிரதிநிதியுடன்


வருமானத்துடனான பயிற்சியை நிறைவுசெய்து வேலைவாய்ப்பை பெறவுள்ள மாணவர்களுடன்

அனுமதி இலவசம்

முற்பதிவுகளுக்கு
077 36 16 798
021 222 00 11

சிகரம்
கல்வி - தொழில் வழிகாட்டி
153, பலாலி வீதி. கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(DAMRO வுக்கு முன்னால்)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 நவம்பர் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.